Registered as a Newspaper

15 APR 1998

# சஞ்சீவி

விலை ரூபா 8-00

மலை: 7 வள்ளுவர் ஆண்டு 2029 பங்குனி 28 சனிக்கிழமை (11 - 04 - 1998) SANJEAVY- Regenerative Tamil Weekly சிகரம்: 45

# ஜூலை 15இல் வாஜ்பாய் கொழும்புக்கு வருகிறார்!

## சந்திரிகாவுடன் விரிவாகப் பேசுவார்

கொழும்பு, ஏப்ரல் 11

இந்தியாவின் புதிய பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாய் எதிர்வரும் ஜூலை 15 ஆம் திகதி கொழும்பு வரவிருக்கின்றார்.

கொழும்பில் நடைபெறும் பத்தாவது 'சார்க்' உச்சி மாநாட்டில் கலந்து கொள்வதற்காகக் கொழும்பு வரும் இந்தியப் பிரதமர், ஸ்ரீலங்கா ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுடன் விரிவாகப் பேச்சு நடத்துவார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இரு நாட்டு உறவுகள் குறித்தும்—

ஸ்ரீலங்கா இனப் பிரச்சினை குறித்தும்—

இரு தலைவர்களும் விரிவாகப் பேச்சு நடத்துவர் என கொழும்பு செய்தி வட்டாரம் ஒன்று தகவல் வெளியிட்டது.

இந்திய மீனவர்கள், ஸ்ரீலங்கா கடற்படையினரால் துன்புறுத்தப்படுவதாகக் கூறப்படுவது பற்றியும்—

கச்சதீவு விவகாரம் குறித்தும்— இரு தலைவர்களும் பேசக்கூடும் என்று மற்றொரு செய்தி தெரிவித்தது.

இந்தியப் பிரதமர் தமது வருகையை உறுதிப்படுத்தியிருப்பதாக கொழும்பில் அதிகாரிகள் தெரிவித்தனர்.

சார்க் மாநாட்டில் கலந்து கொள்ள கொழும்பு வரும் பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீபுடனும்தாம் கொழும்பில் தங்கியிருக்கும் போது பிரதமர் வாஜ்பாய் பேசுவார் எனத் தெரிவிக்கப்பட்டது.

கொழும்பில் நடைபெறும் பத்தாவது 'சார்க்' அமைப்பின் தலைமைப் பதவியை ஸ்ரீலங்கா ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஏற்றுக் கொள்வார் என்பது குறிப்பிடத்தக்கது. (உ-3-7)

## ஒலுமடுவில் நேற்று மோதல்!

வவுனியா, ஏப். 11

''வெற்றி உறுதி'' இராணுவ நடவடிக்கைத் துருப்பினர் நேற்றுக் காலை 10.00 மணிக்கு ஒலுமடுப் பகுதியில் பாதுகாப்பு அரண்களை அமைத்துக் கொண்டிருந்த சமயம் அவர்களுக்கும விடுதலைப்புலிகளுக்கும் இடையில் மோதல் இடம்பெற்றது.

இந்த மோதலில் சிப்பாய் ஒருவர் உயிரிழந்தார்; 4 படையினர் காயம் அடைந்தனர்.

அதேநேரம்—நேற்று முன்தினம் காலை 11·00 மணியளவில் மாங்குளத்துக்கு தென்மேற்கே நிலைகொண்டிருந்த புலிகள் மீது படையினர் மோட்டார் தாக்குதலை நடத்தியதாகவும்—

அதே நாள் பிற்பகல் 3:45 மணியளவில் குஞ்சுக்குளத்துக்கு வடமேற்கே அமைந்துள்ள படையினர் முன்னணி நிலைகள்மீது புலிகள் மோட்டார் தாக்குதலை மேற்கொண்டதாகவும் — பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-3-164)

## சைக்கிள் குண்டு கண்டுபிடிப்பு

மட்டக்களப்பு, ஏப். 11

மட்டக்களப்பு காத்தான்குடி பஸ் நிலையம் அருகில் நேற்றுக்காலை சைக்கிள் குண்டொன்று பொலீஸாரால் கண்டுபிடிக்கப்பட்டது. இராணுவ குண்டு செயலிழக்கும் பிரிவினரால் இக்குண்டு பின்னர் செயலிழக்கச் செய்யப்பட்டது. (உ-21)

## ஆவரங்காலில் 4 படையினர் காயம்

யாழ்ப்பாணம், ஏப். 11

படையினர் பயணம் செய்த 'டபிள் - கப்' வாகனம் ஒன்றுஆவரங்கால் பகுதியில் விபத்துக்குள்ளானதில் அதன் பின் பகுதியில் அமர்ந்து பயணம் செய்த நான்கு படையினர் காயமடைந்தனர்.

நேற்று முன்தினம் மாலை 5. 30 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றது.

''பார்'' ஒன்றுக்கு முன்னால் குடிபோதையில் திடீரென வீதியைக் கடக்க முற்பட்ட பாதசாரி ஒருவரை மோதுவதைத் தவிர்ப்பதற்காக 'டபிள் - கப்' வாகனத்தை அவசரமாக திருப்ப முயன்றபோது அது மரத்துடன் மோதியதாக படை வட்டாரங்கள் தெரிவித்தன. (உ)

## மதுவிற்பனை இரு நாள்கள் இல்லை!

யாழ்ப்பாணம், ஏப். 11

புத்தாண்டை முன்னிட்டு எதிர்வரும் 13 ஆம் திகதி திங்கள், 14 ஆம் திகதி செவ்வாய் ஆகிய இரு தினங்களிலும் யாழ். மாவட்டத்திலுள்ள சகல மதுபானச் சாலைகளும் மூடப்பட்டிருக்குமென யாழ். மதுவரித் திணைக்களப் பொறுப்பதிகாரி அறிவித்துள்ளார். (உ-7)

# போர் நிறுத்தம்–பேச்சுக்கு இந்துமாமன்றம் அழைப்பு!

## புத்தாண்டை ஒட்டி பகிரங்க வேண்டுகோள்

கொழும்பு, ஏப். 11

★ போர் நிறுத்தப் பிரகடனத்தைச் செய்யவும், சம்பந்தப்பட்ட சகல தரப்பினருடனும் பேச்சுவார்த்தை நடத்தி அரசியல் தீர்வு ஒன்றினை விரைவில் காணவும் வழி கோல்வேண்டும் என்று ஜனாதிபதி மற்றும் அவரது அரசாங்கத்தையும், எதிர்க் கட்சியினரையும் இச்சந்தர்ப்பத்தில் மீண்டும் பகிரங்கமாக வற்புறுத்திக் கேட்டுக் கொள்கிறோம்.

★ இலங்கை இனப் பிரச்சினை விவகாரத்தில் இந்தியா ஓர் ஆக்கபூர்வமான — தீர்க்கமான — பங்களிப்பை செய்யவேண்டும் என்று இந்நாட்டுத் தமிழ் மக்கள் எதிர் பார்க்கின்றனர்.

★ விடுதலைப் புலிகள் இயக்கம் இதற்கு ஒத்துழைப்பு வழங்கும் என நம்புகின்றோம்.

புத்தாண்டை ஒட்டி அகில இலங்கை இந்து மாமன்றம் விடுத்துள்ள பகிரங்கவேண்டுகோளில் இந்த விடயங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

வீடுகளை இழந்து — உற்றார், உறவினரை இழந்து — சொந்த நாட்டில் அகதிகளாக அல்லற்படும் நிலையில் எமது மக்கள் இருக்கும் போது புத்தாண்டை ஒரு கொண்டாட்டமாக அனுஷ்டிக்க முடியுமா? சகல இந்துக்களும் கொண்டாட்டங்களைத் தவிர்த்து தமிழ் மக்கள் பூரண சுதந்திரத்துடன் வாழ வேண்டும் என்று கோரி புத்தாண்டு நாளில் பிரார்த்தனைகளில் ஈடுபட வேண்டும் — இப்படி அந்த வேண்டுகோளில் கேட்கப்பட்டுள்ளது. (உ-3)

பிறக்கும் வெகுதானிய புத்தாண்டை ஒட்டிய **இராசி பலன்** உள்ளே!

## பொறியியல் மாணவன் விபத்தில் உயிரிழப்பு!

### ஆவரங்காலில் சம்பவம்

யாழ்ப்பாணம், ஏப், 11

பருத்தித்துறை வீதியில் ஆவரங்கால் சிவன் கோயிலுக்கு அண்மையில் நேற்று முன்தினம் இரவு 7.00 மணியளவில் இராணுவத்தினரின் மோட்டார் சைக்கிள் ஒன்றும் சிவிலியன்கள் இருவர் பயணம் செய்த மோட்டார் சைக்கிள் ஒன்றும் மோதி விபத்துக்குள்ளானதில் மோட்டார் சைக்கிளில் வந்த பேராதனைப் பல்கலைக்கழக பொறியியல் பீட மூன்றாம் ஆண்டு மாணவன் ஒருவர் பலியானார். அவருடன் கூட வந்த மற்றொருவரும், இராணுவத்தினரின் மோட்டார் சைக்கிளில் வந்த சிப்பாய் ஒருவரும் படுகாயம் அடைந்தனர்.

பொறியியல் மாணவனான நாகர்கோயில் குடத்தனையைச் சேர்ந்த—பசுபதி சிவவாசன் (வயது-24) என்பவரே யாழ். ஆஸ்பத்திரிக்குக் கொண்டு வரப்படுகையில் உயிரிழந்தார்.

இவருடன் மோட்டார்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## சுட்டுக்கொலை

மட்டக்களப்பு, ஏப். 11

அம்பாறை மாவட்டம் அக்கரைப்பற்று பொதுச்சந்தையில் முன்னாள் பொலீஸ் கான்ஸ்டபிளொருவர்நேற்று முன்தினம் மாலை சுட்டுக் கொல்லப்பட்டார்.

கே. பி. ரோஹன தயாவன்ச என்ற மேற்படி பொலீஸ்கான்ஸ்டபிள் தமிழ் பெண்மணியைத் திருமணம் புரிந்துள்ளார். இவர் சில மாதங்களுக்கு முன்னரே பொலீஸ் சேவையிலிருந்து விலகினார் என்றும் தெரவிக்கப் பட்டது. (உ-21))

## இரு தூதர்கள் யாழ். வருகை

யாழ்ப்பாணம், ஏப். 11

இலங்கைக்கான ஜேர்மன் தூதர் ஹெல்மட் வான் எடிஞ், நெதர்லாந்து தூதர் எச். சி. ஆர். எம். பிரிஸ்ஸின் ஆகியோர் யாழ்ப்பாணம் வந்துள்ளனர்.

யாழ். மாவட்ட நிலைமை குறித்தும், இங்கு திட்டங்களை ஆரம்பிக்கக்கூடிய வாய்ப்புக்கள் குறித்தும் பல தரப்பட்டவர்களுடன் அவர்கள் பேச்சுக்கள் நடத்தினர். யாழ். அரச அதிபர், மாநகர ஆணையாளர் ஆகியோருடன் நேற்று அவர்கள் பேசினர். (உ-3)

## களப்பலி

வவுனியா, ஏப். 11

''வெற்றி உறுதி''ப் படையினருடன் நேற்று முன்தினம் அம்பகாமம் பகுதியில் இடம்பெற்ற மோதலில் குறிவீரன் (பிரியந்தன் சசி — யாழ்ப்பாணம்) களப்பலியானதாக ''புலிகளின் குரல்'' தெரிவித்தது. (உ-164-3)

## திருமணத்தில் விருந்துண்ட 30 பேர் பாதிப்பு

வவுனியா, ஏப். 11

மல்லாவிக்குஅருகே பாலையூர் என்னும் இடத்தில் நடந்த கலியாண வீடு ஒன்றில் விருந்துண்ட 30 பேர் சோர்வு நிலையில் மல்லாவி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

வயிற்றோட்டம், வாந்தி, வயிற்றுளைவு போன்றவற்றால் பாதிக்கப்பட்ட அவர்கள் உடன் சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டார்கள் எனத் தெரிவிக்கப்பட்டது. (உ-164-3)

## வல்லையில் பொலீஸ்

யாழ்ப்பாணம், ஏப். 11

வல்வெட்டித்துறையில் மிக விரைவில் பொலீஸ் நிலையம் திறக்கப்படவுள்ளது. (உ-10)

## ஓட்ட வீராங்கனை சுசந்திகாவுக்குத் தடை!

கொழும்பு, ஏப். 11

ஆசியாவின் அதிவேக ஓட்ட வீராங்கனை சுசந்திகா ஜெயசிங்காவை அடுத்த இரண்டு ஆண்டுகளுக்கு சர்வதேசப் போட்டிகளில் பங்கு பற்றாமல் தடைவிதிக்கும் உத்தரவை ஸ்ரீலங்கா அமெச்சூர் மெய்வன்மைச் சங்கம் நேற்று விடுத்தது.

அவரதுசிறுநீரை இரண்டாவது தடவையும் பரிசோதனை செய்த போது — தசைகளை விரைவாகச் செயற்படத் தூண்டும் — தடை செய்யப்பட்ட — மருந்தை அவர் பயன்படுத்தினார் என்பது உறுதிப் படுத்தப்பட்டதாகவும் —


அதை அடுத்தே இந்தத் தடை உத்தரவு விடுக்கப்

(8 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதுமையும் எழிலும் பொலியும் பல்சுவை வார இதழ்

31 ஆம் நாள் நினைவஞ்சலி



## அமரர் அப்பாபிள்ளை சிதம்பரநாதன்

(வர்த்தகர்)

பிறப்பு: **10 — 09 — 1924**

இறப்பு: **12 — 03 — 1998**

*11 - 04 - 98*

தோன்றிற் புகழொடு தோன்றுக என்ற
தெய்வப் புலவரின் வாழ்மொழிக் கொப்ப வாழ்ந்தாய்
பாச மழை பொழிந்து எங்களைக் கண்போற்
காத்தாய்

நேசமுடன் நாமுயர வழி செய்தாய்
மீளாத்துயில் கொண்ட பாசக் குல விளக்கே!
பாசமிகு சணவராய், அன்புத் தந்தையாய்,
மேன்மைமிகு மாமனாய், ஆசைச் சகோதரனாய்
அன்பு மைத்துனராய், பெரியதந்தையாய்,
அப்பப்பாவாய்

பேராளனாய், நல் நண்பனாய், உற்றாருக்கும்
மற்றோருக்கும், நல் மனத்தினனாய் இருந்து
எங்களை விட்டுப் பறந்து போய் மாதம் ஒன்றாகினும்
ஆறுமோ எம் மனம்? மறக்குமோ நின் நினைவு?
உயிர் பிரிந்து உடல் அழிந்தாலும் நின்
நினைவுகள் எம் நெஞ்சை விட்டகலாது!

உங்கள் பிரிவால் துயருறும்
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

மஞ்சத்தடி,
இணுவில்.

(சி/3415)

## சதகமாலை வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம், ஏப். 11

அகில இலங்கை சைவப் புலவர்கள் சங்கமும், பழனி ஆனந்தஇல்லமும் இணைந்து நடத்தும் சைவப்புலவர் சிவ சிதம்பரம் திருநாவுக்கரசுவின் ''மானிப்பாய் மருதடி விநாயகர் சதகமாலை'' வெளியீட்டு விழா இன்று சனிக்கிழமை காலை 8 மணிமுதல் மாலை 3.30 மணிவரை இணுவில் மத்திய கல்லூரி அதிபர் சித்தாந்த பண்டிதர் சைவப் புலவர் மு. திருஞானசம்பந்த பிள்ளை தலைமையில் ஆலய மண்டபத்தில் நடைபெறும்.


## லிபேட்டி தியேட்டர்

அச்சுவேலி.

சனி, ஞாயிறு

பிரபுதேவா - நக்மா
**காதலன்**

நேரம்:- 10-30, 2-30

தொலை பேசி இல.
**070 - 212223**

(54347)



நெல்லியடி
## மஹாத்மா
வெண் திரையில்
**10 - 04 - 98** முதல்
பாக்கியராஜ் - நக்மா
சாய்குமார்
நடித்த
**வேட்டியை
மடிச்சுக்கட்டு**
காட்சிகள்: 10-30, 2-30
(பழைய நேரம்)
(சி/3357)



தொலைபேசி தேவையைப் பூர்த்தி செய்ய இன்றே நாடுங்கள்

## KRISHNA COMMUNICATION CENTRE

## கிருஷ்ணா தொலைத் தொடர்பு நிலையம்

உள்நாட்டு, வெளிநாட்டு தொலைபேசிச் சேவைகள்

உங்களுக்கு வரும் உள்நாட்டு வெளிநாட்டுத் தொலைபேசி செய்திகளை இலவசமாக உங்கள் இல்லங்களுக்கு அனுப்பும் வசதியும் செய்யப்பட்டுள்ளது.

குறிப்பு: **13 - 04 - 98** வெளிநாட்டிலிருந்து வரும் அழைப்புகளுக்கு கட்டணம் அறவிடப்படமாட்டாது.

87, மார்க்கட் (பாய்க்கடை அருகில்)
ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

யாழ்ப்பாண வணிக நிலையம்
108, 302, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

T. P. NO 0094 - 212509
021 - 2509

[54850]



மலிவு விற்பனை! மலிவு விற்பனை!

## யாழ். ''சீமாட்டி'' யின் புத்தாண்டு மலிவு விற்பனை

மலரும் புத்தாண்டை முன்னிட்டு பிரத்தியேகமாக
இறக்குமதி செய்யப்பட்ட
புத்தம் புதிய தரம்மிக்க வர்ண வர்ண ஜவுளித்தினுசுகள்
அனைத்தும் **10%** முதல் **30%** வரை கழிவு விலையில்
விற்பனையாகிக் கொண்டிருக்கின்றன!
இந்தச் சலுகை மார்ச் **30** தொடக்கம் ஏப்ரல் **14** வரைக்குமே!

உங்கள் தெரிவுக்கு முந்துங்கள்!

**சீமாட்டி** [ஜவுளி சமுத்திரம்]
122, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

**மங்கை சில்க்,**
15, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.

**மங்கை சில்க்,**
8, நவீன சந்தை,
சுன்னாகம்.

(சி/3423)


# மரண அறிவித்தல்கள்

## கறுவல் கந்தையா

வளலாயைச் சேர்ந்த கறுவல் கந்தையா 5-4-98 அன்று துணுக்காயில் காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 6- 4 - 98 அன்று துணுக்காயில் நடைபெற்றன.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
க. தியாகராசா, க.குணலிங்கம்
(பிள்ளைகள்)

வளலாய்.

(சி/3422)

## செல்வன் பசுபதி சிவவாசன்

(பெரதேனியா பொறியியல் பீட மாணவன்)

நாகர்கோயிலைப் பிறப்பிடமாகக் கொண்ட செல்வன் பசுபதி சிவவாசன் மோட்டார் சைக்கிள் விபத்தில் 9-4-98 இல் அகாலமரணமடைந்தார்.

இவர் திரு. சி. பசுபதி (வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர், வடமராட்சி கிழக்கு பல. நோ. கூ.சங்கத் தலைவர்) திருமதி பசுபதி சிவயோகம் தம்பதிகளின் கனிஷ்ட புதல்வனும், திரு. ப. சிவசங்கர் (பிரதேச செயலகம், நல்லூர்), செல்வி ப. திவபாஸ்கரி (புற்றளை மகா வித்தியாலய மாணவி) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
ப. சிவசங்கர்
(சகோதரன்)

உபயகதிர்காமம்,
புலோலி.

(54844)

## திருமதி சிதம்பரம் நாகமுத்து

(மட்டுவில் வடக்கு)

மட்டுவில் வடக்கைச் சேர்ந்த திருமதி சிதம்பரம் நாகமுத்து 1998 - 04 - 09ஆந் திகதி சிவபதம் அடைந்தார்.

இவர் காலஞ்சென்ற வல்லிபுரம் நாகமுத்துவின் அன்பு மனைவியும், நல்லதம்பி (இளைப்பாறிய அதிபர்), அமரர் வல்லிபுரம் (ஆசிரியர்), இராசம்மா (கிளிநொச்சி), காமாட்சி (இளைப்பாறிய உப அதிபர்), சின்னத்தம்பி (டாக்டர்), சுந்தரம் (II தபாற் திணைக்களம்), செல்லம்மா (கோட்டக் கல்வி அலுவலகம், சாவகச்சேரி), சின்னம்மா (ஆதார வைத்தியசாலை, கேகாலை), கமலாதேவி (அணிஞ்சியங்குளம் அ. த. க. பாடசாலை ஆசிரியை) ஆகியோரின் அன்புத் தாயாரும், இரத்தினபூரணம் (லீலா — இளைப்பாறிய ஆசிரியை), அன்னப்பிள்ளை, பொன்னுச்சாமி சிதம்பரநாதன் (முதலியார்), மீனாட்சி (டாக்டர், தெல்லிப்பழை வைத்தியசாலை), சுபத்திராதேவி (ஆசிரியை, வவுனியா), சுந்தரராஜன் (குவைத்), வாமதேவன் (லிகிதர், உ. அ. அதிபர் பணிமனை, துணுக்காய்) ஆகியோரின் அருமை மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று சனிக்கிழமை (11 - 4 - 98) அவரது இல்லத்தில் பிற்பகல் 2.00 மணிக்கு நடைபெறும்.

இவ்வறிவித்தலை உறவினர்களும், நண்பர்களும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
நல்லதம்பி
(மகன்)

(54836)

## கந்தையா தனபாலசுப்பிரமணியம்

(ஓய்வுபெற்ற விமான போக்குவரத்து கட்டுப்பாட்டு அதிகாரி)

துன்னாலை வடக்கு ஞானாசாரியார் வீதியைச் சேர்ந்தவரும், குரும்பசிட்டியை வாழ்விடமாகக் கொண்டவருமான கந்தையா தனபாலசுப்பிரமணியம் 09-04-98 அன்று கொழும்பில் காலமானார்.

அன்னார் கந்தையா — பத்தினியம்மா (ஓய்வு பெற்ற ஆசிரியர்கள்) ஆகியோரின் புதல்வனும், வைத்திலிங்கம்–வள்ளியம்மை ஆகியோரின் மருமகனும் சிவசோதியம்மாவின் (சத்தேஸ்) அன்புக் கணவரும், சுதர்சனின் அன்புத் தந்தையும், திருமதி இராசலட்சுமி கிருஷ்ணசாமி, சிவசுப்பிரமணியம், செல்லக் கணேசன், நந்தகுமார், ஜெயலட்சுமி, சிவசக்தி, வசந்தி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 12-04-98 ஞாயிறு மாலை 4-00 மணிக்கு 56, சித்திராலேன், கொழும்பு—5-இல் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும்ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
T. V. கிருஷ்ணசாமி
(சகலன்)

சந்தை ஒழுங்கை,
உரும்பராய்.

(54852)

## செல்லப்பா சுப்பையா (பரமு)

தாவடி துரைவீதியைச் சேர்ந்த செல்லப்பா சுப்பையா 07-04-1998 அன்று பிற்பகல் 4.30 மணிக்கு கனடாவில் சிவபதமடைந்தார்.

இவர் நாகேஸ்வரியின் அன்புக் கணவரும், ஜெகநாதன், ரவிநாதன், பாஸ்கரநாதன் (கனடா), நகுலா, வத்சலா, சகிலா ஆகியோரின் அன்புத் தந்தையும், இராசதுரை, ஜெகதீஸ்வரி, உஷா, சுபாஷினி, பாஸ்கரன் ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று சனிக்கிழமை (11-04-98) கனடாவில் நடைபெறும்.

தகவல்:
ப. ஆனந்தபாஸ்கரன்
(மருமகன்)

(50030)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'வெற்றி உறுதி' படை நடவடிக்கை ஆரம்பித்து ஒரு வருடத்தின் பின்னரும் தொடர்வது உறுதி

இன்னும் மூன்று நாள்களில் தமிழ்—சிங்களப் புத்தாண்டு பிறக்கப் போகின்றது.

புத்தாண்டு பிறக்கும்போது 'வெற்றி உறுதி' படை நடவடிக்கை ஆரம்பித்து பதினொராவது மாதம் பூர்த்தியாகியிருக்கும்.

அத்தோடு இந்த மாதம் மற்றொரு வகையிலும் முக்கியத்துவம் பெறுகின்றது. அடுத்த வாரம் ஞாயிற்றுக்கிழமை (ஏப்ரல் 19 ஆம் திகதி) 'ஈழம்—III' யுத்தத்தில் குறிப்பிடத்தக்க தினமாகும். மூன்றாவது ஈழ யுத்தம் ஆரம்பமாகி மூன்று வருடங்கள் பூர்த்தியாவது அத்தினத்தில்தான்.

வவுனியாவிலிருந்து வடக்கு யாழ்ப்பணத்துக்கு பாதுகாப்பான தரைவழி விநியோகப் பாதை ஒன்றைத் திறப்பதற்காகவே 'வெற்றி உறுதி' படை நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டது என்றும்—

இந்த நடவடிக்கை மூலம் அரசியல் லாபங்களை அடைய முயன்ற அரசியல் தலைமைத்துவம், அதற்காக இந்நடவடிக்கையைப் பூர்த்தி செய்வதற்கு இராணுவத் தலைமைக்கு அவ்வப்போது பல காலக்கெடுக்களை விதித்ததும்—

யதார்த்தத்தில் நிறைவேற்ற முடியாத காலக்கெடுக்களை, நிறைவு செய்வதற்காக அவசரப்பட்ட படைத்தரப்பு, அதற்காக பல்வேறு இழப்புக்களையும் (உயிர், உடைமை, நிதி இழப்புக்களை) விலையாகக் கொடுக்க வேண்டி வந்ததும் — வாசகர்கள் அறிந்தவையே. இந்த இழப்புக்களின் விளைவை உணர்ந்து கொண்ட படைத் தலைமைப்பீடம், அரசியல் தலைமைத்துவத்தால் விதிக்கப்படும் காலக்கெடுக்களை நிறைவேற்ற முயற்சித்தால் தொடர்ந்து அழிவும் இழப்புமே ஏற்படும் என்றும் —

அத்தகைய காலக்கெடுக்களுக்கு இணங்கி படை நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாது என்றும் —

திட்டவட்டமாக அரசுத் தலைமைப்பீடத்துக்கு எடுத்தியம்பி விட்டதாக நம்பகமாக அறிய வந்தது.

'வெற்றி உறுதி' படை நடவடிக்கை தொடர்பாக காலக்கெடுவுடன் கூடிய அரசியல் அழுத்தம் ஏதும் விதிக்கப்படமாட்டாது என்ற உறுதி மொழியை இராணுவத்தின் சிரேஷ்ட அதிகாரியும், படை நடவடிக்கைக்கான கட்டளைத் தளபதியுமான மேஜர் ஜெனரல் ஸ்ரீலால் வீரசூரிய அரசுத் தலைவர்களிடமிருந்து பெற்றிருப்பதாகக் கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன.

எனவே தமக்கு இழப்புகள் ஏற்படாத வகையில் இந்த நடவடிக்கையைத் தொடர்வதற்கான வழிவகைகளையே படைத் தலைமை விரும்புவதாகத் தெரிகின்றது. அதாவது இது விடயத்தில் முன்னரைப் போல் அவசரப்பட்டு வாங்கிக்கட்டிக் கொள்ளாமல் ''மெதுவாக ஆனால் உறுதியாக'' (Slow And Steady) காலடி எடுத்துவைப்பதையே படைத் தலைமைப் பீடம் விரும்புகின்றது.

இக்காரணத்தினால் வெற்றி உறுதி படை நடவடிக்கை மேலும் நீண்டகாலம் தொடரும் என்பது ஓரளவு உறுதியாகிவிட்டது.

## காலக்கெடுக்கள் விதிக்கும் திட்டத்தை அரசு உயர்தரப்பு கைவிட்டுவிட்டது

அடுத்த மாதம் 13 ஆம் திகதி 'வெற்றி உறுதி' ஒரு வயதை எட்டும். ஆனால் அதற்கு அப்பாலும் நீண்ட தொடர்கதையாக அது தொடரும் என்பது அந்த நடவடிக்கைக்கு எதிராக உக்கிர ஆவேசத்துடன் புலிகள் தரும் பதில்கள் உணர்த்துகின்றன.

வன்னியில் நடத்தப்படும் இராணுவ நடவடிக்கைகள் குறித்தும், அதனால் படைத்தரப்புக்கு ஏற்பட்ட இழப்புகள் குறித்தும் புலிகள் சில புள்ளிவிவரங்கள் மற்றும் தகவல்களை வெளியிட்டுள்ளனர். அது வருமாறு:—

''சிங்களப் படைக்குவிப்பின் குவிமையமாக — அண்மைக்காலத்தில் —வன்னிப் போர் அரங்கு அமைந்துள்ளது. மாங்குளம்— கிளிநொச்சி என இரண்டு பிரதான சமர் முனைகளை இந்தப் போர் அரங்கம் கொண்டுள்ளது. ஒவ்வொன்றும் எண்ணாயிரத்தில் இருந்து ஒன்பதாயிரம் ஆள் தொகையைக் கொண்ட நான்கு டிவிஷன்கள் (சுமார் முப்பத்தையாயிரம் துருப்புகள்) வன்னியில் கிளிநொச்சி — மாங்குளம் ஆகிய இரு சமர் முனைகளிலும் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

''அதாவது, ஸ்ரீலங்காவின் படையின் சுமார் அரைப்பங்கு ஆள்பலம் வன்னிப் போர் அரங்கில் நிலை கொண்டுள்ளது. இந்த ஆளணியினருக்குள்ளேயே — சிறப்புக் கொமாண்டோ அணிகள் மற்றும் போர் அனுபவம் வாய்ந்த படையினர் உட்பட — ஸ்ரீலங்கா இராணுவத்தின் முன்னணிப் படையைச் சேர்ந்த ஏறக்குறைய முக்கால் பங்கினரும் அடங்குகின்றார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

'ஓயாத அலைகள்' தாக்குதலில் இருந்து 'வெற்றி உறுதி' படைநடவடிக்கைக்கு எதிராக நடக்கும் சமர் வரை வன்னிப் போர்க்களத்தில் படைத்தரப்பு சந்தித்த ஆள் இழப்பு மிக மிக அதிகம்.

''இந்த இரண்டு இராணுவ நிகழ்ச்சிகளுக்கும் இடைப்பட்ட — இந்த 20 மாத — காலப்பகுதியில் சுமார் ஐயாயிரம் படையினர் கொல்லப்பட்டுள்ளனர்.

'ஓயாத அலைகளில்' — 1400பேர்; 'உண்மை வெற்றியில்' - 600 பேர்; வெற்றி உறுதியில்' — [இது வரை] 3 ஆயிரம் பேர். இதுதவிர எண்ணாயிரம் படையினர் காயமடைந்துள்ளனர்.

இந்த இழப்புகள் கொடுத்த மன உளைச்சலினால் — இந்தக் காலப்பகுதியில்— சுமார் பதினையாயிரம் சிப்பாய்கள் படைகளை விட்டுஓடியுள்ளனர் எனவே ஸ்ரீ லங்காப் படையைப் பொறுத்தவரை இக்காலப் பகுதியில் வன்னிப் போர்க்களத்தில் மொத்தம் இருபத்தெட்டாயிரம் துருப்புக்களை அது இழந்துள்ளது.

— இவ்வாறு 'விடுதலைப் புலிகள்' தெரிவித்துள்ளனர்.

வன்னிப் போர் அரங்கில் புலிகள் வெளிப்படுத்தும் மரபுப் போர்த் திறமை விடயமறிந்த இராணுவ வல்லுநர்களை — ஆய்வாளர்களை —திகைப்பிலும், வியப்பிலும் ஆழ்த்தியிருக்கின்றது.

தனது முப்படைகளுக்கும் படை நடவடிக்கைகளுக்கும் அரசு கொட்டிக் கொட்டி நிதி கொடுக்கின்றது; வாரி இறைக்கின்றது. இன்று நாடும் அரசும் வங்குரோத்து அடையும் நிலைக்கு பாதுகாப்புத் துறைக்கு அள்ளிக் கொடுத்தாகி விட்டது. ஆனால் படைத்துறை சாதித்தது என்ன?

இலங்கை யுத்த நிலைமை குறித்து பிரிட்டிஷ் பாதுகாப்பு ஆலோசகர் ஒருவர் வெளியிட்ட கருத்து இது விடயத்தில் முக்கியமானது.

'வன்னியில் நான்கு டிவிஷன்கள் படைத்துருப்புகள் ஈடுபடுத்தப்பட்டும் என்ன சாதித்துள்ளன? எனவே இந்த நடவடிக்கையின் அடிப்படையில் ஏதோ பிழை உள்ளது. எதிரியின் பலத்தை குறைவாக மதிப்பிட்டுள்ளனரோ?' — என்று கேட்கின்றார் அவர்.

படையினருக்குத் தேவையான நிதியைப் பயன்படுத்துமாறு படைத்தலைமைக்கு அரசு, வெற்றுக்காசோலையில் கையொப்பம் இட்டு (Blank Chague) ஒப்படைப்பது போல் வழங்கியது. 1994 ஆம் ஆண்டுக்குப் பின்னர் — என்றுமில்லாதவாறு — முப்படைகளும் பலப்படுத்தப்பட்டன; தீவிர பயிற்சிபெற்ற 54,55,56 ஆம் படையணிகள் உருவாக்கப்பட்டன; மேலதிக துருப்புகள் திரட்டப்பட்டன; சகல படைத்தரப்புக்கும் அதிநவீன ஆயுதங்கள், யுத்ததளபாடங்கள் கணக்கு வழக்கின்றி வாங்கிக்குவிக்கப்பட்டன; அமெரிக்கா, பிரான்ஸ், பிரிட்டன், இந்தியா, சீனா, பாகிஸ்தான் போன்ற நாடுகளிடமிருந்து ஆயுத தளபாடங்களும், இராணுவப் பயிற்சி உதவிகளும் பெரிய அளவில் நேரடியாகப் பெறப்பட்டன; பெறப்படுகின்றன.

ஆனால் இவற்றுக்கு மாறாக—

ஆயுத வசதிகள் போதியளவு இன்றி— பொருளாதாரத் தடைகளுக்கு மத்தியில்— [illegible] உதவிகள் ஏதுமின்றி— காட்டுக்குள் இருந்தவாறு— புலிகள் தொடர்ந்து போராடி வருகின்றார்கள்; பல இராணுவ வெற்றிகளை ஈட்டுகின்றார்கள்.

இது எப்படி சாத்தியமாகுகின்றது என்பதுதான் இராணுவ ஆய்வாளர்களால் விடைகாண முடியாமல் இருக்கும் கேள்வியாகும்.

தமது உயிர் பிரியும் வரை விடுதலைப் போராட்டத்தில் உறுதியாக நிற்கும் புலிகளின் மன ஓர்மமே இந்நிலைமைக்கு முக்கிய காரணம் என்பது பலருக்கும் தெரிந்ததுதான்.

★ ★ ★

### பேச்சு நடக்கும் அறிகுறியா?

கொழும்பிலிருந்து வெளியாகும் ஒரு முக்கிய ஆங்கில வார இதழின் பாதுகாப்பு நிலைவரம் பற்றிய கட்டுரைப் பகுதியில் கடந்த வாரம் இடம் பெற்றிருந்த ஒரு முக்கிய விடயம் பலராலும் பேசப்பட்டது. அந்த விடயம் இது தான்:-

''மீண்டும் அரசுக்கும் புலிகளுக்கும் இடையில் பேச்சு நடப்பதற்கு வாய்ப்பு ஏற்பட்டுள்ளதாக கடந்த வாரம் பரபரப்பு நிலவியது. புலிகளின் உறுப்பினர்கள் இது பற்றிய கதையை யாழ்ப்பாணப் பிரதேசத்தில் அவிழ்த்து விட்டு வருவதைக் கேட்டு மிதவாதத் தமிழ் அரசியல் கட்சிகளின் தலைவர்கள் ஆச்சரியமடைந்தார்கள். இந்தத் தடவை அவர்களில் (புலிகளில்) சிலர் தமது சிறிய ரக ஆயுதங்கள் மற்றும் சயனைட் வில்லைகள் போன்றவை இல்லாமல் வளைய வந்து விரைவில் பேச்சு நடக்கும் என்று கூறியுள்ளார்கள். புலிகள் ஏனைய தமிழ்க் கட்சிகளுக்கு எதிரானவர்கள் அல்லர் என்றும் அக்கட்சியினருக்கு தீங்கு விளைவிக்க மாட்டார்கள் என்றும் அவர்கள் தெரிவித்ததாகவும் கூறப்படுகின்றது.

## பாசுபதன்

பேச்சுகளை ஆரம்பிப்பதற்காக, பிரிட்டனின் முன்னைய கன்சர்வேட்டிவ் கட்சி அரசு ஆரம்பித்த முன் முயற்சிகளின் விளைவோ இது என்று தமிழ் அரசியல் கட்சித் தலைவர்கள் ஊகிக்கின்றனர்.''

— இவ்வாறு அப்பத்திரிகை தெரிவித்தது.

ஆனால் யாழ்ப்பாணத்தில் — அல்லது குடாநாட்டில் — நிலை கொண்டுள்ள — அல்லது ஊடுருவியுள்ள — புலிகளின் மத்தியில் அத்தகைய சாடைமாடையான போக்கு கிஞ்சித்தேனும் இல்லை என்பதை பாதுகாப்புத் துறைச் செய்தியாளன் என்ற முறையில் உணர முடிகின்றது.

பேச்சுக்கான வாய்ப்புப் பற்றி அவர்கள் எண்ணவுமில்லை; அது பற்றி காட்டவுமில்லை; அத்தகைய நிலைப்பாடு எதுவும் அவர்களது மேலிடத்தால் அவர்களுக்கு தெரியப்படுத்தப் படவுமில்லை.

குடாநாட்டுக்குள் ஊடுருவியுள்ள புலிகள் தமது இராணுவ நடவடிக்கைகளை தொடர்வதில் முனைப்பாய் இருக்கின்ற அதே சமயம், தமது அரசியல்துறை தொடர்பான பிரசாரங்களிலும் ஈடுபடத் தவறுவதில்லை. ஆனால் அத்தகைய பிரசாரங்களில் அவர்களின் போர் மூர்க்கம், மனோதிடம், உறுதி ஆகியவை வெளிப்படுத்தப்படுகின்றனவே தவிர, சமாதானப் பேச்சுக்கான அமைதி வழி தென்படவேயில்லை.

இதன் அர்த்தம் சமாதானப் பேச்சுக்களில் புலிகள் ஆர்வமற்றிருக்கின்றார்கள் என்பது அல்ல.

புலிகளின் இயக்கக் கட்டமைப்பை நீண்ட காலம் அவதானித்து வருபவர்களுக்கு ஒன்று தெரியும்.

தமது உறுப்பினர்கள் மத்தியில் விடுதலைப் போராட்ட வேட்கைகனன்று கொண்டிருப்பதை உறுதி செய்வதில் அவர்கள் எப்போதும் தீவிரமாகவே இருப்பார்கள். சமாதானம், அமைதிப்பேச்சு, இணக்கமான தீர்வு என்ற மாயமான்களை— கானல் நீர்களை— அவர்களுக்குக் காட்டி அல்லது ஊட்டி, விடுதலை வேட்கை என்ற நெருப்பின் ஆவேசத்தை தண்ணீர் ஊற்றி அணைக்கும் செயல்களில் அவர்கள் ஈடுபடுவதில்லை.

பேச்சுக்கான சூழ்நிலை வந்தால் கூட இயக்கத் தலைமைத்துவம் கடைசி நேரத்தில்தான் அதை அறிவிக்குமே தவிர, 'இதோ பேச்சு வருகிறது', 'அதோ பேச்சுக்கள் தொடங்கப் போகின்றன' என்ற தகவல்களை தமது உறுப்பினர்கள் மத்தியில் கசியவிட்டு, அவர்களின் போராட்டத் தீவிரத்தை குன்றச் செய்ய மாட்டாது.

அத்தோடு அத்தகைய பேச்சு நடக்கும் காலங்களில் கூட — மறுபுறத்தில் தனது உறுப்பினர்களின் போராட்ட தீவிரத்தை — மேலும் உறுதிப்படுத்துவதில் புலிகளின் தலைமைத்துவம் தவறுவதில்லை.

இதைத்தான் கடந்த கால பேச்சுவார்த்தை காலங்களில் பத்திரிகையாளர்களாகிய நாம் சந்தித்தோம்.

பேச்சுக்கான வாய்ப்பு இன்று வரும்; நாளைபோகும். ஆனால் அதை நம்பி தனது விடுதலைப் போராட்டத்தை — இலட்சியத்தை — இடையில் பலி கொடுத்துவிட புலிகளின் தலைமைத்துவம் தயாரில்லை என்பதுதான் அனுபவ உண்மை.

அந்த மன நிலையில்தான் குடாநாட்டில் நிலைகொண்டுள்ள புலிகளும் இருக்கின்றார்கள் என்பதை உறுதிப்படுத்த முடியும்.

★ ★ ★

### புலிகளும் பத்திரிகையாளரும்

யாழ்ப்பாணத்தில் நிலைகொண்டுள்ள 512 ஆவது படையணியின் கட்டளைத் தளபதி பிரிகேடியர் சுஸந்த மெண்டிஸ் நேற்றுக் காலை யாழ். நகரில் உள்ள அரச, திணைக்களத் தலைவர்களை அழைத்து யாழ், செயலகத்தில் சிறிய சந்திப்பு ஒன்றை நடத்தினார்.

''அரசினால் தடைசெய்யப்பட்ட இயங்கங்களை அல்லது அவர்களின் உறுப்பினர்களை சந்திப்பது, அவர்

(6ஆம் பக்கம் பார்க்க)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

Sony 2020, 2030, 2032, 2092, 1440, 14'' Hitachi 20'' Colour, National 370 டெக் விற்பனைக்கு உண்டு. தொடர்பு; வீனஸ் தன பாலசிங்கம், 284, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் (நாக விகாரை முன்பாக). [சி/3394].

Sony- 20''Colour- T. V, K.V 2090, K. V 2092, K. V2072 Audio Kit Pioneer Box Sony 50 W 8 ஓம்ஸ் R. X 47 Tape செற், 90 அம்பியர் பற்றறி விற்பனைக்குண்டு. தொடர்பு: 131 (251), அரசடி றோட், கந்தர்மடம் சந்தி அருகில். (54830)

### சோதிடம்

கல்வி, தொழில், மனை சிறப்புத்தரும் மகாலட்சுமி சரஸ்வதி யந்திரம் மதுரை மீனாட்சி அம்பாள் திருவருள் துணையால் செய்து கொள்ளவும். வெளியூர் சாதகக் குறிப்பு எழுத, விவாகப் பொருத்தம் பார்க்க, சிவம் சோதிடர், 158, கோயில் வீதி நல்லூர் யாழ்ப்பாணம். [54781]

### தெளிவாகப் பார்க்க

ரி. வி. நிகழ்ச்சிகளை தெளிவாகபார்ப்பதற்குபுதியஅன்ரனாக்களைப் பொருத்தவும், உங்கள் பழைய அன்ரனாக்களைத் திருத்திப் பொருத்துவதற்கும் பூஸ்ரர்களைபழுது பார்ப்பதற்கும் நாடுங்கள்! வீனஸ் தனபாலசிங்கம் B. Sc Ceylon Dip. In Electronic Engineering London — 284, ஸ்ரான்லி வீதி (நாக விகாரை முன்பாக), யாழ்ப்பாணம். (சி/3295)

## வியாபாரம் மும்முரம்

யாழ்ப்பாணம், ஏப். 11

புதுவருடத்தை முன்னிட்டு யாழ். நகரப்பகுதிகளில் வியாபாரம் களை கட்டியுள்ளது. புதுவருடத்திற்கான பொருள்களைக் கொள்வனவு செய்வதில் மக்கள் நாட்டம் கொண்டுள்ளனர். மக்கள் கூட்டம் வியாபார நிலையங்களில் நிரம்பிக் காணப்படுகிறது. இதனால் யாழ். நகரப்பகுதியில் போக்குவரத்து நெருக்கடி தோன்றியுள்ளது. (ஐ-15-9)

### திருத்துதல்

சகல விதமான தமிழ், ஆங்கில தட்டச்சு இயந்திரங்கள் (Type Writers) சிறந்த முறையில் குறைந்த கட்டணத்தில் குறித்த தவணையில் திருத்திக் கொடுக்கப்படும். தொடர்பு: ''சாயி'', தட்டச்சு திருத்தும் சேவை, 116, பலாலி வீதி, (கராஜ் அருகில்) கந்தர்மடம், யாழ்ப்பாணம். (54760)

### மணமகன் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1969 ஆம் ஆண்டு பிறந்த டாக்டர் மணமகளுக்கு (சுவாதி, 3 ஆம் பாதம், செவ்வாய் தோசமற்றவர்) டாக்டர், எஞ்சினியர், எக்கவுண்டன் மற்றும் அரச உயர்பதவியில் உள்ளவர்களையும் பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். தொடர்பு இல:– 724, மே/பா உதயன். (54718)

### தவறிவிட்டது

சோமசுந்தரம் பாலசிங்கம் என்பவரது தேசிய, விசேட அடையாளஅட்டைகள், சிறு தொகைப்பணம், பைப் பெண்ட் எஸ் லோன்பைப், சைக்கிள் திறப்பு என்பன அடங்கிய பையொன்று யாழ். நகர கடை ஒன்றில் 2. 4. 98 (வியாழன்) அன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து அவற்றை கீழ் வரும் முகவரியில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். சோ. பாலசிங்கம், நீர்வேலிதெற்கு, நீர்வேலி. (54814)

கதிர்காமு துரைபத்மநாதன் என்பவரது விசேட அடையாள அட்டையும், தேசிய அடையாளஅட்டையும் மல்லாகம் சந்திக்கும் ஏழாலை சந்திக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் ஏழாலை வடக்கு கிராம அலுவலர் அலுவலகத்தில் ஒப்படைத்து உதவவும். (54822)

## கொம்ரெக் நிறுவனம்

சித்தன்கேணி

**மாலை நேர ஆங்கில வகுப்பு**
**பால பண்டிதர் வகுப்பு**
**வெளிவாரிப் பட்டப்படிப்பு**

மேற்படி பயிற்சி நெறிகள் அனுபவம் பெற்ற ஆசிரியர்கள் மூலம் கற்பிக்கப்பட உள்ளன. பயிற்சி பெறவிரும்பும் மாணவர்கள் கீழே குறிப்பிட்ட முகவரியில் ரூ. 5 செலுத்தி விண்ணப்பப்படிவங்களைப் பெற்று 1998 – 04 – 20 ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

## ஆண்கள் தையற் பயிற்சிக்கான ஆசிரியர்கள்

இப்பதவிக்குரிய விண்ணப்பம் 1998 – 04 – 16 ஆம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும். கீழே குறிப்பிட்ட முகவரியில் ரூபா 5 செலுத்தி விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

மேலதிக விவரங்களுக்கு
தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:

தலைவர்,
கொம்ரெக்,
சித்தன்கேணி.

(சி/3414)

# புரோட்டினெக்ஸ்

## புத்துணர்ச்சியை அளிக்கும்

- ★ தாவரப்புரதம்
- ★ விட்டமின்கள்
- ★ கனிப்பொருள்கள்

**அடங்கிய போஷாக்குப் பானம்**

## புரோட்டினெக்ஸ் அன்றாடம்
## இழக்கும் சக்தியை மீட்டுத் தருவது!

(சி/3358)

# அழைப்பு

எமது மறை மாவட்டத்தினால் நடத்தப்படும்

## ஈஸ்ரர் பஜனை

எதிர்வரும் உயிர்த்தெழுந்த ஞாயிறு
**12 – 04 – 1998** பிற்பகல் **3-00** மணிக்கு (புதியநேரம்)
**அருள்மிகு. அறிவர். S. ஜெபநேசன்**
அவர்கள் தலைமையில்
கிறிஸ்தவ சேவ ஆச்சிரம வளாகத்தில் நடைபெறும். அன்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

உங்கள் வரவை எதிர்பார்க்கும்:
யாழ். மறைமாவட்டம்,
தென் இந்திய திருச்சபை

(54829)

சுன்னாகம்

## றோட்டரக்ட் கழகம்

நடத்தும்

## பொது அறிவுப் போட்டி' 98

மேற்படி பரீட்சை நடைபெறும் நிலையங்கள்

(1) யா/ யாழ். இந்துக்கல்லூரி
(வலயம் 1 இற்கான பாடசாலைகள்)

(2) யா/ இராமநாதன் கல்லூரி
(வலயம் 2 இற்கான பாடசாலைகள்)

காலம்:- 13 - 04 - 98 திங்கட்கிழமை
காலை 9-00 மணி (புதிய நேரம்)

குறிப்பு:- பரீட்சைக்கு விண்ணப்பித்து சுட்டிலக்கங்களைப் பெற்றுக் கொள்ளாத மாணவர்கள் தங்களுக்குரிய பரீட்சை மண்டபத்தில் அதனைப் பெற்றுக் கொள்ளலாம்.

செயற்றிட்ட இயக்குநர்
றோட்டரக்ட் கழகம், சுன்னாகம்

(சி-3413)

எதிர்வரும் புத்தாண்டுத் திருநாளை முன்னிட்டு வாடிக்கையாளரின் நன்மைகருதி சில்லறை விற்பனை நடைபெறுகின்றது என்பதை அறியத்தருகின்றோம்.

## த. குமாரசாமி ரெக்ஸ்ரைல்ஸ்

352, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

சோகேஸ், பிறேம்வேக்ஸ் போன்றவற்றைத் தயாரிப்பதற்குத் தேவையான பிளேன் கண்ணாடி வகைகளை 10-04-98 தொடக்கம்

பெற்றுக் கொள்வதற்கு நாடவேண்டிய இடம்:

## த. குமாரசாமி ரெக்ஸ்ரைல்ஸ்

248/1, K. K. S. Road,
யாழ்ப்பாணம்.

[54826]

### முதலாவது ஆண்டு நினைவஞ்சலி

## வெங்கடேசக் குருக்கள் குருமணி குகசாமிக்குருக்கள்

அராலி தெற்கு சிந்தாமணிப் பிள்ளையார் கோயில், நாகம்பாள் கோயில், பத்திரகாளி கோயில் ஆகியவற்றின் பரிபாலகரும் பிரதம குருவுமாகிய

வெங்கடேசக் குருக்கள்
குருமணி குகசாமிக் குருக்கள்

அவர்களின் முதலாவது வருட பூர்த்தி நாளான இன்று 11 – 04 – 98 அன்னாரை நினைவு கூருகின்றோம்.

அவரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்:

அன்பு மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
அராலியூர் மக்கள்.

தகவல்:
ரெ. ராதாகிருஷ்ணசர்மா,
மு. விஜயகாந்தக் குருக்கள். (54822)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மானிப்பாய்

## மருதடி விநாயகர்
## சதக மாலை வெளியீட்டுவிழா

இடம்: மானிப்பாய் மருதடி விநாயகர்
ஆலய சபா மண்டபம்

காலம்: 11-04-1998 சனிக்கிழமை
காலை 8 மணி முதல் மாலை 3.30 வரை

அன்பர்கள், அடியார்கள், பக்தர்கள் இந்நிகழ்ச்சிகளில் பங்கு பற்றி சிறப்புப் பிரதிகளைப் பெறுமாறு வேண்டுகின்றேன்.

சைவப் புலவர்
சிவசிதம்பரம் திருநாவுக்கரசு.

(54757)

## HOTEL VEGELANDS
## (ஹொட்டேல் வெயிலன்ட்)

கொழும்பு மாநகர் பம்பலப்பிட்டியில் ஆலயங்கள், பாடசாலைகள் பொதுச்சந்தை வைத்தியசாலைகள் நிரம்பிய தரமான சூழலில் பாதுகாப்புக்கு உத்தரவாதம் அளிக்கும் தகுதியான சகல வசதிகள் நிரம்பிய அறைகள் நாளாந்த, மாதாந்த வாடகைக்கு தரப்படும். தொலைபேசி, வாகன வசதிகள் உண்டு.

11, Upatisa Road,
Bambalapitiya, Colombo - 04

11, உபதிஸ்ஸ றோட்,
பம்பலப்பிட்டி, கொழும்பு - 04.
தொலைபேசி:- 582727, 508876, 592827

(சி/3410)

## நினைவலைகள்

குடியிருந்த கோயில்
திருமதி
**நாகம்மா சின்னையா**

மலர்வு: 02 — 03 — 1913
உதிர்வு: 11 — 02 — 1998

திதி: 3 ஆம் மாத பூரணை

அம்மா! என் உள்ளத்தில் ஒளியில்லை!
உங்கள் உருவப்படம் முன் தீபம் எரிகின்றது.
அம்மா! என் உள்ளத்தில் தீபம் ஏற்ற முடியவில்லை
உள்ளம் கசிகின்றது கண்ணீர் வடிகின்றது
தீபம் அணைகின்றது .......
படுக்கையில் கிடந்து பொழுதுபட்டால்
யார் உதவி? நிலவுபட்டால் யார் உதவி?
என்று கூறுவது காதில் கேட்கின்றது.
அம்மா! உங்கள் பிரிவு நாளில்
வானத்தில் முழு நிலாவை விட்டுச் சென்றீர்களே!

உங்கள் ஆத்மா சாந்தி அடைய இறைவனை
இறைஞ்சுகின்றேன்.

அன்பு நினைவில் ஆறுதல் அடைய விரும்பும்:
மகள்

29/1, செட்டிலேன், நல்லூர். (54755)

### ஆண்டு நிறைவு நூல் வெளியீடு

சாவகச்சேரி, ஏப். 11
சாவகச்சேரி மகளிர் கல்லூரி ஸ்தாபிக்கப்பட்டு 45 ஆவது ஆண்டு நிறைவையொட்டி சஞ்சிகை யொன்றினை வெளியிடுவதற்கு கல்லூரி நடவடிக்கை எடுத்துள்ளது. (ஐ-31-9)

## தேவை

யாழ். நகரில் அமைந்துள்ள விற்பனை நிலையத்துக்கு பெண் லிகிதர் தேவை.

தகைமைகள்:

1. A/L நான்கு பாடங்களில் சித்தியடைந்து இருத்தல் வேண்டும்.
2. குறைந்தது மூன்று வருட அனுபவம் ஆங்கிலம் / தமிழ் ரைப்பிங் தெரிந்து இருத்தல் வேண்டும்.


கவர்ச்சியான சம்பளம் கொடுக்கப்படும்.

19-04-1998 இற்கு முன்பு விண்ணப்பிக்கவும்.

725, C/o உதயன்,
யாழ்ப்பாணம்.

(54842)

## இரண்டாம் ஆண்டு நினைவுச் சிமிழ்



மண்மகிழ: 06 — 01 — 1911
கண்நெகிழ: 03 — 04 — 1996

திருமதி வேலுப்பிள்ளை அபிராமிப்பிள்ளை

திதி: 11 - 04 - 1998

ஆண்டு இரண்டு அகன்றதுவோ
அன்னையே உமையிழந்து.
பூண்டதுயர் மாறாமற்
புலம்பியழல் காணீரோ?
நீண்டுவரும் நினைவுகளால்
நிம்மதியை நாமிழந்து
வேண்டித் தொழுகின்றோம்
வேலவன் தாள் அமைதி கொள்வீர்.

- குடும்பத்தவர்

''இலங்காவாசா'',
கண்டி வீதி,
மீசாலை.

(சி-3417)

உ

## திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான ஈசுர வருஷம் பங்குனி மாதம் 29ஆம் நாள் (12-04-1998) ஞாயிற்றுக்கிழமை பகல் 10-17 மணி முதல் 12-11 மணி வரை வரும் சுபமுகூர்த்த வேளையில்

எமது புதல்வன்
திருநிறை செல்வன்
**கமலநாதன்**
அவர்களுக்கும்



எமது புதல்வி
திருநிறை செல்வி
**சந்திரமலர்**
அவர்களுக்கும்

எல்லாம் வல்ல இறைவன் திருவருள் துணைகொண்டு நவாலி, அந்திரான் முருகமூர்த்தி கோயிலில் திருமாங்கல்யதாரணம் நடைபெறப் பெரியோர்களால் நிச்சயித்திருப்பதால் அவ்வேளையில் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம், தங்கள் நல்வரவை நாடும்:

திரு. திருமதி சோமசுந்தரம்
''யோகா இல்லம்'',
24/3, 2ஆம் குறுக்கு வீதி,
கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.

திருமதி தவபாக்கியம் நாகேசு
சின்னப்பா வீதி,
நவாலி தெற்கு, மானிப்பாய்.

இருவீட்டார் அழைப்பு (54839)

வரும் சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு **மாபெரும் மலிவு விற்பனை**

❖ நங்கையர்க்கேற்ற புதிய சாறி வகைகள் ❖ ஸ்கேட் அன் பிளவுஸ், ❖ கவுண் வகைகள்
❖ சிறுவர்க்கேற்ற பேபிசூட் ❖ ஆடவர்களுக்கேற்ற ரவுசர்கள் ❖ சேட் ❖ ரீ சேட் வகைகளையும்
மற்றும் துணிவகைகள் அனைத்தையும் மலிவு விற்பனையில் பெற்றுக் கொள்ளலாம்.
அரிய சந்தர்ப்பத்தை நழுவ விடாதீர்கள்! முந்துங்கள்!! இச்சலுகை சில தினங்களுக்கு மட்டுமே!!!

**ரவி அன் ராஜ் சில்க்ஸ்** 77, பெரியகடை, யாழ்ப்பாணம்.

(54714)

## அறிவித்தல்

எதிர்வரும் புத்தாண்டு தினமான 14 – 04 – 1998 (செவ்வாய்) அன்று புதிய கணக்குகளை ஆரம்பிப்பதற்கும், பண வைப்புக்களை இடுவதற்குமாக தேசிய சேமிப்பு வங்கியின் சகல கிளைகளும் காலை 9 மணி தொடக்கம் 12 மணி வரை திறந்திருக்கும் என்பதை வாடிக்கையாளருக்கு மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

அன்றைய தினம் "ரிதீரேகா" பரிசுதிய சேமிப்புக் கணக்குகளையும் ஆரம்பிக்கலாம்.

**தேசிய சேமிப்பு வங்கி** யாழ்ப்பாணம்

(சி/3395)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெற்றி உறுதி படை...

(மூன்றாம் பக்கத் தொடர்)

களின் வழிகாட்டல்கள் — ஆலோசனைகள் — சிபார்சுகள்—போன்றவற்றைப்பெற்றுக் கொள்வது, அவர்களோடு தொடர்பு வைத்திருப்பது தண்டனைக்குரிய குற்றங்கள்'' — என்று அங்கு விளக்கிக் கூறிய பிரிகேடியர் மெண்டிஸ், அத்தகைய செயல்கள் பொறுத்துக் கொள்ளப்பட மாட்டா என்றும் சொன்னார்.

இது தொடர்பான அரசு கொண்டுவந்துள்ள புதிய சட்டவிதிகளின் பிரதிகளையும் அவர் அரச அதிகாரிகளுக்கு வழங்கினார்.

இந்தக் கூட்டத்திற்குப் பின்னர் அதிகாரிகள் பலர் வயிறு கலங்கிப்போயிருந்ததாகக்கூறப்படுகின்றது. கூட்டத்தில் பங்குபற்றி விட்டு வந்த ஓர் அதிகாரியிடம் கூட்டம் பற்றிக்கேட்ட போது ''ஒரு புறம் வேடன்; மறு புறம் நாகம்'' என்ற சினிமாப் பாட்டு வரியை பாடிக் காட்டி விட்டுபோய்விட்டார் அவர்.

ஒரு வகையில் அதிகாரிகள் பாடு ''இரு தலைக்கொள்ளி எறும்பு'' நிலைதான்.

மேற்படி சட்டவிதிகளில் பத்திரிகையாளருக்கு விலக்களிக்க அரசு எடுத்திருக்கும் தீர்மானம் பத்திரிகையாளர் மீதுபுதியபொறுப்பு ஒன்றைச் சுமத்தியிருப்பதாக ஆங்கிலப் பத்திரிகை ஒன்றில் பிரபல ஆங்கில விமர்சகர் ஒருவர் குறிப்பிட்டிருக்கின்றார்.

புலிகளுடன் பேசாமல் நாட்டில் அமைதி ஏற்படாது. புதிய சட்ட விதிகள் மூலம் புலிகளுடன் பேசுவதற்கான சகல வாசல்களும் மூடப்பட்டு விட்டன. அந்த விதிகளின்படி புலிகளுடன் தொடர்பு வைப்பதே தண்டனைக்குரிய கிரிமினல் குற்றம். புலிகளுடன் தொடர்பு கொள்ளாமல் பேச்சு நடத்துவது எப்படி? எனவே புதிய சட்ட விதிகளுடன் பேச்சுக்கு நிரந்தர மூடுவிழா நடத்தியாகி விட்டது என்றே கருதப்பட்டது.

ஆனால் மூடப்பட்ட வாசலில் ஒரு சாளரம் திறக்கப் பட்டது போல பத்திரிகையாளர்களுக்கு மட்டும் சட்ட விதிகளில் விலக்களிக்கப்பட்டிருக்கின்றது.

எனவே பத்திரிகையாளர்கள் மீது புதிய பொறுப்பு சுமத்தப்பட்டுள்ளது. புலிகளை பேச்சுக்கு அழைத்து வருவதானால் அது இனி மேல் பத்திரிகையாளர்களால்தான் முடியும். அந்தப் பாத்திரத்தை பத்திரிகையாளர்கள் சரியாக ஆற்ற வேண்டும்.

பத்திரிகையாளர்கள் புலிகளுடன் பேச்சு, தொடர்பு வைப்பதை அனுமதிக்கும் விதத்தில் புதிய சட்ட விதிகளில் அரசு கொண்டு வரும் மாற்றத்தைப் பயன்படுத்தி சரியான வழியில் பத்திரிகையாளர்கள் செயல்படுவதற்கு அந்தப் பத்திரிகையாளர்கள் சார்ந்த நிறுவனத்துக்கும் புதிய பொறுப்பும், பங்களிப்பும் ஏற்பட்டுள்ளது என்று அந்த விமர்சகர் குறிப்பிடுகின்றார்.

ஆனால் யாழ். பத்திரிகையாளர்களைப் பொறுத்தவரை புதிய சட்ட விதிகளில் கொண்டு வரப்பட்ட தளர்வு மன ஆறுதலையும், உளைச்சலையும் குறைத்திருக்க வேண்டும் என்றே கூற வேண்டும்.

பத்திரிகையாளன் என்ற முறையில் புலிகளைச் சந்திப்பது தண்டனைக்குரிய குற்றமா? அதை வைத்து பத்திரிகையாளர்களைகைது செய்து, சட்டத்தின் கீழ் கொண்டு போய் நிறுத்த முடியுமா? — என்ற கேள்விகளுக்கு திட்டவட்டமான பதில் தெரியாமல் இதுவரை யாழ். பத்திரிகையாளர்கள் முழித்துக் கொண்டு இருந்தார்கள்.

இப்போது புலிகளுடன் தொடர்பு வைப்பது கடும் குற்றம் என்ற சட்ட விதியைப் பிரகடனப்படுத்தி பின்னர் அதிலிருந்து பத்திரிகையாளர்களுக்கு விலக்களித்திருப்பதாக அறிவித்திருப்பது இந்த விடயத்தில் பத்திரிகையாளர்கள் சம்பந்தமான நிலைப்பாட்டை ஓரளவு தெளிவுபடுத்தி விட்டது.

என்றாலும், யாழ்ப்பாணத்தில் புலிகளுடன் தொடர்பு வைக்கக் கூடிய பத்திரிகையாளர்கள் யார் என்பதை கணித்து, அவர்களின் நடமாட்டங்களையும் போக்கையும் தொடர்வதில் அரசுப் படைகள் அசட்டையீனமாக இல்லை என்பதை உணர—உறுதிப்படுத்த—முடிகின்றது. முக்கிய பத்திரிகைப் பிரமுகர்களின் நகர்வு உளவு பார்ப்பதோடு இது விடயத்தில் பத்திரிகைப் பணிக்கு அப்பால் ஏதேனும் 'இசகு பிசகான' வேலைகளை அவர்கள் செய்கின்றார்களா என்பதை கண்ணுக்குள் எண்ணெய் விட்டுக் கொண்டு அவதானிப்பதிலும் உளவுப் பிரிவு வலு உன்னிப்பாக உள்ளதை அறிய முடிந்தது.

இந்த விவகாரத்தில் இராணுவ உளவுப்பிரிவு மிக அவதானமாக இருப்பதை உறுதிப்படுத்துவதற்கு கடந்த ஆண்டு மத்தியில் 'உதயன்' —'சஞ்சீவி' பாதுகாப்புச் செய்தியாளருக்கு 51 ஆவது டிவிஷன் கட்டளைப் பீடத்திலிருந்து வந்த அறிவுறுத்தல்— அல்லது எச்சரிக்கை— கடிதம் போதுமானது.

''யாழ்ப்பாணத்தில் செயற்படும் புலிகளுடன் நீங்கள் பல தடவைகள் தொடர்பு கொண்டிருப்பதை உறுப்படுத்தும் மிக நம்பிக்கையான தகவல்கள் கிடைத்துள்ளன. ஆனால் இது குறித்து இராணுவத்துக்கோ பொலீஸாருக்கோ இதுவரை உத்தியோகபூர்வமாக தகவல் தர நீர் தவறியுள்ளீர். பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் புலிகளைப் பற்றி தகவல்களைத் தராமல் மறைப்பது குற்றமாதலால் அத்தகைய தகவல்களை மறைப்பதை தவிர்த்துக் கொள்ளும்படி உமக்கு ஆலோசனை கூறப்படுகின்றது'' — என கட்டளைத் தளபதியால் அனுப்பப்பட்ட அக்கடிதம் தெரிவிக்கின்றது.

அக்கடிதத்தின் பின்னர் யாழ்ப்பாணத்தில் பத்திரிகையாளர் மீதான கண்காணிப்பு கூடியிருக்கின்றது. என்றாலும் நேரடி அழுத்தம் ஏதும் போடாமல் — அளவு மீறாமல்—குடாநாட்டின் இராணுவத் தலைமைப்பீடம் அவதானமாக இருக்கின்றது என [illegible] வேண்டும்.

★

## அதிரடி அரங்கு

கட்டுப்பாட்டு அதிகாரங்கள் கைமாறும் போது கலாசார சீரழிவுகள் ஏற்படுவது குறித்து இரு வாரங்களுக்கு முன்னர் இப்பத்தியில் குறிப்பிட்டிருந்தோம்.

கலாசார சீரழிவில் முக்கிய சாதனமாக இருப்பது மினி சினிமாக்கள். அது பற்றி பல தடவைகள் இங்கு பிரஸ்தாபித்தாகி விட்டது.

புதிய தகவல் இது:- கல்வியங்காட்டுப் பகுதியில் ஒரு மினி சினிமா ஒரே ('ஓர் A') ஓட்டமாக உள்ளதாம். தாங்க முடியாமல் யாழ்ப்பாணத்தில் இயங்கும் தமிழ்க் கட்சி ஒன்றின் பிரமுகர்கள் சம்பந்தப்பட்ட நபரைக் கூட்டி வந்து விசாரித்தனர். 'ஏ' பட வீடியோ கசெட்டையும் பறிமுதல் செய்தனர். ஆனால் 'உங்களுக்கு தட்டிக் கேட்கும் பொலிஸ் அதிகாரம் இல்லை' என்று அவர்களுக்கு வாய்ச்சவாடல் அடித்து விட்டு தொடர்ந்து தமது மினி சினிமாவில் 'ஒரே' ஓட்டமாக இருக்கின்றார் அந்நபர். அங்கு இப்போது 'A' ஓட்டம் ஒடுவது 'காம சூத்திரா.'

பண்பாட்டுக் கோலங்கள் எந்த வடிவை எடுத்துள்ளன என்பதை கடந்த செவ்வாயன்று துரையப்பா விளையாட்டரங்கில் நடந்த இசை நிகழ்ச்சிகளின் போது அங்கு இடம் பெற்ற ஆடல், பாடல் பைலா, கூத்து— கும்மாளம் ஆகியவை கோடிட்டுக் காட்டின.

பண்பாடு, மொழி, இனம் என்ற தனித்தனி அடையாளங்கள் இருந்தால்தானே அவற்றைப் பேணுவதற்காக போராட்டம், யுத்தம், சமர் என்றெல்லாம் வரும்.

எனவே அவை எல்லாவற்றையும் ஒரு குலுக்குக் குலுக்கி — கலக்குக் கலக்கி — தனித்தனி அடையாளத்தை உடைத்து விட்டால் பிரச்சினைக்குத் தீர்வு ஏற்பட்டு விடும் என சம்பந்தப்பட்டோர் எண்ணியிருக்கலாம்.

★ ★ ★ ★ ★

உதைபந்தாட்ட மைதானத்திலே போட்டி முடிந்ததும், ஆட்டத்துக்குப் பயன்படுத்திய உதைபந்தை சுருட்டிக் கொண்டு போகும் கூட்டம் ஒன்று குறித்து கடந்தவாரம் இப்பத்தியில் குறிப்பிட்டிருந்தோம். அந்தத் தகவல் பிரசுரமான அன்று மாலை கூட யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட மைதானத்தில் நடந்த ஓர் உதைபந்தாட்டப் போட்டியில் விளையாடிய பந்து இக் கூட்டத்தால் சுருட்டிக் கொண்டு போகப்பட்டது. கடந்த செவ்வாயன்று காலையில் யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் நடந்த கரப்பந்தாட்ட இறுதிப் போட்டியின் போது பயன்படுத்திய பந்தும் இறுதியாட்டம் முடிந்ததும் அபேஸ்!

பந்து காணாமல் போகும் விடயம் தொடர்கதையாவது ஒரு சந்தேகத்தை எழுப்புகின்றது. விளையாட்டுத்துறை ஏற்பாட்டாளர்கள் அவ்வளவு ஏமாளிகளா?

★ ★ ★ ★ ★

நல்லவற்றைப் பாராட்டவே வேண்டும்.

அண்மையில் யாழ். பல்கலைக்கழகத்தில் புது அனுமதி பெற்ற விஞ்ஞானபீட மாணவர்களை சிரேஷ்ட மாணவர்கள் கௌரவமான முறையில் வரவேற்று நடத்தியதாகத் தகவல்;வழமையான 'ராகிங்' அசுரனை அழைக்காமல், பெரும்பாலான சிரேஷ்ட மாணவர்கள் தமக்குரிய நற்பண்புகளைப் பேணியதாகவும் தகவல்.

சபாஷ்! சிரேஷ்ட மாணவர்களே! யாழ். கல்விச் சமூகம் உங்கள் முன்மாதிரியைப் பின்பற்றட்டும்.

★ ★ ★ ★ ★

ஐரோப்பிய யூனியனின் தூதர் இல்கா ஊசித்தலோ அண்மையில் யாழ். வந்தார். அவரை யாழ். ஆயர் சந்தித்துப் பேசினார். யாழ். நிலைமை குறித்து யாழ். ஆயர் விளக்கினார். அப்போது ஐரோப்பிய யூனியன் தூதர் கூறிய கருத்துக்கள் இவை:-

''இங்கு எம்மைச் சந்தித்த யாழ். இராணுவ அதிகாரிகள் யாழ்ப்பாணத்தில் அது செய்யுங்கள்; இது செய்யுங்கள் — என்று கேட்கின்றார்கள். ஆனால் கொழும்பில் உள்ள உயரதிகாரிகள் பாதுகாப்பு என்ற காரணத்தைக் கூறி, இங்கு எதையும் செய்ய அனுமதிக்கின்றார்கள் இல்லை. சிறிய வேலை செய்யவேண்டும் என்றாலும் பலவித பிரச்சினைகளை நாம் எதிர்நோக்குகிறோம். இதனால் இங்கு ஒன்றும் செய்ய முடியாதுள்ளது. இந்த இடைவெளி நீங்கினால் தான் எதுவும் செய்ய முடியும்'' —என்றார்.

வடக்கில் அபிவிருத்தி, சமாதானம், சுபீட்சம், சௌபன்யமான வாழ்வு என்றெல்லாம் கூறும் யாழ். படை அதிகாரிகளுக்கு இது சமர்ப்பணம்.

— மின்னல்

# வீடமைப்புக் கடன் பெற விண்ணப்பிக்க கோரிக்கை

யாழ்ப்பாணம், ஏப். 11

நகர, கிராமிய வீடமைப்புத் திட்டங்களின் கீழ் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் யாழ். மாவட்ட அலுவலகத்தினால் 20 ஆயிரம் ரூபா வரையான வீடமைப்புக் கடன் உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

ரூபா25ஆயிரம் முதல் ரூபா 7 ஆயிரத்து 500 வரையான வருமானத்தைப் பெற்றுக் கொள்ளும் குடும்பங்கள் இக் கடனைப் பெற்றுக்கொள்ள முடியும். வீடமைப்புக் கடனைப் பெற்றுக்கொள்ள விரும்புபவர்கள் உடனடியாக தத்தமது பிரதேச செயலகத்தில் கடமையாற்றும் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களுடனோ அல்லது அதிகார சபையின் மாவட்ட அலுவலகத்துடனோ தொடர்பு கொள்ளுமாறு தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை முகாமையாளர் சு. மாசிலாமணி தெரிவித்துள்ளார். (ஐ–ரீ)


யாழ். மாவட்ட

தனியார் பாரவூர்தி உரிமையாளர் கூட்டுறவுச் சங்கம்

(வ/து)

விசேட பொதுக்கூட்டம்

காலம்: 12 - 04 - 1998 ஞாயிறு காலை 9மணி
இடம்: சங்கப் பணிமனை
விடயம்: புதிய கேள்வி கோரல் சம்பந்தமாக கலந்துரையாடல்

அங்கத்தவர்கள் அனைவரும் தவறாது சமுகம் தரும்படி கேட்டுக் கொள்கிறோம்.

''ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு''

S. S. மரியநாயகம்
செயலாளர்

209, பழைய பூங்கா வீதி,
யாழ்ப்பாணம்.

(54806)



முக்கிய அறிவித்தல்

யா / புனித அந்தோனியார் கல்லூரி
ஊர்காவற்றுறை
புனரமைப்பு நிதி உதவிக்காக

பழைய மாணவர் சங்கத்தால் 12 – 04 – 98 அன்று நடத்தப்படவிருந்த அதிர்ஷ்ட லாபச் சீட்டிழுப்பு தவிர்க்க முடியாத காரணத்தினால் **01—05—98** அன்று நடத்தப்படும் என்பதை தாழ்மையுடன் அறியத் தருகின்றோம். அத்துடன் அதிர்ஷ்டலாபச் சீட்டு ரிக்கட்டுகள் யாவும் 30 – 04 – 98 வரையும் செல்லுபடியாகும் என்பதையும் அறியத்தருகின்றோம்.

பழைய மாணவர் சங்கம்.

(54816)



வேலை வாய்ப்பு

கொழும்பிலுள்ள
கண்ணாடித் தொழிற்சாலைக்கு
வேலையாள்கள் தேவை.

முன் அனுபவமுள்ள கண்ணாடி ஊதுபவர் (Blower), உதவுபவர் (Helper), குமிழி செய்பவர் (Bubbler) நேரில் கீழ்வரும் முகவரிக்கு 16ஆம் 17ஆம் 18 ஆம் திகதிகளில் (ஏப்ரல்) காலை 8.30 – 11.30 மணிக்கு இடையில் சமுகமளிக்கவும்.

முகவரி:

எஸ். சுந்தரலிங்கம்,
சுந்தரம் மில்ஸ்,
555, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

(சி/3364)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சங்கிலியன் மன்றம்

## நல்லூர் சனசமூக நிலையம்

## புதிய கட்டட கோலாகல

## திறப்பு விழா

காலம்:- 12 - 04 - 1998
ஞாயிறு மாலை 3. 00 மணி

தலைவர்: திரு. தி. ஸ்ரீஸ்கந்தராஜா
(நிலையத் தலைவர்)

மங்கள இசை: வானொலி புகழ் பிச்சையப்பா குழுவினர்

மங்கள விளக்கேற்றல்:
திரு. வ. பரமசிவம் (யா. மா. ச. உறுப்பினர்)
திருமதி ருக்மணியம்மா மகேந்திரன்
(உதவித் திட்டமிடல் பணிப்பாளர்)
திரு. க. ஏகாம்பரம் (தலைவர், சட்டநாதர் ஆலய பரிபாலன சபை)
திரு. பொ. இராசலிங்கம்
(பரஸ்கோ உரிமையாளர்)
டாக்டர் லயன் தியாகராசா (மெடி எயிட்ஸ்)

வரவேற்புரை: திரு. இ. சந்திரகுமார்
(கிராம அலுவலர், நல்லூர்)

ஆசியுரை: ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்
(நல்லை ஆதீன முதல்வர்)
திரு. சி. கனகரட்ணம் (தலைவர் திவ்விய ஜீவன சங்கம்)

பிரதம விருந்தினர்:
திரு. க. சண்முகநாதன் (யாழ். அரச அதிபர்)

சிறப்பு விருந்தினர்:
திரு. வே. பொ. பாலசிங்கம்
(ஆணையாளர், யாழ்ப்பாண மாநகரசபை)
திரு. து. வைத்திலிங்கம் (மேலதிக அரச அதிபர்)
திரு. க. கனகரட்ணம் (பிரதேச செயலர் நல்லூர்)
மு. சபாநாதன் (பதில் நீதிபதி, மல்லாகம்)
சீ. வீ. கே. சிவஞானம் (தலைவர், யா. மா. ப. நோ. கூ. ச.)
திரு. எஸ். வேல்முருகுப்பிள்ளை (உதவிப் பிரதேச செயலர், நல்லூர்)

நன்றியுரை: நா. ரகுமார் (உப செயலாளர்)

கலை நிகழ்ச்சிகள்
ஈச்சமோட்டை றீகல் மூவீஸ் வழங்கும்
20 அடி வெண்திரையில்
சுப்பர் ஸ்ரார் ரஜனிகாந்தின் "பாட்ஷா"
(திரைப்படம்)

[54834] - நிர்வாகத்தினர்.

# ஓராண்டு நினைவஞ்சலி



| மலர்வு: | உதிர்வு: |
|---|---|
| 24 | 23 |
| 07 | 03 |
| 1954 | 1997 |

## அமரர் சு. பாலசுந்தரம்

(அஞ்சல் அலுவலக உப அதிபர் பளை).

(திதி:11-04-1998)

அன்புடனும் பாசத்துடனும் எம்மை வழிநடத்தி எம்மை விட்டுப் பிரிந்தாலும் எம் நெஞ்சத்தை விட்டகலாத அருமைத் தந்தையே! நீர் ஆண்டவனடியில் சேர்ந்து இன்றுடன் ஓராண்டு கடந்து விட்டது. இம் மண்ணில் எம்முடல் வாழுமட்டும் உங்களின் அன்புத் திருமுகம் மறையாது. உங்களின் ஆத்ம சாந்திக்காக அன்னையும் நாமும் பிரார்த்திக்கின்றோம்.

உங்களின் பிரிவால் துயருறும்
மனைவி, பிள்ளைகள், தாயார்.

அல்வாய் கிழக்கு,
அல்வாய்.

(54838)

# மாதாந்தகருத்தரங்கு

நல்லூர்பிரதேசசபைநடத்தும் மாதாந்தக் கருத்தரங்கு இன்று சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு கொக்குவில் உபஅலுவலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

''நாம் எங்கே?'' என்ற தலைப்பில் யாழ். பல்கலைக்கழக சமூகவியல்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் ஜி. எம். செபஸ்தியாம்பிள்ளை உரையாற்றுவார்.

# பரிசளிப்பு

வடமராட்சிப் பாடசாலைகளுக்கிடையே நடைபெற்ற திருக்குறள் போட்டியில் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசளிப்பு விழா க. சி. கு. நூற்பதிப்புக் கழகத் தலைவர் பா. தனபாலன் தலைமையில் இன்று சனிக்கிழமை காலை 9.00 மணியளவில் நெல்லியடி மெதடிஸ்தமிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை மண்டபத்தில் நடைபெறும்.

''குறள் கூறும் ஒழுக்கவியற் சிந்தனைகள்'' என்ற தலைப்பில் யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி கலைவாணி இராமநாதன் சிறப்புரையாற்றுவார்.

அத்துடன் ''வையத்துள் வாழ்வாங்கு வாழ வழி வகுக்கும் திருக்குறள்'' என்னும் பொருளில் யாழ். பல்கலைக்கழக இந்துநாககரித்துறைத் தலைவர் பேராசிரியர் கலாநிதி ப. கோபாலகிருஷ்ண ஐயர் பேருரையாற்றுவார்,

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை

## விற்பனைக்கு

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பட்டமளிப்பு விழாவிற்குப் பாவிக்கப்பட்ட மஞ்சள் நிற அங்கிகளும் மாலைகளும் (மேடாலியன்) பட்டதாரிகளுக்கு விற்பனைக்கு வழங்கப்படவுள்ளன.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பட்டப்படிப்பு, டிப்ளோமா, முதுமாணி, முதுமெய்யியல் மாணி, முதுவிஞ்ஞான மாணி, கலாநிதி ஆகிய கற்கைநெறிகளில் பட்டம் பெற்றவர்கள் அதற்கான அத்தாட்சியைக் காண்பித்து ஓர் அங்கிக்கும் மாலைக்குமாக ரூபா 100/ மட்டும் பல்கலைக்கழகக் காசாளரிடம் செலுத்தி பற்றுச்சீட்டினை கல்விக் கிளையில் சமர்ப்பித்து 1998-04-16 தொடக்கம் 1998 - 05 - 10 ஆம் திகதி வரை பெற்றுக் கொள்ளலாம்.

கலாநிதி
க. குணராசா
பதிவாளர்
1998. 04. 07

(சி/3393)

# வடமராட்சி மக்களுக்கு ஒரு நற் செய்தி!

எதிர்வரும் புத்தாண்டை முன்னிட்டு
எமது ஸ்தாபனங்களில்

## மலிவுவிற்பனை

★ சாறி வகைகள், சேட்வகைகள்
★ ஸ்கேட் அன்ட் பிளவுஸ்
★ சிறுவர்களின் ஆடை வகைகள்

அனைத்தையும் பெற்றுக் கொள்ள

## புதிய சீமாட்டி, சகுந்தலா

ஆகிய புடைவை நிலையங்களை நாடுங்கள்.

**புதிய சீமாட்டி,**
நெல்லியடி, கரவெட்டி.

**சகுந்தலா**
நெல்லியடி, கரவெட்டி (54849)

# கண்ணீர் அஞ்சலி

எமது வடமராட்சிக் கிளையைச் சேர்ந்த
திரு. க. பாலச்சந்திரன்
(மைலன் பேக்கரி உரிமையாளர்)
அவர்களின் தாயாராகிய

திருமதி
## பூலச்சுமி கதிர்காமத்தம்பி

அவர்களின் மரணச் செய்திகேட்டு துயரடைகின்றோம். அன்னாரின் இழப்பால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதோடு அவரின் ஆத்மா சாந்தி அடையவும் பிரார்த்திக்கின்றோம்.

யாழ். மாவட்ட
பேக்கரி உரிமையாளர் சங்கம்.

39, 3 ஆம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.

(சி/3424)

# கண்ணீர் அஞ்சலி

## செல்வன் பசுபதி சிவவாசன்

(பேரதெனியா, பொறியியல் பீட மாணவன்)
எமது உதவி அரசாங்க அதிபர் திரு. சி. பசுபதி
அவர்களின் கனிஷ்ட புதல்வன்

செல்வன் பசுபதி சிவவாசன்

அகாலமரண மெய்திய செய்தி கேட்டு ஆறாத் துயர் அடைகின்றோம்.

அவரது பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்து எமது கண்ணீர்த் துளிகளைக் காணிக்கையாக்குகின்றோம்.

நலன்புரிச்சங்கம்
வடமராட்சி கிழக்கு உ, அ. அதிபர் பணிமனை
மருதங்கேணி.

(54845)

# கண்ணீர் அஞ்சலி

## செல்வன் பசுபதி சிவவாசன்

எமது சங்கத் தலைவர்
திரு. சி. பசுபதி அவர்களினது கனிஷ்ட புத்திரன் செல்வன் ப. சிவவாசன் அவர்களின் திடீர்மறைவு எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்தி நிற்கிறது.

இவரது பிரிவால் துயருறும் குடும்பத்தினரது துயரலைகளில் நாமும் பங்குகொண்டு கண்ணீர் துளிகளை காணிக்கையாக்குகின்றோம்.

நெறியாளர்களும்
பணியாளர்களும்
வடமராட்சி கிழக்கு பல. நோ. கூ. சங்கம்,
மருதங்கேணி. (54846)

# யாழ். வண்ணை ஸ்ரீ வைத்தீஸ்வரன் கோயில்

இன்று (11-04-1998) பூங்காவன உற்சவம்

காலை 9-00 மணிக்கு 16 கால் மண்டபத்தில் அம்பாள் தபசு.
மாலை 3-00 மணிக்கு கன்னி ஊஞ்சல்
மாலை 4-00 மணிக்கு திருக்கல்யாணமும் தொடர்ந்து திருவீதியுலாவும் இடம்பெறும்.
மங்கள இசை: அளவெட்டி N.K. பத்மநாதன் குழுவினர், கோண்டாவில் V.K. கானமூர்த்தி குழுவினர்.
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

539, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(54855)

விழா உபயம்: கனகசபை தர்மகுலசிங்கம்
''பழமுதிர்சோலை'', காரைநகர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எடிசன் அக்கடமி

(யாழ். இந்துக்கல்லூரி அருகில்)
411, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

## புலமைப் பரிசில் வகுப்பு

ஆண்டு 4, 5

வகுப்பும் பயிற்சிப்பரீட்சையும்

★ அனுபவமும் ஆற்றலும் மிக்க ஆசிரியர் குழுவால் போதிக்கப்படும்.
★ யாழ். புதிய கல்வி நிலைய ஆசிரியர் த. அம்பிகை பாகனால் கொழும்பில் நடைபெறும் அதே பரீட்சை அவரின் அனுசரணையுடன் எமது நிறுவனத்திலும் நடைபெற ஏற்பாடாகி உள்ளது.
★ பரீட்சை வினாத்தாள்களுக்கு விளக்க வகுப்பும் நடைபெறும்.

ஆரம்பம்: **12—04—1998** ஞாயிறு பி. ப. 3-00 மணி
ஆரம்ப நாள் தகுதிகாண் பரீட்சை ஒன்று நடைபெறும். (54856)



# கண்ணீர் அஞ்சலி

வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர்
**திரு சி. பசுபதி**
அவர்களின் புதல்வரான

## செல்வன் சிவவாசன்

(பேராதனை பொறியியல் பீட மாணவன்)

அகாலமரணமானதையிட்டு அன்னாரின் இழப்பினால் வாடும் குடும்பத்தினருக்கு அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அன்னாருக்கு எமது கண்ணீர்ப் பூக்களை காணிக்கையாக்குகின்றோம்.

(54854) குடத்தனை, மணற்காடு மக்கள்.



எமது வீடியோ
CD வெளியீடுகள்

★ வேட்டிய மடிச்சுக்கட்டு.
★ இனியெல்லாம் சுகமே.
★ குரு சிஷ்யன்.
★ சகலகலா வல்லவன்.
★ நான் சிகப்பு மனிதன்.
★ மிஸ்டர் பாரத்.
★ உயர்ந்த உள்ளம்.
★ வசந்த மாளிகை.
★ உதய கீதம்.
★ பூவரசன்.

**சுப்பலோ வீடியோ**
யாழ்ப்பாணம்.
(சி/3425)



Spoken English
with
Grammer
**by A. Britto**

புதிய பிரிவு
ஆரம்பம்: 13-04-1998
நேரம்: காலை 7-00 மணி
(திங்கள், புதன், வெள்ளி)
இடம்:
ஞானபண்டிதர்
வித்தியாலயம் அருகில்

- நிர்வாகி

(சி/3421)


## பொறியியல்...

(முதலாம் பக்கத் தொடர்)

சைக்கிளில் பயணம்செய்த— உடுப்பிட்டி இமையாணனைச் சேர்ந்த — சிதம்பரப்பிள்ளை கணேசன் (வயது-38) என்பவர் படுகாயமுற்ற நிலையில் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

## ஒட்ட...

(முதலாம் பக்கத் தொடர்)

பட்டதாகவும் அறிவிக்கப்பட்டது.

இத்தடை காரணமாக அடுத்த மாதம் பெய்ஜிங்கில் நடைபெறும் சர்வதேசப் போட்டியிலும் —

இரண்டாயிரமாம் ஆண்டில் நடைபெறும் ஒலிம்பிக் போட்டியிலும்— அவர் பங்குபற்ற முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

# ஆறுநாள் இசைவிழா

யாழ்ப்பாணம், ஏப். 11

நல்லூர் இளங்கலைஞர் மன்றத்தின் 16 ஆவது இசைவிழா இன்று சனிக்கிழமை முதல் ஆரம்பமாகி எதிர்வரும் 16 ஆம் திகதி வியாழக்கிழமை வரை சட்டநாதர் வீதியில் உள்ள கலா மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இன்றைய நிகழ்வில் நந்தினி தனேந்திரகுமார், அலெக்சி அலெக்சாந்தர் ஆகியோரின் இரு வயலினிசை, பங்கயற்செல்வி தவபாக்கியநாதனின் பாட்டு, கே. இராமநாதனின் இசைக் கச்சேரி என்பன இடம்பெறும்.

பிரதம விருந்தினராக கோப்பாய் ஆசிரிய கலாசாலை அதிபர் கலாநிதி காரை செ. சுந்தரம்பிள்ளை கலந்து கொள்வார். (அ)


# கண்ணீர் அஞ்சலி

எமது பணிமனையில் களஞ்சியக் காப்பாளராகக் கடமையாற்றும்
திரு. க. குணலிங்கம் அவர்களின் தந்தையார்

## திரு. க. கந்தையா

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அலுவலக உத்தியோகத்தர்கள்,
ஊழியர்கள்.

போதனா வைத்தியசாலை,
யாழ்ப்பாணம்.

(54843)



# ஈரவிழிகளோடும் கனத்த இதயங்களோடும்

மலர்வு: 11-11-1974 உதிர்வு: 09-04-1998

## பசுபதி சிவவாசன்

(2 ஆம் வருட பொறியியல் பீட மாணவன்,
பேராதனைப் பல்கலைக் கழகம்)

வாசனே,
ஒன்றாய் கூடித்திரிந்த நாள்களை எப்படியடா
- மறப்போம்?
கபடமற்ற உன்பேச்சில் எம்மையெல்லாம்
- ஈர்த்தாயே!
பரீட்சை லீவு கூடிப்போச்சென்று பாதியைக் கழிக்க
பிறந்த மண்ணுக்கு ஓடோடி வந்தாயே!
'கிளியறன்ஸ்' கிடைத்தவுடன் நீயாடிய
- ஆட்டமென்ன?
பொல்லாத காலனவன் பலியெடுக்கப்போறானென
- அப்போது யாரறிந்தார்?
கல்லாக்கி மனதை, காலமெல்லாம் உனை
நினைப்போம்.

பொறியியல் பீட மாணவர்கள்
(54853) பேராதனைப் பல்கலைக்கழகம்.



# ஏப்பிரல் 12ஆம் திகதி 1998

## மறந்துவிடாதீர்கள்!

இவ் வருடத்தின் மிகப் பெரிய இசைவிருந்து

இல: 02, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். — இல. 99, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

**நதியா நகை மாடம் - நிதியா நகை மாடம்**
ஆதரவில்
ஜோ. எகட்டனின் ''செனித்'' மாக்கட்டிங் அன்ட் அட்வடைசிங் சிஸ்டம்ஸ்
பெருமையுடன் வழங்கும்

## சித்திரையில் ஓர் மாலை

ஆனந்த் இசைக் குழுவினரின் **இசை விருந்தும்**
ஆ. சங்கரின் **பிறேக் நடனமும்**

உங்கள் அபிமான வானொலி அறிவிப்பாளர்கள்
**ஜோக்கிம் பெர்னான்டோ** **ரேலங்கி செல்வராசா**
**கே. ஜெ. சுரேஸ் ஆனந்த்**

நிகழ்ச்சிக்கு பிரதம அதிதி: உயர்திரு. எஸ். நமசிவாயம்
[யாழ். வர்த்தக சங்கச் செயலாளர்]
கௌரவ விருந்தினர்: திரு. K. இராசதுரை [அதிபர், யாழ். மத்திய கல்லூரி]
இடம்: யாழ். மத்திய கல்லூரி மண்டபம்
நேரம்; **2-30** மணி (பழைய நேரம்)
டிக்கற்: ரூபா **20/-**
(குறிப்பிட்ட ஆசனங்கள் மட்டுமே உள்ளதால் மண்டப வாயிலில் பெற்றுக் கொள்ளலாம்.

உரிமையாளர்
(54840) நதியா + நிதியா நகை மாடம்



**SALE** **SALE**

இதோ!

மலரும் புத்தாண்டை முன்னிட்டு
**மகாநதி** யின் மாபெரும் சிறப்புத் தள்ளுபடி
10% முதல் 30% வரையிலான சிறப்புத் தள்ளுபடி
இத்தள்ளுபடி 08 - 04 - 98 முதல் 14 - 04 - 98 வரைக்குமே!

நதிகளின் சங்கமம் கடலில்; சகலவித புடைவைகளின் சங்கமம்
மகாநதியில்
ஆம்

மலரும் புத்தாண்டை முன்னிட்டு இந்தியா, பாங்கொக் ஆகிய நாடுகளில் இருந்து பிரத்தியேகமாக வரவழைக்கப்பட்ட சிறியோர் முதல் பெரியோர் வரை இருபாலாருக்குமான ஆடைகளை கண்கவர் வர்ணங்களில் தெரிவு செய்ய

# மகாநதி புடைவை அகம்

[பட்டுப் புடைவைகளுக்கு கைராசியான நிறுவனம்]

16, நவீனசந்தை, யாழ்ப்பாணம். — 4, நவீனசந்தை, சாவகச்சேரி.
[சி/3375]



நெல்லியடி சனசமூக நிலையம்

# பொன்விழா

**யாழ். E. S. பேரம்பலம்**
நிறுவனத்தின் ஆதரவுடன் நடத்தும்
**மாபெரும் 30 மைல்**

## சைக்கிள் ஓட்டப் போட்டி

நாளை (12-04-1998) நடைபெறும் இப்போட்டியில் பங்குபற்ற பதிவு செய்தவர்களைதத்தமது அடையாள அட்டையுடன் நாளை காலை 7 மணிக்கு (புதிய நேரம்) யாழ். E. S. பேரம்பலம் நிறுவனத்துக்குமுன் சமுகம் தருமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

வடமராட்சிப் பகுதியில் இருந்து போட்டியில் பங்குபற்ற பதிவு செய்தவர்கள் நாளை காலை 6-00 மணிக்கு (புதிய நேரம்) நெல்லியடி பஸ் நிலையத்தில் சமுகம் தந்தால் போட்டியில் பங்குபற்ற வாகன வசதி செய்து தரப்படும்.

குறிப்பிட்ட நேரத்துக்கு சமுகம் தந்து போட்டியில் பங்கு பற்ற வேண்டும். தாமதமாக வருபவர்களுக்கு நாம் பொறுப்பல்ல.

தலைவர்,
நெல்லியடி சனசமூக நிலையம்.
(சி/3426)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்)லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில், 11 -04-1998 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சஞ்சீவி

# சஞ்சிகை

11 – 04 – 1998 சஞ்சீவி




ராகம்ஸ்
பட்டுச் சோலை

மலிவு விற்பனை
புதுவருடம் வரையே

உங்கள் தெரிவிற்கு முந்துங்கள்!

ராகம்ஸ் பட்டுச்சோலை

24, நவீனசந்தை, யாழ்ப்பாணம்.

(சி/3381)


## கருத்துக் கலசம்

மயூரா

### படுகுழி நோக்கி!

எங்கள் நன்மரபுகளில் ஒன்றாக விளங்கிய குரு — சிஷ்ய நல்லுறவு இப்போது தேய்ந்து வருகிறது. இது எமது சமூகத்தைப் பற்றிப் படர்ந்து வரும் பலவகைச் சீர்கேடுகளில் ஒன்று!

மாதாவுடனும் பிதாவுடனும் — பெற்றோருடன் — சேர்த்துக் குருவையும் தெய்வமாக மதித்துப் போற்றிய பாரம்பரியம் எம்முடையது. ஆனால் இப்போது அந்த மேன்மையுறு நிலையைக் காண முடியவில்லை.

அறிவு முதல் ஆற்றல் வரை முதிர்ச்சி அடைந்து, ஒருவன் 'மனிதனாக'ப் பருவம் காணும் வரை, இளமைப் பருவத்தில் — மிகக் குறிப்பாக மாணவப் பருவத்தில் — குருவே அவனுக்கு வழிகாட்டியாகவும் ஆசானாகவும் விளங்குவது உண்டு.

எந்தத் தொழிலையோ அல்லது கலையையோ பயில்வதாயினும் ஒரு குருவின் கீழேயே கற்றுச் சிறப்புறுவது பாரம்பரியம்.

பாடசாலைக் கல்வி முறை வந்த பின்னர் குரு, ஆசிரியர் ஆனார். ஆசிரியர் அறிமுகமான பின்னரும், கடந்த மூன்று தசாப்தங்களுக்கு முந்திய காலம் வரை, ஆசிரியர் — மாணவன் நல்லுறவும் அன்னியோன்யமும் மிகச் சிறப்பாகவே பேணப்பட்டு வந்தன.

ஆசிரியர்கள் தங்களைத் தண்டிக்க நேர்ந்தால் அது தமது முன்னேற்றம், வளர்ச்சி, நல்லொழுக்கம் கருதியதே என்று ஏற்றுக்கொண்ட மாணவர் சமூகம் முந்தியது.

ஆனால் இப்போது......?

நல்லொழுக்கம் கருதி மாணவர்களைத் தண்டித்த பாடசாலை அதிபரை, மாணவர்கள் ஒன்று சேர்ந்து வீடு தேடிச் சென்று தாக்கும் அளவுக்கு மாணவர்கள் வன்முறை மனப்பாங்காளர்களாக மாறியுள்ளனர்.

பெற்றோர்களும் மாணவர்களுடன் சேர்ந்து கொண்டனர் என்பது மேலும் எமது சமூக விழுமியங்கள் மிகமிக வேகமாக அழிந்து போவதையே பிரதிபலிக்கிறது!

குற்றம் செய்யும் மாணவனை கண்டிப்பதை, தண்டிப்பதை சகித்துக் கொள்ள முடியாத ஒரு சமூகத்தில், எவ்வாறு நல்லொழுக்கமுடைய மாணவர்கள் உருவாக முடியும்.

ஆசிரியர்கள், அதிபர்களுக்கு அடங்கி நடக்காத மாணவர் சமூகம் எவ்வாறு ஒழுக்கமுடைய, கட்டுப்பாடுடைய சமூகமாக வளரமுடியும்?

தாம் மாணவனைத் தண்டித்தால், மாணவன் தன்னைத் தாக்குவானே என்ற அச்சமும், மதிப்பிழக்க நேரிடுமே என்ற தாக்கமும் உள்ள ஆசிரியன் ஒருவன் எவ்வாறு மாணவனின் ஒழுக்கத்தில் அக்கறை கொள்வான்?

வரன்முறை இல்லாமல் இவ்வாறு எல்லாமே நடந்தால் தமிழர் சமூகம் நரகத்துக்கும் கீழே உள்ள படுகுழியிலேயே விழும்!

எங்கே போகிறோம்? என்ன செய்யப் போகிறோம்? எவ்வாறு திருந்தப் போகிறோம்?

# புத்தாண்டு கால தேசிய நிகழ்வு போர்த் தேங்காய் அடித்தல்!

செல்லப்பா நடராசா

யாழ்ப்பாணக் கிராமங்களது அந்தக் காலப் பனைவளம், தருக்களின் வளம், கால்நடை வளம், பால் வளம், கம வளம், சொந்த உணவு வளம் பற்றி உதயனில் பல கட்டுரைகளை எழுதியுள்ள மூத்த பத்திரிகையாளரும், எழுத்தாளருமான செல்லப்பா நடராசா தமிழ்ப் புதுவருடப் பிறப்புக் கொண்டாட்டங்களை ஒட்டி பாரம்பரியமாக ஒரு தேசிய நிகழ்வாக இடம்பெற்று வந்துள்ள போர்த் தேங்காய் அடித்தலைப் பற்றிஇங்கே எடுத்துக் கூறுகின்றார்.

சித்திரைப் புத்தாண்டை எல்லோரையும் விட முந்திக் கொண்டு கட்டியம் கூறி வரவேற்பவை தமிழ்ப் பிரதேசங்களெங்கணும் குயில்கள்தாம். சித்திரை பிறப்பதற்குப் பல வாரங்களுக்கு முன்பே அவை கூவவும் இன்னொலி எழுப்பிப் பறந்து திரிந்து கும்மாளம் கொட்டவும் தவறுவதில்லை. அதிகாலையில் நான்கு மணிக்கே எழுந்துவிடும் குயிலினம் பொழுது சரிந்தாலும் தாம் படுக்கையில் சரியாமல் கூவிக் கொண்டே இருந்து அனைவரையும் மகிழ்ச்சியில் ஆழ்த்துபவை.

குயிலினம் போன்று சித்திரைப் புத்தாண்டு காலத்தில் தமிழ்மக்களும் பலவிதமான ஆடல்பாடல், விளையாட்டுக் கேளிக்கை நிகழ்ச்சிகளில் ஈடுபட்டுத் தம்மை ஆசுவாசப்படுத்திக் கொள்வதுண்டு. இதுதான் பண்டைய வரலாறு.

### குயில்களுக்கு போட்டியாக

சித்திரை கடுங்கோடை காலமாகையால் மக்கள் அனைவரும் வீடுகளில் முடங்கிக்கிடக்க விரும்புவதில்லை. இக்காலப்பகுதியில் திருக்கோவில்களில் வருடாந்த உற்சவங்கள் ஆரம்பித்து விடுவதால் மக்களின் கவனம் முழுவதும் அவற்றின்பால் பெரிதும் திரும்பி விடுவதுண்டு. எனினும் கோடைகால விடுமுறை காலத்தில் பிள்ளைகள் வெயிலில் அடியுண்டு திரிவதை அந்தக் காலப் பெற்றோர்கள் தவிர்த்துக் கொள்வர். நிழல் பரப்பி நிற்கும் பாரிய மரங்களில் அன்ன ஊஞ்சல்களைக் கட்டிக் கொடுத்து அவற்றில் அவர்களை ஆடிப் பாட வைப்பது அவர்களது வழக்கம். குயில்களுக்குப் போட்டியாகக் குழந்தைகள் அன்ன ஊஞ்சலாடுகையில் பண்ணிசைப்பர். பலவித கிராமியப் பாடல்களைப் பாடி இன்புறுவர்.

### யானைச் சவாரி

புத்தாண்டு காலத்தையொட்டி அன்றுமுதல் இன்று வரை சிங்களக் கிராமங்களில் இளவட்டங்கள் முதல் பாட்டிகள் வரை தெரு ஓரங்களில் கூடி இருந்து ரபான் அடித்து மகிழ்வதை நான் பல்லாண்டுகளாகக் கண்டு களித்திருக்கிறேன். இக் கொண்டாட்டங்களின் தொடர்பில் தென்னிலங்கை மக்களிடையே நடத்தப்படும் யானைச்சவாரிப் போட்டிகள் பல்லாயிரக்கணக்கான மக்களைக் குதூகலமடையச் செய்பவை. இப்பண்டிகைக் காலங்களில் தமது பாரம்பரியமான பணியார வகைகளைத் தயாரித்து தமது இனசனங்களை உபசரிக்கும் வழக்கத்தையும் அவர்கள் கைவிட்டிலர்.

தமிழ் மக்களைப்பொறுத்த அளவில் அவர்கள் தமது பாரம்பரியமான பல விளையாட்டு நிகழ்வுகளைக் கைவிட்டு விட்டனர். கிளித்தட்டு மறித்தற் போட்டிகளை இன்று தமிழ்க் கிராமங்களில் காணமுடிவதில்லை. நாம் சிறுவர்களாக இருக்கையில் கிட்டி – புள் கொண்டு நெடுந்தூரம் ஓடி விளையாடி மகிழ்வடைந்ததுண்டு. இத்தகைய விளையாட்டுக்களின் மூலம் அந்தக் கால இளைஞர்கள் உடல் உறுதி மிக்கவர்களாக விளங்கினர். கிட்டி-புள் விளையாட்டில் காற்சிங்கம், கைச்சிங்கம் அடித்தல் என்ற முறைகள் பல உண்டு. இத்தகவல்கள் இன்றைய இளம் சந்ததியினருக்குப் பெரும் புதினமாக இருக்கலாம்.

### பரபரப்பான நிகழ்வு

இன்றைக்கு ஐம்பது வருடங்களுக்கு முன்னர் தமிழ்ப் புத்தாண்டுக் கொண்டாட்டங்களை ஒட்டி எமது திருக்கோயில்கள் தோறும் இடம் பெறும் மிகவும் பரபரப்பான ஒரு நிகழ்ச்சி போர்த்தேங்காய் அடித்தலாகும். ஊரே ஒன்றுகூடிக் களிக்கும் நிகழ்வு இது. கிராமமக்கள் இரண்டாகக் கன்னை பிரிந்து போர்த்தேங்காய் அடித்தலில் ஈடுபடுவர்.

நாட்டுப்பாடல்களில் பிரபல ஆர்வலராக விளங்கிய வெள்ளவத்தை மு. இராமலிங்கம் அவர்கள் "இந்து சாதனம்" பத்திரிகையில் போர்த் தேங்காய் அடித்தல் பற்றி எழுதிய கட்டுரை ஒன்றில் இக்கலை அருகி வருகிறதென அன்றே அச்சமும் கவலையும் தெரிவித்ததுடன் "தற்கால நாகரிகர்க்கேன் போர்த்தேங்காயை" எனக் கிண்டலாகவும் எழுதியிருந்தார். சிங்கள மக்களிடையேயும் போர்த்தேங்காய் அடித்தல் ஒரு தேசிய நிகழ்ச்சி. போர்த் தேங்காய் அடித்தல் முறை கிராமத்துக்குக் கிராமம் வேறுபாடுடையதென்று திரு. இராமலிங்கம் கூறி இருக்கிறார். அவரது கூற்றுப்படி யாழ்ப்பாணத்திலும் திருமலையிலும் மக்கள்போரடியில் ஒரேவிதமான முறைகளையே பின்பற்றி வந்துள்ளனர். மட்டக்களப்பில் உள்ளோர் தேங்காயை வீசி எறிந்து ஆகாயத்தில்வைத்து அடித்துடைக்கும் முறைகளைக் கையாண்டனர். போர்த்தேங்காய் அடித்தலில் உருட்டிவிட்டடித்தல், நிறுத்திவைத்தடித்தல், போட்டடித்தல் என்பன சிலமுறைகளாகும். காலியான், மாத்தறையான், குண்டடியன், மூக்கடியன், சடைச்சியன், மருதங்கேணியான் எனப் பல இனக்காய்கள் அன்று போரில் ஈடுபடுத்தப் பட்டதுண்டு. போர்த்தேங்காய் அடித்தற் போட்டிகள் நிஜப்போரைக் கூட மக்களிடையே உருவாக்கிவிடும் சந்தர்ப்பங்களுக்கும் அந்தக் காலத்தில் குறைவில்லை.

எமது தமிழ்ப் பெண்கள் ஆடிய "கழங்கு" என்றவிளையாட்டைப் பற்றி இன்றைய கன்னியர்கள் அறியார்.

போர்த் தேங்காய் அடித்தல் கிராமத்துக்குக் கிராமம், பிரதேசத்துக்குப் பிரதேசம் மாறுபடுகிறது. மட்டக்களப்பில் தேங்காயை ஆகாயத்தில் வீசி எறிந்து ஆகாயத்தில் வைத்தே அடித்துடைப்பார்கள்.

உலகில் பல இனமக்களும் தத்தம் பழமைமிகு தேசிய விளையாட்டுக்களை, கலாசார நிகழ்ச்சிகளை மறவாது காப்பாற்றி வருவதில் பெருமை கொள்கின்றனர். நாமோ அதற்கு எதிர்மாறாகவே நடந்துகொண்டு போகிறோம். ஒரு காலத்தில் நமது மக்கள் நாவாய் கட்டும் தொழிலில் மேன்மையுற்றிருந்தனர். இன்று அந்தத் தொன்மையையும் மேன்மையையும் நாம் நினைத்துப் பார்க்கவேண்டியவர்களாக இருக்கிறோம். நாவாய் கட்டுதலும், ஓட்டுதலும் அன்றைய எமது மக்களுக்கு ஒரு வீரச்செயலாக, விளையாட்டாகவே இருந்து வந்துள்ளது.

### நேற்றைய வரலாறு

வட இந்திய மக்கள் தமது ஹோலிப் பண்டிகையில் மாற்றங்கள் எதையும் கண்டிலர். அதேபோலக் கேரள மக்களுடைய ஓணம் பண்டிகை நிகழ்ச்சிகளிலும் பாரிய மாற்றங்கள் ஏற்பட்டதாக எம்மால் அறிய முடியவில்லை. தமிழகத்தில் இன்று கூட சல்லிக்கட்டு விளையாட்டுகள் உண்டு. கிறிஸ்தவ மக்களுடைய கிறிஸ்மஸ் பண்டிகை பல நூற்றாண்டுகளாக மாற்றங்களுக்குட்படவில்லையே! எமது சகபாடிகளான சிங்கள மக்களுடைய விசாகப் பண்டிகை மரபுகளில் ஒரு சிறிதளவாவது மாற்றங்களைக் கண்டிருக்கிறோமா? தமது பாரம்பரியமான தேசிய முக்கியத்துவம் வாய்ந்த கொண்டாட்டங்களை உலக நாடுகள் அப்படியே போற்றிப் பாதுகாக்கையில் நாம் மட்டும் நேற்றைய வரலாற்றை இன்று மறந்துவிட்டோம். எமது

பாடசாலைப் பிள்ளைகளுக்கு சனத்ஜயசூரியாவைப் பற்றியும் அஸாருதீனைப்பற்றியும் நன்கு தெரியும். அதே வேளையில் "நாய்க்கேன் போர்த்தேங்காய்" என்று முதியவர்கள் கூறுவதன் அர்த்தம் நன்கு தெரியாது. எனது கிராமத்துப் பிள்ளையார் கோவிலடியில் வருடா வருடம் சித்திரை புதுவருடப் பிறப்புக் கொண்டாட்டக் காலங்களில் போர்த் தேங்காய் அடித்தல் நிகழ்வை அந்தக் காலத்தில் முன்னின்று நடத்திய வேலுப்பிள்ளை கனகரத்தினம் என்ற விளையாட்டு வீரன் இன்றும் திருநெல்வேலி குடியேற்றத் திட்டத்தில் இருக்கிறார். இன்று முதியவராகிவிட்ட அவரின் கவலைகள் அதிகம்.

இச் சித்திரைத் திருநாளில் எமது பாரம்பரியமான கலைகள், விளையாட்டுக்கள், மரபுகள், பண்பாடுகள் வளர நாம் சிந்திப்போமாக. அவ்வாறு சிந்திக்கத் தவறின் நாம் எப்படி வாழ்ந்தோம், எவ்வாறு வளர்ந்தோம், எவ்விதம் உலகில் மேன்மையுற்றிருந்தோம் என்ற வரலாறே முற்றாக அழிந்தொழிந்து விடலாம். சித்திரைத் திருமகளை வருடா வருடம் வாழ்த்தி வரவேற்கும் தமிழ்க் குயில்களின் ஆரவாரம், குதூகலம், மகிழ்ச்சி, கும்மாளம், சல்லாபம், ஆடல்பாடல் எதிலுமே மாற்றமில்லை. ஆனால் எம்மில்தான் எத்தனை மாற்றங்கள்?

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வசிட்டருக்கு தனியாசனம் பரமசிவன் வழங்கியது ஏன்

பரமசிவன் ஒரு சமயம் வசிட்டருக்கு ஒரு விசேஷமான ஆசனம் கொடுத்திருந்தார்.

''அது சரி... அப்படி என்ன அந்த ஆசனத்தில் விசேஷம்?''

வசிட்டர் ஒரு குறிப்பிட்ட இடத்திற்குப் போக வேண்டும் என்று நினைத்துப் புறப்படுகிறார் என்று வைத்துக் கொள்ளுங்கள். அவருக்கு முன்னாலேயே அந்த ஆசனம் புறப்பட்டு சென்று ஒரு வசதியான இடமாகப் பார்த்து இருந்து கொள்ளும். பிறகு வசிட்டர் போவார்... அங்கே சென்றதும் எங்கே உட்காரலாம் என்ற இடப் பிரச்சினை அவருக்கு ஏற்படாது. அதுதான் அவருடைய ஆசனம் முன்னாலேயே அங்கே போய் அவருக்காகக் காத்துக்கொண்டிருக்கின்றதே...! அப்புறம் என்ன கவலை? நேராக அந்த ஆசனம் இருக்கும் இடத்திற்குச் சென்று அதில் அமர்ந்து கொள்வார்.

இதை மற்ற முனிவர்களெல்லாம் பார்த்தார்கள். அவர்களுக்குப் பொறாமையாக இருந்தது.

ஆதலால் அவர்கள் எல்லோரும் ஓர் இடத்தில் கூடிக் கலந்து பேசினார்கள்.

''என்ன இது? நாமும் அவரைப் போன்ற முனிவர்கள்தானே! இருந்தாலும் நமக்கு அதுமாதிரி ஓர் ஆசனம் கிடைக்கவில்லையே!'' என்று யோசித்தார்கள்.

...''சரி... நேராக நாம் எல்லோருமே பரமசிவனிடம் சென்று, இதைப் பற்றி கேட்போம்'' என்று முடிவு செய்தார்கள்.

அதன்படியே முனிவர்கள் சிவபெருமானிடம் சென்று, ''சுவாமி! நாங்களும் முனிவர்கள்தானே! வசிட்டரைப் போல் நாங்களும் தங்களைக் குறித்துக் கடும்தவம் செய்துகொண்டுதானே இருக்கிறோம்? அப்படி இருக்கும் போது அவருக்கு மட்டும் ஏன் இந்த விசேஷசலுகை?'' என்று வினாவினார்கள்.

அதற்குப் பரமசிவன் சொன்னார்:

''முனிவர்களே! உங்கள் கேள்விக்கு நான் பதில் சொல்கிறேன். அதற்கு முன்னால் நீங்கள் ஒரு காரியம் செய்ய வேண்டும்!'' என்றார்.

''என்ன செய்ய வேண்டும்? சொல்லுங்கள்!'' என்று முனிவர்கள் கேட்டார்கள்.

''நீங்கள் ஒவ்வொருவரும் தனித்தனியாகப் போக வேண்டும்; உங்களைவிட உயர்ந்தவர் ஒருவரைத் தேடிக்கண்டுபிடிக்க வேண்டும்; அவருக்கு அதிதி பூஜை செய்து, அவரை ஒரு மண்டலத்திற்குள் என்னிடம் அழைத்து வாருங்கள்!'' என்றார் சிவபெருமான்.

''சரி, அவ்வளவுதானே! இதென்ன பெரிய காரியம்? அப்படியே செய்கிறோம்'' என்று சொல்லிவிட்டு முனிவர்கள் அங்கிருந்து சென்றார்கள்.

அவர்கள் போன பிறகு சிவபெருமான் நந்திதேவரைக் கூப்பிட்டு வசிட்டரை அழைத்து வரச் சொன்னார்.

அதன்படி வசிட்டர் வந்து சிவபெருமானை வணங்கி நின்றார்.

அவரிடம் சிவபெருமான், ''வசிட்டரே! இன்றையிலிருந்து ஒரு மண்டல காலத்திற்குள் உங்களை விடத் தாழ்ந்தவர் ஒருவரைத் தேடிக் கண்டுபிடியுங்கள். அவருக்கு அதிதி பூஜை செய்து அவரை என்னிடம் அழைத்துவாருங்கள்'' என்றார்.

ஒரு மண்டல காலம் கழிந்தது.

முனிவர்களெல்லாம்திரும்பி வந்து சிவபெருமானை வணங்கி நின்றார்கள்.

''சுவாமி! எவ்வளவோ தேடிப் பார்த்தோம்! எங்களை விட உயர்ந்தவர் யாருமே கிடைக்கவில்லை'' என்றார்கள்.

அதேசமயம் வசிட்டரும் அங்கே வந்து சேர்ந்தார். அவர் சிவபெருமானை வணங்கி, ''சுவாமி! எவ்வளவோ தேடித் தேடிபார்த்தேன்... என்னைவிட தாழ்ந்தவர் யாருமே கிடைக்கவில்லை!''

அவரே தொடர்ந்துசொன்னார்;


''என்னுடைய மனைவி எனக்கு அடங்கியவள்தானே— அவளுக்காவது அதிதி பூஜை செய்து அழைத்து வரலாமா என்று யோசித்தேன்... ஆனால் என்மனம் அதற்கு இடம் கொடுக்கவில்லை. ஏனென்றால் அவளுடைய பதிவிரதத்துக்கு முன்னால் நான் எம்மாத்திரம் என்று யோசித்துப் பார்த்தேன். ஆதலால் அந்த எண்ணத்தையும் கைவிட வேண்டியதாயிற்று'' என்று மிகவும் வருத்தத்துடன் தெரிவித்துக் கொண்டார்.

வசிட்டர் சொன்னதைக் கேட்டவுடனே மற்ற முனிவர்களுக்கெல்லாம் வெட்கமாக ஆகிவிட்டது.

''இந்த உலகத்தில் நம்மை விட மேலானவர்களே யாருங்கிடையாதென்று நாம் நினைத்தோம். ஆனால் வசிட்டரோ, தன்னைவிட உலகில் தாழ்ந்தவர்கள் யாருமே இல்லை என்று நினைக்கிறார்!'' என்று நினைத்தபோது முனிவர்களுக்கு வசிட்டரின் பெருமை புரிந்தது.

''பரமசிவன் ஏன் அந்த ஆசனத்தை வசிட்டருக்கு மட்டும் கொடுத்தார்?'' என்ற கேள்விக்கான பதில் முனிவர்களுக்குக் கிடைத்து விட்டது. ★

- தென்கச்சி சுவாமிநாதன் -



# கேட்டது கிடைக்கும்!

ஒரு நாட்டில் புகழ் பெற்ற ஓவியர் ஒருவர் இருந்தார். அவர் உயிரோட்டமான ஓவியங்கள் வரைவதில் வல்லவர். தன் ஓவியங்களைப் பற்றி நாட்டு மக்கள் என்ன நினைக்கிறார்கள் என்பதை அவர் அறிந்து கொள்ள விரும்பினார்.

ஆதலால் தான் வரைந்த தலைசிறந்த ஓவியங்களை அவர் கண்காட்சிக்கு வைத்தார். ஒவ்வொரு ஓவியத்தின் கீழும் ஒரு தாளை ஒட்டி வைத்திருந்தார். அதில், 'இந்த ஓவியத்தில் நீங்கள் காணும் குறைகளைத் தயக்கமின்றி எழுதுங்கள்' என்று குறிப்பு எழுதியிருந்தார்.

இரண்டு நாள்கள் கழிந்தன. கண்காட்சிக்கு வந்த ஓவியர் அதிர்ச்சி அடைந்தார். ஒவ்வொரு ஓவியத்தைப் பற்றியும் ஏராளமான குறைகள் அந்தத் தாள்களில் எழுதப்பட்டிருந்தது.

ஒவ்வொரு தாளையும் படித்தார் அவர். ஓவியத்தின் எல்லாப் பகுதியுமே குற்றங்குறை உடையதாக எழுதப்பட்டிருந்தது.

'என்ன செய்வேன்? என் ஓவியங்கள் யாருக்குமே பிடிக்கவில்லையே!' என்று மனங்கலங்கி நின்றார் அவர்.

அப்போது நண்பர் ஒருவர் அங்கே வந்தார். அவரிடம் நடந்ததை எல்லாம் சோகத்துடன் சொன்னார் ஓவியர்.

சிரித்த நண்பர், ''உன் அணுகுமுறை சரியில்லை. அதனால்தான் உன் ஓவியங்கள் குறைஉடையனவாக எல்லோருக்கும் தெரிந்தன. நான் சொல்வது போலச் செய். உன்ஓவியங்களை எல்லோரும் பாராட்டுவார்கள்'' என்றார்.

''என்ன செய்ய வேண்டும்?'' என்று கேட்டார் ஓவியர்.

''ஓவியங்களின் கீழே உள்ள 'இந்த ஓவியத்தில் [illegible] பட்ட பகுதி எது என்று

(XII ஆம் பக்கம் பார்க்க)

# கணவனின் இதயத்தோடு

பெர்ஸி பைஷே ஷெல்லி —உலகப்புகழ் பெற்ற ஆங்கிலக் கவிஞர். ஆற்றில் மூழ்கி இறந்துபோன இவரது உடல் கடற்கரையோரமாகவைத்து எரியூட்டப்பட்டது. ஆனால் எப்படியோ அவரது இதயம் மட்டும் கடலில் சிக்கிபின்னர் கரையில் ஒதுங்கியது. அந்த அற்புதக் கவிஞனின் இதயத்தை அப்படியே எடுத்து அதையோர் அழகான பட்டுத் துணியில் சுற்றிஎடுத்துச் சென்றாராம் அவனது மனைவி மேரி உல்ஸ்டோன்கிராஃப்ட். பின்னர் மேரி எங்கு சென்றாலும் தான்மிகவும் நேசித்த தன் கணவன் ஷெல்லியின் இதயத்தைஎடுத்துச் செல்லத் தவறுவதேயில்லையாம்! ★

# அமெரிக்காவை...

(VIII ஆம்பக்கத் தொடர்ச்சி)

அசைக்கவோ, திறக்கவோ இயலவில்லை.

இடதுகையை மட்டும் அசைக்க முடிந்தது. வலதுகை இருக்குமிடம் உணரப்படவில்லை, தன்னோடு இருந்த அதிகாரி போல் என்ன ஆனான் என நினைத்தாள்.

சில மணிநேரம்தொடர்ந்து மனிதக்குரல்கள் கேட்டாலும் அவளை யாரும் காணவோ நெருங்கவோ இல்லை. இவளால் குரல் கொடுக்கவும் இயலவில்லை. ஏதும் ஒலி எழுப்பக்கூட இயலவில்லை.

மனிதர்கள் நெருங்கி விட்டது தெரிகிறது. அவர்கள் இவளைத் தொட்டுப் பார்த்தனர். உடலில் சூடு இருக்கிறது. பொறிக்குள் அகப்பட்டது போல — சரிந்து கிடக்கும் தூணின் இடுக்கில் இவளது தலை அகப்பட்டுக் கிடந்தது. மேலும் ஒரு கால் அங்குலம் தூண் இறங்கி இருந்தால் இவள் தலைசிதறி இருக்கும்.

அவர்கள் மெல்லத் தூணைக் கிளப்ப முயன்றனர். பலரையும் கூவி உதவிக்கு அழைத்தனர். தூண் ஒரு சில மில்லி மீட்டர்கள் அசையவும் ஒருவன் தலையை வெளியே இழுத்து எடுத்து விடுவித்தான்.

சூழ இருந்த ஏனைய சிதைவுகளை அகற்றிப் புதைந்த குழியில் இருந்து மீண்டும் அவளை உயிர்ப்பித்தார்கள். அப்போது அவளது உடல் வலி — வேதனை உச்சத்தை எட்டியது. அம்புலன்ஸிடம் அவள் பாரப் படுத்தப்பட்டாள்.

ஆள்சேர்ப்புக்குபரீட்சாத்திகளைத் தேர்ந்தெடுக்க வந்த கடற்படை கப்டன் மைக்கேலுக்கு உடலில் 280 இழைகள் போடப்பட்டன. ஆறு மணிநேரச் சத்திர சிகிச்சையின்பின் அவன் தேறத் தொடங்கினான். இருந்தும் இனி அவனால் விமானம் ஓட்டவோ வேலைக்குப் போகவோ முடியாது என்பது தெளிவு.

காணாமற்போனவர்கள், காயம்பட்டவர்கள், இறந்தவர்கள் என்று பட்டியல்கள் நீண்டுகொண்டே போயின. இவர்களை இடம்மாறித் தேடும் உறவினர்களின் அலைச்சல் மிகமிகப் பரிதாபம். வைத்தியசாலைகளில் சிகிச்சைபெற்ற—பெறுகின்றவர்களின் பட்டியல்கள் பார்வைக்கு வைக்கப்பட்டிருந்தன. ஒரே பெயரில் பலர் இருப்பது குழப்பத்தை மேலும்வலுவாக்கிஇருந்தது.

மீட்புப்பணியாளர்கள் பலரும் தாம் மீட்ட பலரை வைத்தியசாலையில் தேடிப் பிடித்து ஆறுதல்சொல்லி மீண்டும் தம்மைத் திருப்திப் படுத்திக் கொண்டனர். துப்பறியும் நிபுணர் ஹல் தனது மனைவியுடன் வந்து தான் மீட்ட குழந்தைக்கு பரிசளித்து பெற்றோருக்கு ஆறுதல் கூறிச் சென்றான். இப்படிப் பல நிகழ்வுகளில் உயிர் மீட்ட தெய்வங்களை பலரும் மீளக் கண்டு நன்றிகளைப் பரிமாறிக் கொண்டனர்.

குண்டு வெடித்த 13 ஆம் மணித்தியாலம் உயிருடன் இருந்த கடைசி ஆளும் மீட்கப்பட்டான். மேலும் 16 நாள்கள் தேடல்கள் தொடர்ந்தன. இடுக்குகளின் ஊடே உயிர்த் தடயங்களை துல்லியமாக உணரும் நுண்ணிய கமிராக்கள் புகுத்தப்பட்டன. பலபாரம் தூக்கிகள் அவதானமாகத் தட்டுக்களைப் பெயர்த்துத் தூக்கித் தேடலுக்கு வழிவகை செய்தன. சிதறிய உடற்பாகங்கள் இறந்தவர்களைச் சரிவரக் கணக்கிட இடைஞ்சல் செய்தன.

சரி. இவ்வளவு அனர்த்தத்துக்கும் காரணமான — குண்டுக்கு — சூத்திரதாரி என்னவானான்? அவன் பிடிபட்டானா? எப்படி? — அந்த விவரங்கள் அடுத்த வாரத்தில்.


(தொடரும்.)

# சித்திரைப் புத்தாண்டு...

(VII ஆம் பக்கத்தொடர்)

ஆலய தரிசனங்களாலும் பெரியவர்களாலும் பலவித நன்மைகளைப் பெறுவீர்கள்.

## கும்பம்



நீங்கள் ஆராய்ச்சிபூவமான சிந்தனை நிறைந்தவர்கள். பேசிப்பேசியே காலத்தைத் தள்ளுவீர்கள். எந்தவிதமான கட்டுப்பாடுகளுக்கும் கட்டுப்படமாட்டீர்கள். இந்த உலகத்தில் உங்களுக்கு அதிக செல்வாக்கு இருக்கும். ஓர் கூட்டத்துடன் எப்பொழுதும் தொடர்பு இருக்கும். தொழில் ஸ்தானத்தில் படிப்படியான செல்வாக்குமிகுந்து உச்ச ஸ்தானத்திற்குச் சென்று கொண்டிருப்பீர்கள். எதிர்ப்பாலாருடன் முட்டி மோதாமல் இருக்க முயலுங்கள். ''பிறரை நம்பநடவுங்கள்; நம்பிநடவாதீர்கள்.'' இருதயத்தில் பரபரப்பு, கைகால் பிடிப்பு, துடிப்பு, எலும்பு வருத்தங்களால் வருந்துவீர்கள். சனீஸ்வரன் கும்பராசிக்காரரை அதிகம் தாக்கமாட்டார். சிலருக்கு அதிக அலைச்சலும், பகைவர்களின் எதிர்பாராத மறைமுக நடவடிக்கைகளால் வேதனைகளும் ஏற்படச்செய்யும். தெய்வ பக்தியாலும் ஆலய தரிசனங்களாலும் பெரியவர்களாலும் பலவித நன்மைகளைப் பெறுவீர்கள்.

## மீனம்



உங்களை விதிவசப்பட்ட பலன்கள் சுற்றித்திரியும். எதற்கும் உங்களைத் தயார் படுத்திக் கொள்ளவும். தொழில் ஸ்தானத்தில் எதிர் நீச்சல் அடிக்கத் தெரிய வேண்டும். கால ஓட்டத்தில் எதையும் தாங்கும் இதயம் வேண்டும். அடிக்கடி மாறுபட்ட மனத்தினராக இருப்பீர்கள். அடிக்கடி கட்சிதாவும் அரசியல்வாதிகள் போன்று செயல்படும் இயல்புகள் இருக்கும். கருத்து வேற்றுமைகளால் வேதனைகள் ஏற்படச் செய்யும். எதிர்பாலாரின் ஆலோசனைப்படி நடந்து உறுதி பெறுங்கள். இலாபம் அடையுங்கள். வயிறு, கைகால், பாதங்கள், முள்ளந்தண்டு, கைகால் விறைப்பு என்பன வருத்தும்; ஏழரைச்சனி தாக்கம் இருப்பதனால் சனீஸ்வரனுக்குப் பிரீதி செய்வதுடன் குலதெய்வ வழிபாடுகளைச் செய்து வரவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்டுபிடியுங்கள்!

| | | | | | |
|---|---|---|---|---|---|
| டி | ம் | கு | கீ | நா | ஒ |
| க | ங் | ய | லி | ரி | க |
| ணி | ய் | ன் | ல் | ழு | ஓ |
| ட | பு | அ | ம் | க | கு |
| யா | க | சி | ட் | ர | மா |
| னை | மு | ர | ல் | தை | ங் |

மேலே உள்ள அட்டவணையில் முப்பத்தாறு எழுத்துக்கள் உள்ளன. இந்த எழுத்துக்களை வைத்துக் கொண்டு பன்னிரண்டு விலங்குகளின் பெயர்களை உருவாக்க முடியும். ஆனால் ஓர் எழுத்தை ஒரு தடவை மட்டும்தான் பயன்படுத்த முடியும். அத்தோடு முப்பத்தாறு எழுத்துக்களும் பயன்படுத்தியே ஆகவேண்டும். பெயர்களைக் கண்டுபிடியுங்கள் பார்க்கலாம்.

— க. தர்மினி
(யாழ்.கனகரத்தினம் ம. ம. வி.)
(விடை XIII பக்கம் பார்க்க)

# பூந்தோட்டம்

பூந்தோட்டமாம் பூந்தோட்டம்
பூக்கள் நிரம்பிய பூந்தோட்டம்
மல்லிகையோடு அலரியும்
செவ்வரத்தை, ரோசாவும்
சேர்ந்து நிற்கும் பூந்தோட்டம்.

தூக்கணங்குருவியாம் தும்பியாம்
வண்ணாத்துப் பூச்சியாம் வண்டுகளாம்
வகை வகையாய்க் குருவிகளாம்
வந்து சுற்றும் பூந்தோட்டம்
வா! உனக்கும் காட்டுகிறேன்.

அண்ணா தம்பி அக்கா நான்
அனைவரும் சேர்ந்து கட்டியது
அழகான பூந்தோட்டம்
அனைவரும் வந்து பாருங்கள்
வியப்பிலாழ்ந்து போவீர்கள்.

- வி. உதேஸ்

# அம்மாப் பாட்டு

அம்மா இங்கே வா வா
ஆசை முத்தம் தா தா
இலையில் சோறு போட்டு
ஈயைத் தூர ஓட்டு
உன்னைப் போன்ற நல்லார்
ஊரில் யாவர் உள்ளார்
என்னால் உனக்குத் தொல்லை
ஏதும் இங்கே இல்லை
ஐயம் இன்றிச் சொல்வேன்
ஒற்றுமை என்றும் பலமாம்
ஓதும் செயலே நலமாம்
ஔவை சொன்ன மொழியாம்
அஃதே எனக்கு வழியாம்.

# சிறுவர் பாட்டு

சேவல் கூவ எழுந்தனர்
தீட்டிப் பல்லைத் துலக்கினர்
ஆவல் கொண்டே ஓடினர்
அள்ளி அள்ளிக் குளித்தனர்.

சட்டை போட்டுப் பார்த்தனர்
தலையைச் சீவிக் கொண்டனர்
நிலையாய் நின்று உணவுண்டு
நேராய் ஓடிச் சென்றனர்.

தண்ணீர்ப் போத்தல் ஒருகையில்
சாப்பாடோ மறு கையில்
அண்ணன் தம்பி யாவரும்
சுற்றுலாவிற் செல்லலாம்.

- கி. துளசிகரன்
(ஆண்டு 2,
மானிப்பாய் விவேகானந்த வித்தி.)

# வாழிய புத்தாண்டு!

சித்திரை மாதம்! தமிழ் மாதம்!
செந்தமிழ் ஆண்டின் முதல் மாதம்!
முத்தமிழ்த் தாயின் புத்தாண்டு!
முழங்கிடும் ''வெகுதானிய'' எனும் ஆண்டு!

பூங்குயில் கூவும் இசை பாடும்!
பொதிகையின் தென்றல் அசைபோடும்!
ஓங்கிடும் கோடை வெயில் கூடும்!
ஊட்டியைக் காண மனம் நாடும்!

படிப்புக்கும் பள்ளிக்கும் விடுமுறைதான்!
பாலர்கள் யாவர்க்கும் குதூகலம் தான்!
துடிப்புக்கும் மகிழ்ச்சிக்கும் சுதந்திரம்தான்!
துள்ளி நாமும் ஆடலாம் தினம் தினம்தான்!

புத்தாண்டின் பேரின்பம் அகத்தினிலே!
புன்னகை தவழ்ந்திடும் முகத்தினிலே!
வாழிய! நற்றமிழ்ப் புத்தாண்டு!
வாழ்த்தியே பாடுவோம்! பல்லாண்டு!

-கிருஸ்ணசாமி ஜமுனாதேவி
(யா/ மானிப்பாய் மகளிர் கல்லூரி)

# பொறுமைக்கு உதாரணம் கழுதை

சுறுசுறுப்பில்லாத சோம்பேறிகளையும், படிக்காமல் திரியும் பிள்ளைகளையும் சிலர் 'கழுதை' என்று சொல்லி ஏசுவதுண்டு. ஆனால் நன்றிக்கு உதாரணம் 'நாய்' என்பதுபோல் பொறுமைக்கு உதாரணம் கழுதைதான்.

பொறுமையாக நீண்ட தூரம் நாள் கணக்காகப் பொதி சுமக்கக்கூடிய ஒரே மிருகம் கழுதைதான். கழுதையில் பல இனங்கள் உள்ளன.

யுத்த காலங்களில் கழுதைகள் மனிதர்களுக்கு உதவியுள்ளன. இடப் பெயர்வுகளின்போது உற்ற நண்பனாக அவை விளங்கியுள்ளன.

முதலாம் உலகப் போரின் போது காயமடைந்த ஆஸ்திரேலிய இராணுவத்தினரை ஆஸ்பத்திரிகளுக்குக் கொண்டு செல்ல கழுதைகளே பயன்படுத்தப்பட்டன. போரின் போது சளைக்காமல் செயற்பட்டு உயிர் துறந்த 'மர்பி' என்ற கழுதைக்கு ஆஸ்திரேலியாவில் சிலை எழுப்பப்பட்டுள்ளது.

# பாம்புகளைக் கொல்லும் கீரிப்பிள்ளை!

கீரிப்பிள்ளை எலியின் இனத்தைச் சேர்ந்தது. சிலர் இதனைப் பிள்ளைபோல் வளர்க்கிறார்கள். எனவேதான் கீரியை அன்பாகக் 'கீரிப்பிள்ளை' என்று சொல்வர். வளர்ப்பவரிடம் கீரிப்பிள்ளை நெருங்கிப் பழகும்.



பாம்புகளைக் கொல்வதில் அகாயசூரன் கீரிப்பிள்ளை

கீரியில் சிறியவையும், பெரியவையும் உள்ளன. சிறியவை 38சதம மீற்றர் நீளம் இருக்கும். பெரியவை 120 அல்லது 150 சதம மீற்றர் நீளமும் இருக்கும். நீளத்திற்கேற்பக் கீரியின் உடலும் பருமனாக இருக்கும். இதன் பற்கள் கூர்மையானவை; நகங்கள் கூர்மையும், உறுதியும் வாய்ந்தவை.

நம் நாட்டுக் கீரியின் முகம் சிறிது நீண்டு கூரியதாக இருக்கும். அமெரிக்க நாட்டுக் கீரிகளின் மயிர் நீண்டு முள்போல இருக்கும். மலைநாடுகளிலுள்ள ஒரு வகைக் கீரிகள் மரங்கள் மீதும் ஏறும். அதிலுள்ள பறவைகளைப் பிடித்துத் தின்னும். பூனை போன்ற உருவமுடைய கீரிகளும் உள்ளன.

**பிராணிகள் உலகம்**

கீரிகள் பெரும்பாலும் புதர்களிலும், மரப்பொந்துகளிலும் வாழ்கின்றன. சில வயல்வெளிகளிலும் இருக்கும். இவை குட்டி போட்டுப் பால் கொடுக்கும். இவை ஆண்டுக்கொரு முறையே குட்டி போடும். வெளியிற் செல்லும்போது குட்டியை முதுகின்மேற் சுமந்து செல்லும்.

கீரி தானியம், சோறு, இறைச்சி முதயலினவற்றைத் தின்னும். பாம்பின் இறைச்சி என்றால் கீரிக்கு மிக விருப்பம். 'பாம்பைக் கண்டால் படையும் நடுங்கும்' என்று சொல்வார்களல்லவா? ஆனால், கீரியைக் கண்டால் பாம்புக்கு அச்சம். பாம்புக்குப் பகை கீரி என்பர். கீரி நல்ல பாம்புடன் சண்டையிடும். அதன் கழுத்தைப் பற்றிக் கொன்றுவிடும்.

இருவர் பகைவர்களாக இருந்தால் 'கீரியும் பாம்பும் போல இருக்கிறார்கள்' என்று சொல்வதை நீங்கள் கேட்டிருக்கிறீர்களா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்களால் முடியுமா?

| | | | | |
|---|---|---|---|---|
| ட் | ல | வெ | ர | ம |
| ய | ள | ட் | ம் | லி |
| லி | செ | அ | த | டி |
| நெ | தொ | க | ட் | ட் |
| ட் | ல் | வெ | ப | யி |

மேலே காட்டப்பட்டுள்ள அட்டவணையில் இருபத்தைந்து எழுத்துக்கள் உள்ளன. இந்த எழுத்துக்களின் மூலம் ஆறு ஊர்களின் பெயர்களை உருவாக்கலாம். ஆறு ஊர்களின் பெயர்களிலும் 'டி' என்ற எழுத்து உண்டு. எனவே 'டி' என்ற எழுத்தையும் நீங்களும் ஆறுதடவைகள் பயன்படுத்த முடியும். இருபத்தைந்து எழுத்துக்களையும் சேர்த்து ஆறு ஊர்களின் பெயர்களையும் உருவாக்குங்கள் பார்க்கலாம்.

— தாட்சாயணி
(பருத்தித்துறை.)
(விடை XIII பக்கம் பார்க்க)

# இயலுமா?

(அ) கிரிக்கெட் போட்டி ஒன்றில் பத்துப் பாடசாலைகள் ஒன்றோடொன்று மோதின. மொத்தமாக எத்தனை போட்டிகள் நடைபெற்றிருக்கும்.

(ஆ) ஒரு பரீட்சையில் 20 கணக்குகள். ஒரு கணக்குச் சரியாகச் செய்தால் 5 புள்ளிகள்வீதம்செய்யும் கணக்குகளுக்கு நூறு புள்ளிகள் வழங்கப்படும். ஒவ்வொரு தவறுக்கும் இரண்டு புள்ளிகள் வீதம் கழிக்கவும்செய்வார்கள். பாபு முழுக்கணக்குகளுக்கும் விடை எழுதினான். அவனுக்கு 65 புள்ளிகள்கிடைத்தன. பாபு சரியாகச் செய்த கணக்குகள் எத்தனை? பிழைவிட்டவை எத்தனை?

(3) இரண்டு அப்பாமாரும் இரண்டு மகன்மாரும் வேட்டையாடச் சென்றனர். மொத்தம் மூன்று முயல்களை வேட்டையாடி ஆளுக்கு ஒரு முயலைப்பெற்றனர். அது எப்படி?

(4) கீழே இரண்டு அணிகளாகச் சொற்கள் உள்ளன. முதலாவது அணியில் உள்ள சொற்களுக்குரிய சங்கேதச் சொற்களே இரண்டாவது அணியில் உள்ளன. எங்கே சோடியைக் கண்டு பிடியுங்கள் பார்க்கலாம்.

| | | |
|---|---|---|
| (அ) கவனம் | — | (i) YEPZ |
| (ஆ) வதனம் | — | (ii) BXWP |
| (இ) வசம்பு | — | (iii) XYWP |
| (ஈ) புவனம் | — | (iv) XDPZ |
| (உ) கரும்பு | — | (v) CDPZ |
| (ஊ) தகனம் | — | (v) YBWP |
| (எ) விரும்பு | — | (vii) ZYWP |

—த. பிரகலாதன்
(ஆண்டு 10, ஹாட்லிக் கல்லூரி.)
(விடை XIII பக்கம் பார்க்க)




# நொடிப் பொழுது

(1) அங்குல மாட்டுக்கு அரை மைல் வால். அது என்ன?

(2) நித்தம் கொட்டும்; சத்தமில்லை. அது என்ன?

(3) ஏறும்; இறங்காது. அது என்ன?

(4) வெள்ளைக்கார மாமா, சூடு போட்டால் பொசுங்குவார். அவர் யார்?

(5) தங்கத் தாம்பாளம் தவறவிட்டால் போச்சு. அது என்ன?

— இ. அஞ்சலா
(ஆண்டு 7, இராமநாதன் கல்லூரி.)

## விடைகள்

(1) ஊசிநூல். (2) கண். (3) வயது.
(4) பஞ்சு. (5) முட்டை.

# தனிமரம்...

(VI ஆம் பக்கத் தொடர்)

தது, எங்கும் எல்லோரிடமும் ஒரே பரபரப்பு. எதை எடுப்பது? யாரைப் பிடிப்பது? எங்கே ஓடுவது? ஒரே கலவரம்.

அகல்யா தந்தையிடம் ஓடி வந்தாள்.

''அப்பா மட்டுவில் பக்கத்தால ஆமி வருகிதாம். வெளிக்கிடுங்கோ எங்கேயாவது போவம்''

''இப்ப அவசரமா எங்கையம்மா போறது? சனமெல்லாம் அல்லோலகல்லோலப் படுகுது.''

''கிளாலிக்குப் போவமப்பா. அங்கை போனா என்னமாதிரியோ வன்னிக்குப் போயிடலாம்.''

''வன்னிக்கோ?''

அரசர் சிறிது நேரம் யோசித்தார்.

''என்னப்பா யோசிக்கிறியள். எங்களுக்குப் பயமாயிருக்கு. இவரும் பயப்படுகிறார்''

''இந்த வயது போன நேரத்தில நான் கரைச்சல் பட்டு வள்ளமேறி வன்னிக்குப் போக ஏலுமே? நான் பேசாமல் இங்கினை நிற்கிறன். நீ அவரையும் பிள்ளைகளையும் கூட்டிக்கொண்டு...''

இதுவரை காலமும் தன் அன்பு மகளையும் பேரப்பிள்ளைகளையும் பிரிந்திருந்து அறியாத அரசருக்கு, தன் மகளை, தன்னை விட்டுப் போஎன்று சொல்ல முடியாதபடி அவரின் குரல் கம்மியது. கண்ணில் நீர் ததும்பியது.

''அப்பா உங்களை விட்டுவிட்டு நாங்கள் எப்பிடிப் போறது? நீங்கள் எங்கை நிற்கப்போறியள்? நீங்களும் வாங்கோ.''

அகல்யா கெஞ்சினாள்.

''இல்லை மகள் நான் வரயில்லை. நான் எங்காவது கோயில்ல சனத்தோட சனமா பாதுகாப்பா இருக்கிறன். அவங்கள் என்னை ஒன்றும் செய்ய மாட்டான்கள். நீ பத்திரமாப் பிள்ளைகளைக் கூட்டிக்கொண்டு போம்மா. நான் நின்றால் வீடு வாசலையும் பார்த்துக் கொள்ளலாம்.''

எவ்வளவு சொல்லியும் அப்பா வரமாட்டார் என்ற ஆதங்கமும், ''அவங்கள் வாறாங்கள்'' என்ற பயமும், அந்தரமும் அகல்யாவை அலைக்கழித்தன. இறுதியில் கணவனின் சொற்படி கண்ணீர் மல்க தந்தையிடம் விடைபெற்றாள். அன்பைப் பொழிந்து வாழ்ந்த தந்தையும் மகளும் அவலத்தின் அவசரத்தில் ஒரு நொடியில் கண்ணீர் மல்கப் பிரிந்தனர்.

''பிள்ளைகள் பத்திரம்'' என்று அரசர் குரல் தழுதழுக்க கூறியது வாகனத்தில் புறப்பட்ட அவர்களுக்கு பொதுவாகக் கேட்டது.

இரண்டு நாள்களின் பின் இராணுவம் தென்மராட்சியைக் கைப்பற்றியது. அங்குமிங்கும் அலைந்து ஓடித் திரிந்த மக்கள் பயத்தின் மத்தியிலும் ஒருவாறு தங்களைச் சுதாகரித்துக் கொண்டு அடுத்து என்ன செய்யலாம் என்ற கேள்விக் குறியோடு காத்திருந்த போது —

''யாழ்ப்பாணத்துக்குப் போகலாமோ? வலிகாமத்துக்குச் சனமெல்லாம் போகுதாம்''

எங்கும் ஒரே பரபரப்பு. நாவற்குழிச் சந்தியிலிருந்து தென்மராட்சிப் பக்கமாக நீண்ட வரிசையில் மக்கள்.

பாச மகளைப் பிரிந்த துக்கமும், மூன்று நாள்களாக ஒழுங்காகச் சாப்பிடாத தாக்கமும் ஆட்கொண்ட அரசர் அந்தப் பாடசாலை மூலையில் கைப்பையை தலைக்கு வைத்தபடி முடங்கிக் கிடந்தார்.

''அப்பு நீங்கள் வீட்டை போக இல்லையோ? சனமெல்லாம் வலிகாமத்துக்கு போகுதாம்.''

பக்கத்திலிருந்த பையன் அரசரை எழுப்பினான்.

சோகத்தின் பிடிப்பில் படுத்திருந்தவருக்கு பையன் கூறியது சன்னமான தொனியில் கேட்டபோதிலும் ''வீட்டை போகலாம்'' என்ற தொடர் தெம்பைத் தந்தது. துடிதுடித்து எழுந்தார். எழுந்த வேகத்தில் கைப்பையைத் தூக்கினார்.

''என்னை மாதிரிப் போறது?''

''சனமெல்லாம் தெருவிலை நடந்துதான் நாவற்குழிப் பக்கமாகப் போகுது.'' பையன் பதில் தந்தான்.

மறு பேச்சின்றி தெருவில் இறங்கி விறுவிறென நடக்கத் தொடங்கினார் அரசர்

தங்கித் தரித்து நடந்து வீட்டை அடைய அரசருக்கு இரண்டு நாள்கள் எடுத்தன; படலையைத் திறந்து வளர்ந்திருந்த பற்றைகளுக்கூடாக வீட்டைப் பார்த்த அரசருக்குப் பகீரென்றது. பாடுபட்டுத் தேடிய செல்வத்தில் கட்டிய வீட்டின் பாதியைக் காணவில்லை. தட்டுத் தடுமாறி பற்றைகளை விலக்கியவாறு வீட்டுக்குள் ஓடினார். அங்கே... அங்கே... உருக்குலைந்த ஓவியம் போல் வானம் தெரிய வீடு வெளியாகியிருந்தது. விசர் பிடித்தவர் போல் பின்புறம் ஓடினார். அங்கே... தோட்டத்தில் அனைத்துத் தென்னைகளும் அடியற்றுச் சாய்ந்திருந்தன. அடிவளவு வெட்டை வெளியாகக் காட்சி தந்தது.

அரசருக்கு ஆவேசம் அதிகரித்தது. கிணற்றடிக்கு ஓடினார். அங்கே...... அங்கே அந்த செவ்விளநீர் மரம் மட்டும் எவ்வித சேதமுமின்றி நிமிர்ந்து நின்றது. அங்கொன்றும் இங்கொன்றுமாய் சில காய்கள் சிரித்திருந்தன. நிமிர்ந்த பார்த்துக் கொண்டிருந்த அரசரை—

''அரசண்ணை ஐயோ நீங்கள் இங்கையே நிக்கிறயள்''

பக்கத்து வீட்டுப் பரந்தாமன் அலறியது, அவன் பக்கம் திரும்ப வைத்தது. திரும்பத் திராணியற்று மெதுவாகத் திரும்பியவருக்கு பரந்தாமன் வேலியால் பாய்ந்து பரபரக்க ஓடிவருவது தெரிந்தது.

''ஐயோ நீங்கள் அங்கை போகயில்லையே''

பரந்தாமன் தட்டுத் தடுமாறிக் கேட்டான்.

''நான் போகயில்லை. மகளவைதான் வன்னிக்குப் போட்டினம்''

தெம்பற்று வார்த்தைகள் வெளிவந்தன.

''ஐயோ அப்ப நீங்கள் அந்த வள்ளத்திலை... ஏற... ஐயோ நீங்கள் தப்பிவிட்டியள்''

அழாக்குறையாக படபடத்தான் பரந்தாமன்.

''என்னப்பு நீ என்ன சொல்லுகிறாய்? என்ன வள்ளம்? என்ன தப்பினது?''

மென்மையாக முனகினார் அரசர்.

''ஐயோ அண்ணை அதை உங்களட்டை எப்படிச்சொல்கிறது. மைமல் நேரத்திலை தான் அகல்யாவையையும் புருஷன், பிள்ளைகளையும் கிளாலிக் கரையிலை கண்டனான். அவசர அவசரமா சனத்தோடை சனமா ஒரு வள்ளத்திலை ஏறினதையும் கண்டனான். அதுற்குப் பின்னாலை வேறொரு வள்ளத்திலை நாங்களும் ஏறினம். இரண்டு வள்ளங்களும் கொஞ்ச இடைவெளியில் முன்னுக்குப் பின்னாகப் போய்க் கொண்டிருந்தது. அப்ப... அப்ப... ஐயோ அந்தப் பயங்கரத்தை என்னண்டு சொல்லுறது, திடீரென்று வந்த ஷெல் ஒன்று விழுந்தது தான் தாமதம் முன்னுக்குப் போன வள்ளம் தாண்டு போச்சண்ணை''

பரந்தாமன் கூறி முடிக்கவில்லை......

''ஐயோ என்ரை பிள்ளையள்''

வெறிபிடித்து பலமாகக் கத்திய அரசர், தட்டுத் தடுமாறி இரண்டு அடி வைத்து செவ்விளநீர்க கன்றுடன் சாய்ந்தார்.

ஒன்றன் பின் ஒன்றாய் விழுந்த அடிகளால் வெடித்த அரசரத்தினத்தின் இதயத்திலிருந்து வெளியேறிய குருதி அவரது வாயினாலும், மூக்கினாலும் வடிந்து கொண்டிருந்தது.

(யாவும் கற்பனை)

# கரைகின்ற...

(VI ஆம் பக்கத் தொடர்ச்சி)

படுத்தான். அவனது கன்னங்கள் வழியே கண்ணீர் வழிந்து கொண்டிருந்தது. அவன் யாருக்காக அழுதான்? தனக்காகவா? தாய்க்காகவா? அல்ல சீதனத்தால், சாத்திரத்தால் சபிக்கப்பட்ட தமிழ்ப் பெண்களுக்காகவா?

★ ★ ★

திருமணநாள். மணவறையில் தர்க்காகவும் கண்ணிறைந்த மணவாளனுமாக அழகான காட்சி. மங்கிய கண்களை இயலுமான வரை விரித்து கோலத்தைப் பார்த்துக் கொண்டிருந்தாள் பார்வதி. மனதினுள் மட்டும் அன்பு மகன் நிரந்தரமாக இருந்தான்.

''முதல்ல கொஞ்சம் பிரச்சினைப்பட்டவையள் தான். ஆனால் நான் பிடிவாதமாக நிண்டதில ஒரு பத்தாவது காசாச் தேறிச்சுது'' மணமகனின் தாய் சொல்லிக் கொண்டிருந்தாள். 'பத்தோ பரவாயில்லை' கேட்டுக் கொண்டிருந்த நடுத்தரப் பெண்ணின் குரல். மணமகனின் தாய் ''பெண்ணியம கழகச் செயலாளர். பிரசித்தமான சமூக சேவகி.

''அப்ப, சீதனம் பிரச்சினையைப் பெண்களின்ரை அடிப்படைப் பிரச்சினையா நீங்கள் சேர்க்கிறது இல்லையோ?...''

ஒரு வாயாடிப் பெண் நேரடியாகக் கேட்டாள்.

ஒருமுறை சேலைக்கரையைச் சரிபண்ணிக்கொண்டு ஏதோ வேலைகைக்காகப் போவது போல மெதுவாக விலகிக்கொண்ட மணமகனின் தாய் பதில் சொன்னாள்.

''சேர்க்கிறம்தான். ஆனா சீதனம் வாங்காமல் விடுறது மணமகனுக்குக் கௌரவக் குறைவு எண்டு சனம் நினைக்குதே... சமூகத்தினரை கருத்துகளுக்கு நாங்கள் எப்பவும் மதிப்புக் கொடுக்கத் தானே வேணும்...''

அதேவேளை மனம் முழுவதும் வெடித்துக் கிளம்பும் அழுகையை மறைத்து புறத்தே மலர்வாக இருக்க முயற்சித்துக் கொண்டிருந்தாள். அவளுக்கு அக்காவின் நிறக் குறைவு ஐந்து லட்ச அதிகரிப்பில் அழிந்து போனதில் வியப்பாக இருந்தது. அவனது கைப்பையில் அன்புத் தம்பியின் இளநீலக் கடிதம். ''அன்புச்சின்னக்கா, என்று தொடங்கி அனைத்து விவரமும் எழுதியிருந்தான். முடிவில்...

...''எனது சிறைவாழ்வின் நீடிப்பு வாழ்வின் முடிவு வரையாகவும் இருக்கலாம். எஞ்சிய பணம் 'அவர்களால்' பிறகு அனுப்பி வைக்கப் படும். இத்தொகையை நானாகச் சேர்ப்பதற்கு சில வருடங்களாவது தேவை. நன்றாகத் தீர்மானித்தே இம் முடிவுக்கு வந்தேன். அக்காக்கும் அத்தானுக்கும் என் வாழ்த்துச் சொல்லுங்கள். அம்மாவைக் கவனித்துக் கொள்ளுங்கள்—உங்கள் கைகளுக்குள் ஒரு பூவைப் போல. இடையிடையே என் சார்பில் கடிதம் எழுதுங்கள். கண் மங்கிப்போன என் தாய் கலங்காதிருக்கும் படியாக......'' ★

(யாவும் கற்பனை)

# பட்டுப்புழுவும் சிலந்தியும்

பிரபல பிரெஞ்சு எழுத்தாளர் லெபய்லி (Lebailly) எழுதிய ஒரு குட்டிக் கதை இது:-

பட்டுப்புழு ஒன்று கூடு கட்டிக் கொண்டிருந்தது. அதன் பக்கத்தில் ஒரு சிலந்தி வந்து தன் வலையைப் பின்னத் தொடங்கியது.

அது தன்வலையைமுடித்து விட்டுப் பட்டுப்புழுவைப் பார்த்தது. அதன் கூடு பாதி கூட முடியவில்லை. அதைக் கண்டு சிலந்தி ஏளனமாகச் சிரித்தது.

பட்டுப்புழுவே! எவ்வளவு நேரமாக நீ உன் கூட்டைக் கட்டுகிறாய்? என்னைப்பார்! உனக்குப் பின் தொடங்கி முடித்து விட்டேன். நீ ஏன் இவ்வளவு நேரமாகக் கட்டுகிறாய்? உன்னிடம் சுறுசுறுப்பே இல்லையே''!

''நண்பனே நான் மெதுவாக கட்டினாலும் பிறருக்குப் பயன் உள்ளதைச் செய்கிறேன். உன் வலையால்யாருக்கு என்ன நன்மை?'' என்று கேட்டது பட்டுப்புழு.

சிலந்தி பதில் சொல்லவில்லை. தன் வலையில் ஏதேனும் பூச்சி விழுகிறதா என்று பார்ப்பது போல வேறு பக்கம் திருப்பிக் கொண்டது. ★

# இந்த வார இராசி...

(IX ஆம் பக்கத் தொடர்ச்சி)

கள். ஆயினும் தொழில் ஸ்தானத்தில் இயந்திரம் போன்று இருந்து இக்காலத்தில் அடிக்கடி உணர்ச்சி வசப்பட்டு அதட்டி, உருட்டிக் காரியங்களைச் சாதிக்க முயலுவீர்கள். கவர்ச்சிகரமாகப் பேசி சமுதாயத்தவர்களை வசப்படுத்தி வரும் வல்லமை கொண்டவர்கள். ரீ.வி, வானொலியில் அதிக கவனம் செலுத்தி இரசிப்பீர்கள். உலகியலில் காரியம் சாதிக்க நாடகம் ஆடுபவர்கள் நீங்கள்; ஒருபக்கம் வாதியாகவும் மறுபக்கம் எதிரியாகவும் நின்று செயற்படுவீர்கள். உங்கள் ஆலோசனை ஒருபக்கம் செயற்பட்டபடி இருக்கும். வயிற்றில் வலி, சலவருத்தங்கள், தோல்வியாதிகள், குடல் உபாதைகள் வருத்தும். உஷ்ணபீடைகளால் வருந்துவீர்கள். தகுந்த வைத்தியம் செய்து வரவும். கிரகப் பிரீதி செய்து வரவும்.

★ அதிர்ஷ்ட நாள்: புதன்.

விருச்சிகம்: எதற்கும் ஒரு வேகத்துடன் செயற்பட்டு காரியத்தைச் சாதித்துக் கொள்ளுவீர்கள். உங்களைக் கண்டு பிறர் பயப்படுவார்கள். அவர்கள் உங்கள் சொற்படி நடக்க வேண்டுமெனச் சிந்திப்பீர்கள். தொழில் ஸ்தானத்தில் ஏட்டிக்குப் போட்டிதான். எப்படியோ காரியங்களைச் சாதித்துக் கொள்ளுவீர்கள். எல்லோரும் நீங்கள் கேட்காமலே உதவிகளைச் செய்வார்கள். எதிர்ப்பாலாருடன் நிதானமாக நடந்து கொள்ளுங்கள். அல்லது வீண்பகைதான். கிருமித்தாக்கம், சிரசு, தொண்டை, இருதயம், கைகால் மூட்டுகளில் நோ அடிக்கடி ஏற்படும். தெய்வீக சக்தி உங்களுக்கு இயற்கையிலேயே இருக்கும். ஆலயச் சூழலில் சென்று வாருங்கள். அமைதி பெறுவீர்கள்.

★ அதிர்ஷ்ட நாள்: திங்கள், வெள்ளி.

தனுசு: உங்கள் மனதில் ஒழிவு மறைவு கிடையாது. வெளிப்படை உள்ளம். நீதிக்கு மாறான கருத்துக்களைக் கேட்டு மிகவும் கொதிப்படைவீர்கள். தொழில் ஸ்தானத்தில் செல்வாக்கு, பிறர் உதவிகள் இருக்கும். இவ்வுலகில் எதையும் எதிர்த்துப் போராடிப் பெறுவீர்கள். எதிர்ப்பாலாரின் உதவிகளால் நன்மை அடைவீர்கள். குடல் வருத்தங்கள், முள்ளந்தண்டு, முதுகுப்பக்க வலி, வாய்வுத் தொல்லைகள் இருக்கும். இடமாற்றங்கள் சகஜமாகும். அயலவர்களுடனும் திடீர் நண்பர்களுடனும் கொடுக்கல் வாங்கலில் கவனம். சிலருக்கு களவு வழியில் பொருள்கள் தவறும் பலன்கள் உள்ளன. குல தெய்வ வழிபாடு நன்மைகளைக் கொடுக்கும்.

★ அதிர்ஷ்ட நாள்: திங்கள், வெள்ளி.

மகரம்: நீங்கள் எவரையும் அலட்சியம் செய்கிறீர்களா? அல்லது கௌரவக்கிறீர்களா? என்பதை எவரும் அறிய மாட்டார்கள். இந்த உலகத்தின் நடைமுறைகளை அதிகதூரம் சிந்திக்காமல் உங்கள் பாட்டிலேயே சென்றபடி இருப்பீர்கள். இலட்சிய வீரர்கள் எவரையும், எதையும் பொருள்படுத்த மாட்டார்கள் அல்லவா? தொழில் ஸ்தானத்தில் நல்லவை அதிகம் நடக்கும். கெட்டவை ஒரு சில ஓடிவரும்: எல்லாம் கலந்துதானே வாழ்க்கை! எதிர்பாலாரால் நன்மைகள் நடக்கும். அவர்களின் சகோதரங்களாலே பல நன்மைகள் ஏற்படும். அயலவர்களுடன் வீண்பிரச்சினைகள் சிலருக்கு ஏற்படலாம். வயிற்றுநோ, இரத்த நோய்கள், நரம்பு வியாதிகள், கைகால் தாக்கம், வலி, சலம் சம்பந்தமான வருத்தங்கள் சிலருக்கு ஏற்படலாம். வைத்தியம் செய்து வரவும். அதனால் சுகம் கிடைக்கும்.

★ அதிர்ஷ்ட நாள்: திங்கள்.

கும்பம்: திடீர் பணக்காரர், திடீர் ஏழை, பதவி பறிபோன அரசியல்வாதி போன்றோரின் நிலை உங்களுக்கும் ஏற்படலாம். தொழில் ஸ்தானத்தில் நல்ல வரவேற்பு இருக்கும். திட்டமிட்டுச் செயற்பட்டபடி இருப்பீர்கள். உங்கள் சுதந்திரம், தன்மானத்திற்குப் பாதிப்பு வராமல் பார்த்துக் கொள்வீர்கள். வாக்குச் சாதுரியம் மிக்கவரான நீங்கள் இக்காலத்தில் வார்த்தைகளை அளந்து பேசுங்கள். கால் வலி, தொண்டை வலி, மூட்டுவலி என்பன அடிக்கடி ஏற்படும். ஏழரைச் சனியின் தாக்கம் இருப்பதால் குல தெய்வ வழிபாடு நன்மை தரும்.

★ அதிர்ஷ்ட நாள்: திங்கள், சனி.

மீனம்: காலசக்கர ஓட்டத்தில் கடுமையான சனீஸ்வரனின் தாக்கம் விதிவசப்பட்ட பலன்களைச் சொல்லாமல் சொல்லுகின்றது. உலகம் ஒரு சுழல் சக்கரம். நன்மை, தீமை, சிறிது, பெரிது, தொடக்கம், முடிவு உங்களுக்குப் புரியாததல்ல. தொழில் ஸ்தானத்தில் இரவும், பகலும் மாறி மாறித் தோன்றும். ''சாமி சொன்னாலும், பூசாரி விடார்'' என்ற நிலை ஏற்படும். பொருள் விஷயங்களில் அவதானமாக இருக்கவும். கைகால் விறைப்பு, குடல் வருத்தங்கள், சளி, காய்ச்சல், கிருமித் தாக்கம் என்பன சிலரை வருத்த இடம் உண்டு. வாகனம் கவனம். பொருளில் தாமதம், பிரயாணங்களில் இழப்பு ஏற்படலாம். சனீஸ்வரனுக்குப் பிரீதியும், குல தெய்வ வழிபாடும் மிக முக்கியமாகும்.

★ அதிர்ஷ்ட நாள்: திங்கள்.

# கேட்டது...

(X ஆம் பக்கத் தொடர்)

குறிப்பிடவும்' என்று எழுதி வைத்துப்பார்'' என்றார் அவர்.

ஓவியரும் அப்படியே செய்தார்.

இப்போது கண்காட்சி பார்க்க வந்தவர்கள், ஓவியத்தின் ஒவ்வொரு பகுதியும் மிக அழகாக வரையப்பட்டிருப்பதாக வருணித்து எழுதினார்கள். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்தேகமும் பேராசையும்

ஒரு சமயம் சோளக் கொல்லையில் ஒருவன் காவல் காத்துக் கொண்டிருந்தான்.

பொதுவாகச் சோளக் கொல்லையில் ஒரு பொம்மையைக் காவலுக்கு வைப்பது வழக்கம். 'பொம்மை எதற்கு? நாமே போய் அங்குஇருந்து கொள்வோமே' என்று அவன் நினைத்தான் போல் இருக்கிறது! காவலுக்குப் போனவன் கவனமாக இருந்து காவல் காக்கவேண்டுமல்லவா? ஆனால் அவன் அப்படி செய்யவில்லை. பொம்மை மாதிரியே இருந்து விட்டான். தூக்கம் வந்தது... தூங்கிவிட்டான்.

அந்த நேரம்பார்த்து அந்தக் கொல்லையை மேய்வதற்கு ஒரு நந்தி வந்தது. எங்கிருந்து வந்தது? கைலாயத்திலிருந்து வந்தது! சிவபெருமானிடம் இருக்கும் அல்லவா—அந்த நந்தி! அது தன் விருப்பம்போல சோளக் கொல்லையை மேய ஆரம்பித்தது.

இவன், என்னமோ தெரியவில்லை, திடீரென்று கண் விழித்துக் கொண்டான். நந்தியைப் பார்த்தான். விரட்டிப் பிடிப்பதற்காக அதன் அருகில் ஓடினான். அது அதற்குள் விருட்டென்று புறப்பட்டு ஆகாயத்தில் பறந்து போய்விட்டது.

கொண்டுவந்து சேர்த்தது.

இவன் வீடு வந்து சேர்ந்தான். பேசாமல் சந்தோஷமாக வாழ வேண்டியதுதானே! அதை விட்டு விட்டான்.

''அவ்வளவு தாராளமாகத் தங்கக் கட்டிகளை அள்ளிக் கொடுத்தார்களே! அவை உண்மையிலேயே தங்கக் கட்டிகள் தானா......இல்லை வேறேதாவது...!'' என்ற சந்தேகம் அவனுக்கு வந்துவிட்டது.

இவன் மனிதன் தானே... இயல்பாக வரக்கூடிய சந்தேகம். இங்கேயே யாராவது கொஞ்சம் தாராளமாகத் தர்மம் செய்தால் மக்கள் அவன் செய்த செயலைப் பாராட்டுவதில்லை; மாறாக, இப்படி அள்ளி வீசுகிறானே, இவன் எங்கே கொள்ளை அடித்திருப்பான்...?' என்று சந்தேகப்படுவதைப் பார்க்கிறோம். அப்படித்தான் அவனும் நினைத்தான்.

ஒரு தங்கக்கட்டியை எடுத்துக் கொண்டு தன் நண்பன் ஒருவனிடம் சென்றான். அவன் இது சமபந்தமான விவரம் தெரிந்தவன்—வியாபாரம் செய்பவன்.

''இது என்ன நிஜமான தங்கம் தானா, பார்த்துச் சொல்!'' என்று அவன் இவனைக் கேட்டுக்கொண்டான்.


பெற வேண்டும் என்றுஆசை. எனவேதான் இப்படிச்செய்தான்.

நடுவானத்தில்நந்தி சென்று கொண்டிருந்தது. அப்போது காலைப் பிடித்திருந்தவன் வாலைப் பிடித்திருந்தவனைப் பார்த்து. ''அதுசரி... உனக்கு எவ்வளவு தங்கம் கொடுத்தார்கள்?'' என்று கேட்டான்.

அதற்கு வாலைப் பிடித்திருந்தவன், ''இதோ இவ்வளவு இருக்கும்!'' என்று இரண்டு கைகளையும் விரித்துக் காட்டினான். அவ்வளவுதான்! அவர்கள் இரண்டு பேரும் மிகவும் வேகமா பூலோகத்துக்கு வர ஆரம்பித்துவிட்டார்கள்! நந்தி மேலே பறந்து போய் விட்டது. இவர்கள் 'பொத்'தென்று பூமியில் வந்து வீழ்ந்தார்கள்.

இந்தக் கற்பனைக் கதையிலிருந்து நாம் தெரிந்து கொள்ள வேண்டிய நீதி இதுதான்:-

வாலைப்பிடித்தவன்...உண்மையைச் சந்தேகப்பட்டான். காலைப் பிடித்தவன்... பேராசைப்பட்டான். உண்மையைச் சந்தேகப்படுபவர்களுக்கும்— பேராசைப் படுபவர்களுக்கும் இது போன்ற கதிதான் ஏற்படும்



'ஆகா, ஏமாந்து போய் விட்டோமோ!' என்று நினைத்தான். 'சரி......இது மறுபடியும் இங்கே வரும்... அப்போது பார்த்துக் கொள்ளலாம்' என்று நினைத்தான்.

மறுநாள் தூங்குவது போல் பாவனை செய்து கொண்டிருந்தான். அப்போது அவன் எதிர்பார்த்தது போலவே அந்த நந்தி வந்தது.

இவன் மெதுவாகப் பாம்பு மாதிரி நெளிந்து, நெளிந்து அதன் அருகில் சென்றான்.

இவன் அருகில் சென்ற சமயத்தில் அது இவனைப் பார்த்துவிட்டது. விருட்டென்று மேலே கிளம்பியது.

இவன் ஒரே தாவாகத் தாவி அதன் வாலை அப்படியே பிடித்துக் கொண்டான். அது பறந்து போகிறது. இவன் அதன் வாலைப் பிடித்தபடி தொங்கிக் கொண்டே போகிறான். நேராக நந்தியுடன் கைலாசம் போய்சேர்ந்தான்.

பார்வதி — பரமேஸ்வரர்களைப் பார்த்து, ''உங்களுடைய நந்தி என் சோளக் கொல்லையை அழித்து எனக்குப் பெரிய நஷ்டத்தை ஏற்படுத்தி விட்டது. இது நியாயமா?'' என்று வினவினான்.

''நியாயமில்லை'' என்று அவர்களும் ஒப்புக் கொண்டார்கள்.

அதற்கு நஷ்ட ஈடாக ஒரு பை நிறைய தங்கக் கட்டிகளைப் போட்டு அவனிடம் அவர்கள் கொடுத்தார்கள். அவன் அதை வாங்கிக்கொண்டான்.

பிறகு அந்த நந்தியே அவனைப் பூலோகத்திற்குக்

நண்பன் தங்கத்தைச் சோதித்துப் பார்த்தான்.

அது நிஜமான தங்கம்தான் என்பதை அவன் புரிந்து கொண்டான். இருந்தாலும் அந்த உண்மையை இவனிடம் 'நண்பன்' சொல்லவில்லை.

''இது தங்கம் இல்லை...! பித்தளை.. !இப்படி உன்னை ஏமாற்றியது யார்?'' என்று மிகவும் தந்திரமாகக் கேட்டான்.

இவன் அப்பாவித்தனமாக எல்லாவற்வறயும் விவரமாக அவனிடம் கூறினான். பிறகு, ''சரி, வருகிறேன்'' என்று நண்பனிடம் விடைபெற்று வீடு திரும்பினான்.

மறுபடியும் கடவுளிடம் சென்று, 'இது நியாயமா? என்று கேட்க வேண்டும்' என்று முடிவுசெய்தான்.

அன்றைய இரவும் நந்தி வழக்கம்போல் அவனுடைய வயலில் மேய்வதற்காக வந்தது. இவன் ஓடிச் சென்று அதன் வாலைப் பலமாகப் பிடித்துக் கொண்டான். நந்தி பறக்க ஆரம்பித்தது. இவன் வாலைப் பிடித்துக் கொண்டு தொங்கினான். அவனுக்கு அப்போது தன் காலில் ஏதோ 'கப்பென்று' பிடித்ததுபோல் தெரிந்தது. ஆதலால் தொங்கியபடியே கீழே சற்றுக்குனிந்து பார்த்தான். பார்த்தால் அவனுடைய நண்பன்...அது தான் 'பித்தளை;' என்று சொல்லி ஏமாற்றினானே, அவன்; இவன் காலைப் பிடித்துக் கொண்டு தொங்கியபடியே வந்து கொண்டிருந்தான். அவனுக்கும்தங்கக்கட்டி...

என்பதை நாம் புரிந்து கொள்ளவேண்டும். ★

## விடைகள்

XI ஆம் பக்கத்தில் 'சிறுவர் சுடர்' பகுதியில் வெளியாகியுள்ள புதிர்களுக்கான விடைகள் வருமாறு:-

### கண்டுபிடியுங்கள்

சிங்கம், புலி, கரடி, மான், யானை, ஒட்டகம், முயல், குரங்கு, அணில், கீரி, ஓநாய், கழுதை.

### உங்களால் முடியுமா?

அலவெட்டி, நெல்லியடி, தொட்டிலடி, தம்பசெட்டி, கரவெட்டி, மயிலிட்டி.

### இயலுமா?

(அ) 45.

(ஆ) சரியான கணக்குகள் — 15
பிழையான கணக்குகள் — 5

(3) தந்தை, மகன், மகனின் மகன் என மூவரே வேட்டையாடச் சென்றனர். இந்த மூவருக்குள் தகப்பன் ஸ்தானத்தில் இருப்பவர்கள் இருவர்; மகன் ஸ்தானத்தில் இருப்பவர்கள் இருவர். அதனைத்தான் இரண்டு அப்பாமாரும் இரண்டு மகன்மாரும் என்று குறிப்பிட்டோம். ஆகவே வேட்டையாடிய மூன்று முயல்களையும் அவர்கள் மூவரும் ஆளுக்கு ஒன்றாகப் பங்கிட்டுக் கொண்டனர்.

(4)
(அ) III (ஆ) VI (இ) I
(ஈ) VII (உ) IV (ஊ) II
(எ) V

# நாலிவகை மனிதர்கள்

மனிதர்களில் நான்கு வகையானவர்கள் இருக்கிறார்கள் என்று ஒரு பழங்கதை கூறுகிறது.

1. உண்டு, உண்டு பிரிவினர்.
2. இல்லை, இல்லை பிரிவினர்.
3. உண்டு, இல்லை பிரிவினர்.
4. இல்லை, உண்டு பிரிவினர்.



'அ' 'உண்டு, உண்டு' என்ற பிரிவைச் சேர்ந்தவர்கள், உழைத்துச் செல்வம் சேர்த்த வள்ளல்கள். அவர்களிடம் செல்வம் இருக்கிற காரணத்தால் இம்மையில் அடையக் கூடிய தார்மிகத்திற்குப்

காரியம் ஆகையால், மறுமையில் அவர்களுக்கு நற்கதி கிடைப்பதற்கு வழியே இல்லாமல் போய்விடுகிறது. மாறாக, நரகத்தில் துன்பம் அனுபவிக்க வேண்டிய கட்டாய நிலையும் அவர்களுக்கு

## குட்டிக் கதைகள் கூறும் தத்துவங்கள்

புறம்பில்லாத எல்லா சுகங்களையும் அடைகிறார்கள்.

அதே சமயம், தான தர்மம் செய்து வள்ளல்களாகவும் அவர்கள் இருப்பதால் — அந்தப் புண்ணியத்தால் அவர்களுக்கு — சொர்க்கமும் கிடைக்கிறது.

எனவே இம்மை, மறுமை ஆகிய இரண்டு சுகங்களும் இவர்களுக்கு உண்டு.

(ஆ) 'இல்லை, இல்லை' என்ற பிரிவைச் சேர்ந்தவர்கள், செல்வமுள்ள கஞ்சப் பிரபுக்கள் அவர்களிடம் செல்வமிருந்தும் கஞ்சத்தனமும் கூடவே இருப்பதால், இம்மை சுகங்களை அவர்கள் அடைவதில்லை. தான தர்மம் செய்யாததால், மறுமையிலும் அவர்களுக்கு உயர்ந்த நிலை கிட்டுவதில்லை. எனவே இம்மை, மறுமை ஆகிய இரண்டு சுகங்களும் இவர்களுக்கு இல்லை.

(இ) 'உண்டு, இல்லை' என்ற பிரிவினர் தாசிகள். எந்த தர்ம நியாயத்திற்கும் உட்படாமல் எல்லா உலக சுகங்களையும் அவர்கள் தேடி அடைகிறார்கள். ஆனால், அவர்கள் செய்வது பாவ

ஏற்படுகிறது.

எனவே இந்த 'உண்டு, இல்லை' பிரிவினருக்கு இம்மை உண்டு; மறுமை இல்லை.

(ஈ) சந்நியாசிகளும் எளிய வாழ்க்கை நடத்தும் புண்ணியசீலர்களும் நான்காவதாகிய 'இல்லை, உண்டு' என்ற பிரிவைச் சேர்ந்தவர்கள். அவர்கள் இந்த உலக சுகபோகங்களைத் தாங்களாகவே விரும்பி நிராகரிக்கிறார்கள். ஆனால் தூய தவ வாழ்க்கையின் காரணமாக அவர்களுக்கு மறுமையில் முக்தி கிடைக்கிறது. இந்த 'இல்லை, உண்டு' பிரிவினருக்கு இம்மை இல்லை; மறுமை உண்டு. ★

# கவர்ச்சி இல்லாத பெண் செய்தியாளர்

வேலையிலிருந்து நீக்கப்பட்ட தூர்தர்ஷனின் செய்தி வாசிப்பாளர்களான 6 பெண்களையும் மீண்டும் வேலையில் சேர்ப்பது குறித்த பிரச்சினையை விரைவில் பரிசீலிப்பதாக மத்திய செய்தி ஒலிபரப்புத் துறை அமைச்சர் சுஷ்மா ஸ்வராஜ் உறுதியளித்துள்ளார்.

கவர்ச்சியாக இல்லை என்பதைக் காரணம் காட்டி இந்த ஆறு பெண் செய்தி வாசிப்பாளர்களும் நீக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. ★

# மூன்றாம் தரப்பு...

(11 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆனால் யுத்த களங்களில் இருந்து ஏவப்படும் ஆயுதங்களால் மேலும் பாதிப்புக்கள் வரலாம் என்ற அச்சம் அவர்களிடம் உண்டு.

முல்லைத்தீவின் சில பகுதிகளில் மக்கள் மீள் குடியேற்றப்படுகின்றனர்.

யாழ். மக்களுக்கும், வன்னி மக்களுக்கும் இடையில் நிறையத்தொடர்புஉண்டுஅவர்கள் எல்லோரும் ஒருவரே.எனவே அவர்களின் தொடர்புகளை அறுத்து அவர்களைப் பிரித்து விடக்கூடிய எந்த நடவடிக்கையையும் எடுக்க வேண்டாம் என்று புலிகளிடம் கேட்டுக்கொண்டார் ஆயர்.

ஆயர் வன்னி செல்லும் வழியில் கொழும்பில் அங்குள்ள வெளிநாட்டுத் தூதுவர்கள் மூவரையும், எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவையும், தென்னிலங்கை ஆயர்கள் சிலரையும் சந்தித்துப் பேசினார்.

வன்னி மக்களின் வாழ்க்கைக் கஷ்டங்களை நேரில் பார்த்த திருப்தி ஆயருக்கு.

அவரின் விஜயத்தின் மூலம் விடுதலைப்புலிகளின் இப்போதைய அரசியல் நிலைப்பாடு தெரியவந்துள்ளது என்பது விமர்சகர்களுக்குக் கிடைத்த தகவல். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் குறித்து அரசுக்கு எவ்வித அக்கறையும் இல்லை

## வட. - கிழ. தேர்தல் நடைபெறாது என்ற அறிவிப்பால் ஏமாற்றம்

தமிழர்களுக்கு இந்த நாட்டில் உரிமையும் இல்லை; பாதுகாப்பும் இல்லை என்ற அலங்கோல நிலைப்பாட்டில் இப்போதில்லை எப்போதுமே மாற்றமில்லை என்பது நாளுக்கு நாள் வெகு நிதர்சனமாகி வருகிறது!

சுதந்திரத்துக்குப் பிந்திய கடந்த ஐம்பது வருட காலத்தில் இன்றுள்ளது போல என்றுமே கேவலமுற்றதில்லை என்று கூறுமளவுக்கு தமிழர்களின் வாழ்க்கை மிகவும் தாழ்ந்து போயுள்ளது.

தமிழர்கள் தமது சுதந்திரத்தைப் பெறுவதற்கு ஆயுதப் போராட்டத்தைக் கைக்கொள்ள நிர்ப்பந்திக்கப்பட்டார்கள் என்பது மாற்ற முடியாத வரலாறு. ஜனநாயக முறையிலான — அகிம்சை வழியிலான — தமிழர்களின் நியாயமான உரிமைப் போராட்டங்களை சிங்களத் தலைவர்கள் பொருட்படுத்தவில்லை: முறியடித்தார்கள்; அடக்கி ஒடுக்கினார்கள்; ஆயுத பலத்தைப் பயன்படுத்தினார்கள்; அழிக்கவும் முற்பட்டார்கள்.

அதனால் ஜனநாயகமும் வேண்டாம், தேசிய நீரோட்டமும் வேண்டாம் நாடாளுமன்றமும் வேண்டாம் என்று விரக்தி மிகுந்த இறுதி நிலையிலேயே தமிழ் இளைஞர்கள் ஆயுதம் ஏந்தினார்கள்;

அதன் விளைவுதான் இன்றைய பெரும் போர்.

ஏற்கனவே தமக்கு முந்தையோர் விட்ட தவறை உணர்ந்த இன்றைய சிங்களத் தலைவர்கள் தமிழ் இளைஞர்களில் ஒரு குறிப்பிட்ட சாரரை தேசிய நீரோட்டத்துக்கும், ஜனநாயக முறைக்கும், நாடாளுமன்றக் கதிரைகளுக்கும் கவர்ந்து இழுத்தார்கள்.

ஆனால் இப்போது...

நாடாளுமன்றத்தின் மூலம், ஜனநாயகத்தின் மூலம் தமிழர்களுக்கு என்ன கிடைக்கிறது, எதுவும் கிடைக்குமா என்ற கேள்வி மீண்டும் எழும் நிலையே உருவாகி வருகிறது.

போர் தொடர்வதால் வன்செயல்களும் தொடர்கின்றன. அதனைச் சாட்டாக வைத்து இந்த நாடு தொடர்ச்சியாக, இரண்டரை வருடங்களுக்கு மேலாக அவசரகால நிலையில் — ஆபத்தான நிலையில் வைக்கப்பட்டுள்ளது.

அதன் பொருட்டு அவசரகாலச்சட்டம் மாதாந்தம் நாடாளுமன்றத்தில் கொண்டு வந்து அதிகப்படி வாக்குகளால் நிறைவேற்றப்படுகிறது.

அவசரகாலச் சட்டத்தினால் இப்போது அதிக அளவில் (என்றும் போல) கொடுமைப் படுத்தப்படுபவர்கள் தமிழர்களே. இதனைச் சாதாரண சிங்கள, முஸ்லிம் மக்கள் கூட அறிவர்.

ஆனால் நாடாளுமன்றக் கதிரைகளில் உள்ள தமிழ் எம்.பிக்கள் இதனைக்கண்டு கொள்வதாக இல்லை. அவசரகாலச்சட்டத்தை எதிர்க்க தோற்கடிக்கப் போதிய வாக்குப்பலம் இருந்த போதிலும் அவர்கள் அரசாங்கத்திற்கு முண்டு கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். மகுடிக்குக் கட்டுண்ட நாகம்போல சந்திரிகாவை எதிர்த்துப்பேச முடியாமல், அவசரகாலச் சட்டத்தை எதிர்த்து வாக்களிக்க முடியாமல் காலத்தைக் கடத்துகிறார்கள்.

இந்த மாதமும் அவசரகாலச் சட்டம் தமிழ் எம். பிக்களின் ஆதரவோடு நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டு விட்டது.

ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த முஸ்லிம் எம்.பியான அஸ்வர் அவசரகாலச் சட்டத்தை எதிர்த்து வாக்களிக்குமாறு சம்பந்தப்பட்ட தமிழ் எம். பிக்களுக்கு அழைப்பு விடுத்தும் அந்தக் குரல் அவர்கள் காதில் விழவில்லை.

தமிழர்கள் சந்தேகப் பிராணிகளாக நோக்கப்பட்டு நெறிமுறை இன்றி, வகை தொகை இன்றி கண்டகண்ட மாதிரி கைதுசெய்து துன்புறுத்தப்படும் இந்த வேளையில் கூட —

தமிழர்கள் என்றால் கேவலப்படுத்தப்பட வேண்டியவர்கள், அவமானப்படுத்தப்பட வேண்டியவர்கள் என்ற அணுகுமுறை ஊழிக் கூத்தாடும் வேளையில் கூட —

தமிழ் எம். பிக்கள் கண்களை இறுக மூடிக் கொண்டிருக்கிறார்கள். ஜனாதிபதியைச் சந்தித்தோம்; நீதி அமைச்சரைச் சந்தித்தோம்; அவர்கள் இன்னின்னது எல்லாம்செய்ய உறுதியளித்திருக்கிறார்கள் என்று பத்திரிகைகளுக்கு அறிக்கைவிடுவதோடு இவர்களின் பணி முடிவடைந்து போகிறது.

இவர்கள் சந்தித்து அவர்கள் என்ன செய்தார்கள் என்று ஸ்ரீமான் பொதுஜனம் கேட்கிறார். இவர்களின் பதில் என்னவோ...?

## உள்ளும் புறமும்

### குறுமுனி

இதற்கு மேல் இவர்களால் எதுவுமே செய்ய முடியாது என்ற இயலாமை நிரூபிக்கப்பட்டிருக்கிறது. இவர்களை எந்த வகையில் எம். பிக்கள் என்று வகுத்துக் கொள்வது என்ற ஸ்ரீமான் பொதுஜனத்தின் கேள்விக்கும் இவர்கள் பதில் சொல்லியாகத் தான் வேண்டும்.

தமிழ்க் கட்சிகளுக்கு இப்போது ஓர் ஏமாற்றமும் ஏற்பட்டிருக்கிறது. இனப்பிரச்சினைக்குத் தீர்வு இப்போது கிடைக்கிறதோ, எப்போது கிடைக்கிறதோ, மாகாண சபைத் தேர்தல் நடந்தால் அதில் கலந்து கொண்டு போட்டியிடுவது என்று அவை முடிவு செய்திருந்தன.

யாழ். உள்ளூராட்சித் தேர்தலைப் போலன்றி, விருப்பத்துடனேயே போட்டியிடுவது அவற்றின் நிலைப்பாடாக இருந்தது. ஆனால் அரசமைப்பு, விவகார நீதிஅமைச்சர்பேராசிரியர்ஜி.எல். பீரிஸ் விடுத்த அறிவிப்பு தமிழ்க் கட்சிகளைத் தூக்கிவாரிப் போட்டிருக்கிறது. ஓகஸ்ட் மாதத்தில் தேர்தல் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்ட மாகாண சபைகளில் வடக்கு–கிழக்கு அடங்கவில்லை!

வடக்கு–கிழக்கில் மாகாண சபைத் தேர்தல் நடத்துவது நடைமுறைச் சாத்திய மற்றது என்று தேர்தல் திணைக்கள அதிகாரிகள் கருதுவதாக இந்தப் பத்தியில் ஏற்கனவே தெரிவித்திருந்தோம்.

அந்த நடைமுறைச் சிக்கலை அமைச்சர் பீரிஸ் அறிந்திருக்கிறார். வடக்கு— கிழக்கு மாகாணசபையின் மொத்தமுள்ள எட்டு மாவட்டங்களில் முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒரு சிறு கிராமம் தானும் படையினரின் கட்டுப்பாட்டில் இல்லை. அவ்வாறிருக்க அந்த மாவட்டத்தில் எங்கே எப்படி வாக்களிப்புக்கு ஏற்பாடு செய்வது?

அதனால் அந்த தேர்தல் நடத்த முடியாது. ஆகையால் வடக்கு — கிழக்கு மாகாண சபைத் தேர்தலையும் நடத்த முடியாது.

1994 பொதுத்தேர்தல் நடைபெற்றதுபோல, 1998 யாழ். உள்ளூராட்சித் தேர்தல் நடைபெற்றதுபோல வடக்கு —கிழக்கு மகாணசபைத் தேர்தலும் நடத்தப்படும் என்று ஆகாயக் கோட்டை கட்டிய தமிழ்க் கட்சிகளின் கற்பனையில் மண் விழுந்து விட்டது.

இனி வேண்டுமென்றால், இடைக்கால நிர்வாக சபையை நிறுவுமாறு சந்திரிகாவின் காலில் விழவேண்டியதுதான்! வேறு என்ன செய்ய முடியும்?

அவசரகாலச் சட்டத்தை எதிர்த்து வாக்களித்தால் அப்படி எல்லாம் செய்ய முடியாது என்பதாலேயே ஆதரவு வாக்குப் போடுகிறார்கள்; அவர்கள் புத்திசாலிகள் என்று கெக்கட்டம் போட்டுச் சிரிக்கிறார் ஸ்ரீமான் பொது ஜனம்.

தாய் பிச்சை எடுக்க, மகன் காசிக்குப் போய் அன்னதானம் கொடுக்கும் நிலையில் தமிழ் அரசியல்வாதிகள் இருப்பது தமிழர்களின் வழக்கமான சாபக்கேடாயிற்றே,... என் செய்வது?

★ ★ ★

இனப்பிரச்சினைக்கு— நியாயமான தீர்வு ஒன்றைக் கண்டாலாவது தமிழர்கள் சந்தேகப் பிராணிகளாகவும், கைது செய்யப்பட வேண்டியவர்களாகவும் மாக்களாகவும் நடத்தப்படும் நிலை மாறாதா என்று ஏங்கும் தமிழர்கள் பலர்.

அரசியல் தீர்வு ஒன்றைக் காண்பதில் அரசாங்கம் தவழ்ந்து கொண்டிருப்பது அகில உலகத்துக்கும் தெரிந்த ஒன்றுதான்.

சமாதான வழியில் அரசியல் தீர்வு காணவேண்டுமெனில் விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்தவேண்டும் என்பது அரசியல் நிபுணர்களால் பரவலாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கருத்தாகும்.

ஆனால் விடுதலைப்புலிகள் இயக்கத்தைத் தடைசெய்து, பேச்சுக்களுக்கான கதவுகளை அரசு மூடியுள்ளது. இருதரப்பினரும் இரு துருவப்பட்ட நிலையில் தூரத்திலும் முரண்பட்டும் நிற்கின்றனர்.

இந்த இடைவெளியைக் குறைத்து இருதரப்பினரையும் பேச வைப்பதற்கு மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் அத்தியாவசியமாகி விட்டது.

ஆனால் அரசாங்கமோ மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் குறித்து ஒரு தீர்க்கமான நிலையில்இல்லை. சிலவேளைகளில் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்தில் விருப்பம் உள்ளதாகக் காட்டிக்கொள்கிறது. சில சந்தர்ப்பங்களில் தனக்கு அதில் அக்கறை இல்லையென்று கூறுகிறது.

அரசாங்கத் தரப்பு இன்னொரு விநோதமான கருத்தையும் போக்கையும் கொண்டுள்ளது.

விடுதலைப் புலிகள் பேச்சுவார்த்தைக்கு வர மாட்டார்கள்; தாங்கள் பலவீனமடையும் போது அல்லது மேலும் ஆயுதங்களைப் பெற்றுக் கொள்ளும் வரை பேச்சுவார்த்தைக்கு வருவதாகக் கூறுவார்கள். அதனால் பேச்சுவார்த்தைக்குத் தயார் என்று விடுதலைப் புலிகள் கூறுவதைக் கணக்கில் எடுப்பதில் பயனில்லை என்ற கருத்தும் போக்குமே அதுவாகும்.

இந்தக் கருத்தும் போக்குமே அரசாங்கத்துக்குப் பேச்சுவார்த்தையில் நம்பிக்கை இல்லை என்பதனை எடுத்துக் காட்டப் போதுமானதாகும்.

அரசு இத்தகைய ஒரு கடும் போக்கினைக் கடைபிடித்தாலும், தமிழீழ விடுதலைப் புலிகள் பிரமுகர்கள் யாழ். மறை மாவட்ட ஆயர் அதிவண. தோமஸ் சௌந்தர நாயகத்திடம் வெளியிட்ட தகவல் கொழும்பில் அரசியல் மற்றும் பத்திரிகைத் துறைகளில் பெரும் பரபரப்பை உண்டு பண்ணியுள்ளது.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு ஒன்றைக் காணும் பொருட்டு மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்துக்குத் தாம் இன்னும் தயார் என்று விடுதலைப் புலிகள் பிரமுகர்கள் யாழ். ஆயரிடம் தெரிவித்திருந்தனர்.

விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம், அரசியல் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன், அரசியல் துறையைச் சேர்ந்த விதுரன், சுதா ஆகியோர் யாழ். ஆயரைச் சந்தித்த பிரமுகர்கள் குழுவில் அங்கம் வகித்தனர்.

அரசாங்கம் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் குறித்து அக்கறையே இல்லாமல் இருக்கும் போது, விடுதலைப் புலிகள் தாம் இன்னமும் அதற்குத் தயாராகவே உள்ளதாக அறிவித்திருப்பது அரசியல் வட்டாரங்களை பல விதமாக சிந்திக்க வைத்துள்ளது.

யாழ். ஆயரை விடுதலைப் புலிகள் பிரமுகர்கள் சந்தித்தார்களா, மத்தியஸ்தத்துக்குத் தயார் என்று அவர்கள் கூறினார்களா என்று பலரும் ஆச்சரியத்துடன் கேட்டார்கள்.

இதனை ஒரு புதிய திருப்பமாக எடுத்துக் கொண்டு அரசு இவ்விடயத்தில் ஆர்வங் காட்டக் கூடாதா என்ற கருத்துக் கூட கொழும்பு அரசியல் வட்டாரங்களில் நிலவுகிறது.

ஆனால், வெளிநாட்டு அரசாங்கம் ஒன்றின் மத்தியஸ்தத்துடன் விடுதலைப் புலிகளுடன்பேசுவதற்கான எந்த முயற்சியிலும் அரசு ஈடுபடும் நோக்கம் இல்லை என்று அரசாங்கத்தரப்புப் பிரமுகர் கூறியிருப்பதாக கொழும்பிலிருந்து வெளிவரும் ஆங்கிலப் பத்திரிகை செய்தி வெளியிட்டிருக்கிறது.

மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்துடன் புலிகளுடன் பேசுவது குறித்த முயற்சிகள் நடைபெறுவதாக பிரிட்டனின் வெளிநாட்டு உதவி அமைச்சர் டெறெக் பற்செற்றின் உத்தேச கொழும்பு விஜயத்தையொட்டி ஒரு கதை அடிபட்டது.

ஆனால் பற்செற்றின் விஜயம் திட்டப்படி இம்மாத இறுதியில் நடைபெற மாட்டாது என்றும், உள்நாட்டில் உள்ள அலுவல்கள் காரணமாக அவரது விஜயம் ஒத்தி வைக்கப்பட்டுள்ளதாகவும் இப்போது அறிவிக்கப்பட்டிருக்கிறது. டெறெக் பற்செற் வகிக்கும் பதவியை முன்னர் வகித்த லியெம் பொக்ஸ், இலங்கை வந்திருந்த போது சந்திரிகா – ரணில் இணக்கப்பாடு ஒன்றை உருவாக்கியிருந்தார்.

எனினும் —

யாழ். ஆயரின் வன்னி விஜயத்தின் போது விடுதலைப் புலிகள் தெரிவித்த கருத்து அரச வட்டாரங்களில் மாற்றத்தை ஏற்படுத்துமா இல்லையா என்பதனைத் திட்டவட்டமாகக் கூறமுடியாது என்று அரசியல் விமர்சகர்கள் கருதுகிறார்கள்.

யாழ். ஆயர் அதிவண. தோமஸ் சௌந்தரநாயகம் அடிகளார் எவ்வாறு வன்னி சென்றார் அவரது விஜயத்தின் நோக்கம் என்ன என்று அறிய முற்பட்டோருமுளர்.

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு சென்று அங்கிருந்து மன்னாருக்கும் பின்னர் மடுவுக்கும் சென்றார் யாழ். ஆயர். மடுவிலிருந்து மல்லாவி, அங்கிருந்து வட்டக்கச்சி, இராமநாதபுரம் பின்னர் முறிகண்டி, அதிலிருந்து அமைதிபுரம் வரை சென்றார் ஆயர்.

இப்பகுதிகளில் உள்ள மக்களின் வாழ்க்கைக் கஷ்டங்களைக் கண்டறிவதும், அமைதிபுரத்தில் சமய நிகழ்வு ஒன்றில் கலந்து கொள்வதும் ஆயரின் விஜயத்தின் பிரதான நோக்கம்,

வன்னியில் யாழ். குடாநாட்டிலிருந்து சென்றவர்களும், அங்கு பிறந்து வளர்ந்தவர்களும், போருக்கு முன்னர் குடியேறியவர்களுமாக முத்தரப்பு மக்கள் உள்ளனர்.

ஆனால் வன்னிவாழ் மக்கள்எண்ணிக்கையை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளவில்லை. தனக்கென ஒரு மதிப்பீடு எண்ணிக்கையை வைத்துக் கொண்டு அதற்கேற்ப உணவு, மருந்து மற்றும் பாவனைப் பொருள்களை அனுமதிக்கிறது. இதுவே பொருள்கள் தட்டுப்பாட்டுக்கும், பட்டினிக்கும் காரணம்.

இப்போது அங்கு அரிசி ஒரு கிலோ பதினெட்டு ரூபா விற்கிறது. எனினும் மக்களிடம் பணம் இல்லை. இப்போது நோய்ப் பாதிப்புக்குறைவு.

இங்கிருந்து இடம்பெயர்ந்த மக்களில் மிகப் பலர் திரும்பி வரவிரும்புகின்றனர். ஆனால் போக்குவரத்து வசதியில்லை. வேறு சிலர் இங்கு வருவதற்கு விருப்பம் இல்லாதவர்களாகக் காணப்படுகின்றனர். அவர்கள் கூறும் காரணம் யாழ்ப்பாணம் வந்தால் இராணுவம் பிடிக்கும்; மற்றும் பல தொல்லைகள் தொந்தரவுகளை அனுபவிக்க நேரிடும் என்பதாகும்.

வன்னி மக்களுக்கு இங்குள்ள மக்களைவிட பலவிதங்களாலும் சுதந்திரங்களும் அதிகம். இரவில் கூட எவ்வித தடையும் பயமும் இன்றி மக்கள் நடமாடுகிறார்கள்.

(XIII ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னத் திரையின் வரவால் சினிமாத் திரைக்கு பாதிப்பா?

**தமிழ்நாட்டு மக்களுடனும், இலங்கையில் வடக்கு–கிழக்கு வெளியே வசிக்கும் தமிழர்களுடனும் ஒப்பிடும்போது வடக்கு–கிழக்கு மக்களின் வாழ்வில் சின்னத்திரையோ (டெலிவிஷன்), சினிமாத்துறையோ கடந்த தசாப்த காலத்தில் பெரியபாதிப்பு எதனையும் ஏற்படுத்தவில்லை என்றே கூறலாம். ஏனெனில் சின்னத்திரையுடனும், சினிமாத்துறையுடனும் நெருங்கும் வாய்ப்பு, வசதிகள் இக்காலப் பகுயில் வடக்கு—கிழக்கில் வாழும் பெரும்பான்மை மக்களுக்கு கிட்டாமல் அடிபட்டுப் போய்விட்டது. என்றாலும் மினி சினிமாக்களும் வீடியோ கிளப்புகளும், பார்க்க வாய்ப்புள்ள ஒரு சில டெலிவிஷன் சனல்களும் சிறிதளவு பாதிப்பை ஏற்படுத்துகின்றன என்பது உண்மைதான்.**

**சின்னத் திரையையும் சினிமாத் திரையையும் முழு அளவில் பார்க்க வசதி, வாய்ப்புள்ள தமிழக மக்களை அவை எவ்விதம் ஊடுருவியிருக்கின்றனஎன்பது பற்றியமேலோட்டமான தகவல்களைத் தருகின்றது இக் கட்டுரை.**

தொலைக்காட்சி எனும் மக்கள் தொடர்புச் சாதனம் தமிழ் நாட்டு மக்களுக்கு அறிமுகப்படுத்தப் பட்டபோது, அதைக்கண்டு தமிழ்த் திரையுலகமே மிரண்டுபோன காலம் ஒன்று உண்டு.

''இனி மக்கள் திரைப் படத்தை ஏறெடுத்தும் பார்க்கமாட்டார்கள். திரையரங்குகளுக்குச் சென்று, ஏகமாகச் செலவழித்து, திரும்பத் திரும்ப, பார்த்த காட்சிகளையே பார்த்து, கேட்ட தத்துவங்களையே கேட்டு அலுத்துப் போயிருக்கும் மக்களுக்குத் தொலைக்காட்சி ஒரு வரப்பிரசாதம் போல வாய்த்திருக்கிறது. இந்தச் சின்னஞ் சிறு கண்ணாடித்திரையில் பல்வேறு வகையான நிகழ்ச்சிகளையும் நிஜங்களையும் பார்க்கலாம்'' எனும் கருத்து மக்கள் மத்தியில் அலை அலையாய்ப் பரவியது.

ஆனால் அப்படியெல்லாம் எதுவும் நடக்கவில்லை. ஓர் அரசின் சாதனத்தில் இதற்கு மேல் எதுவும் தெரியாது என்று மக்கள் தங்களுக்குள் சமாதானமடைந்து கொண்டார்கள். காலப்போக்கில், தமிழில் தனியார் தொலைக்காட்சிகளின் (செயற்கைக் கோள்) அலைவரிசைகளும் பரவத் தொடங்கின. அப்போதும் தமிழ்த் திரையுலகம் மிரளத்தான் செய்தது. தங்களின் வீட்டுக்குள்ளேயே குறைந்த செலவில் காட்சியளிக்கிற திரைப்படங்களைப் புறந்தள்ளி விட்டு, மக்கள் திரையரங்குகளுக்கு வருவார்களா என்பதே அவர்களின் கவலையாக இருந்தது.

ஆனால், அவர்கள் கவலைப்பட்டதுபோல் எதுவும் நடக்கவில்லை. பழைய படங்களை மீண்டும் சிலமுறை வீட்டுக்குள்ளேயே பார்த்து ரசித்த மக்கள் புதிய படங்களைத் திரையரங்குக்குச் சென்று பார்த்துவிட்டு வந்தார்கள். ஆக புகைப்படக் கலையால் ஓவியக் கலையும், திரைப்படக்கலையால் நாடகக் கலையும் அழிந்து விடாதது போலவே, தொலைக்காட்சி எனும் மக்கள் தொடர்புச் சாதனம் திரைப்படம் எனும் மக்கள் தொடர்புச் சாதனத்தை எந்தவிதப் பாதிப்புக்கும் இட்டுச் செல்லவில்லை. இன்னும் சொல்லப் போனால் தமிழ்த் திரைப்பட உலகின் உற்ற நண்பனாகத் தமிழ்த் தொலைக்காட்சியுலகம் மாறி விட்டது. எப்படிச் சாய்த்து விட்டாலும் பழையபடியும் நிமிர்ந்து நிற்கும் தஞ்சாவூர்ப் பொம்மையைப் போலவே, தொலைக்காட்சிகளின் நடவடிக்கைகள் திரைப்படத் துறைக்கு சாதகமாகவும் லாபகரமாகவும் இருப்பதையே காண முடிகிறது.

இன்றைய நிலையில் தொலைக்காட்சி என்பது பல்வேறு தனித்தன்மைகள் கொண்ட மக்கள் தொடர்புச் சாதனம் எனும் நிஜம் மாறி, அது திரைப்படத் துறையின் அவசியமானதொரு அங்கமாகவே மாறி விட்டது.

திரையரங்குகளுக்கு ஏற்கனவே விற்பனை செய்யப்பட்ட திரைப்படங்களை முழுமையாகவும், சண்டைக் காட்சி, பாடல்காட்சி, வசனக்காட்சி, பாசக்காட்சி, நேசக்காட்சி என்று பல்வேறு வகையாகப் பலமுறை பிரித்துக் கூறுபோட்டும் மீண்டும் மீண்டும் விற்பனை செய்கிற வேலையைத்தான் இன்றைய தமிழ்த் தொலைக்காட்சி நிலையங்கள் செய்து வருகின்றன.

தொலைக்காட்சி எனும் மாபெரும் மக்கள் தொடர்புச் சாதனத்தைச் சாதாரணமானதொரு அளவுகோலாகப் பயன்படுத்தி மக்களைத் திரைப்படங்களால் அடித்துக் கொண்டே இருக்கிற கீழ்மைதான் அலைவரிசைகளின் கைவரிசையா என்று ஆங்காங்கு பரவலாக சமூகவியலாளர்கள் கேள்வி கேட்கின்றனர்.

''தரமான, மக்களுக்குத் தெளிவூட்டக்கூடிய நிகழ்ச்சிகளை மக்கள் பார்ப்பதே இல்லை. திரைப்படங்களையும் அதன் பகுதிகளையும் தான் விரும்பிப் பார்க்கிறார்கள்'' என்பது தொலைக்காட்சியுலகில் தத்துவமாகவும், பதிலாகவும் இன்று வரை ஒலித்துக் கொண்டிருக்கிறது. ஆடத் தெரியாதவள் கூடம் சரியில்லை என்று சொன்னதைத்தான் இ[illegible] பதிலுக்கும் பொருத்திப் பார்த்துக்கொள்ள வேண்டும்.

தொலைக்காட்சிகளில் மக்கள் திரைப்படங்களை மட்டும்தான் விரும்பிப் பார்க்கிறார்கள் என்பது வியாபாரிகள் மற்றும் அவர்களைந் தன் வசப்படுத்தி வைத்திருக்கும் விளம்பர நிறுவனங்களின் சுய நலம் உறைந்த கருத்தாகும். அந்தக் கருத்தைத்தான் தொலைக்காட்சி நிகழ்ச்சித் தயாரிப்பாளர்கள் ஊதுகுழலாக மாறி உரைத்துக் கொண்டிருக்கிறார்கள்.


தொலைக்காட்சி நிகழ்ச்சித் தயாரிப்பாளர்களைப் பொறுத்தவரை சமூக நோக்குடன் திட்டமிட்டு மூளை, பணம், உழைப்பு போன்றவற்றைச் செலவழித்து நிகழ்ச்சிகளைத் தயாரிப்பதைவிட என்றைக்கோ, யாரோ தயாரித்த திரைப்படங்களின் காட்சிகளைப் பிரித்து, தகுந்த தலைப்பு வைத்து நிகழ்ச்சியைத் தயாரிப்பது மிகவும் சுலபமான காரியமாக இருக்கிறது. இன்றைய நிலவரப்படி, தொலைக்காட்சி நிகழ்ச்சித் தயாரிப்பாளர்கள் தலைப்புகளுக்கு மட்டும் தலையைப் பிய்த்துக் கொண்டால் போதும் எனும் நிலை உண்டாகி விட்டது. கோழி முட்டையை உடைப்பதா கடப்பாறையின் சாதனை என்றுதான் நாம் வேதனைப்பட வேண்டியிருக்கிறது.

தமிழ்த் தொலைக்காட்சிகளில் நேருக்கு நேர், செய்திகள், சிறப்புப் பார்வை, செய்திப் படங்கள், பேட்டிகள் போன்று ஒரு சில நல்ல நிகழ்ச்சிகள் அல்லது நல்ல முயற்சிகள் தென்படத்தான் செய்கின்றன. ஆனால் அது போதுமாஎன்றால் போதாது என்றுதான் சொல்லவேண்டியிருக்கிறது. பெருகியிருக்கிற சானல்களோடும், மக்கள் தொகையோடும், மக்களிடையே நீக்கமற நிறைந்திருக்கிற பிரச்சினைகளோடும் ஒப்பிட்டுப் பார்க்கும் போது அவை போதவே போதாது. மக்கள் தொடர்புச் சாதனங்களின் வளர்ச்சி என்பதை அவை மக்களுக்குப் பயன்படுவதை வைத்தே தீர்மானிக்க முடியும்.

''இந்தப் படத்தை நான் ஏற்கெனவே ரி.வி.யில் மூணு தடவை பார்த்திட்டேன். சே! போட்டதையே போட்டு அறுக்கிறாங்கப்பா'' என்கிற பாணியில் ஒவ்வொரு வீட்டிலும் கேட்கும் முணுமுணுப்பை விளம்பரதாரர்களும் நிகழ்ச்சித் தயாரிப்பாளர்களும் செவி சாய்த்துக் கேட்க வேண்டும். எங்கோ ஓர் அறையில் அமர்ந்து கொண்டு தீர்மானம் செய்பவர்களும் தாம் தீர்மானிப்பதே வேதம் என்று கருதி அதை மக்கள் மீது திணிப்பவர்களும் வெகு விரைவிலேயே மக்களால் அடையாளம் காணப்படுவார்கள்.

சாதாரண நாள்களில் 24 மணி நேரமும் திரைப்படங்களையே பிடித்துத் தொங்கிக் கொண்டிருக்கிற தொலைக்காட்சிகள், தீபாவளி, பொங்கல் போன்ற பண்டிகை நாள்களில் மேலும் ஆவேசமாகத் திரைப்படப் பாசம் கொண்டு ஆரவாரம் செய்கின்றன. தமிழ்த் தொலைக்காட்சிகளில் பண்டிகை தினங்களில் ஒளிபரப்பாக இருக்கும் நிகழ்ச்சிகளை எந்தவொரு பாமரனும் பட்டியலிட்டு வெளியிட்டு விடமுடியும்.

'ரிமோட் கண்ட்ரோலை' எத்தனை முறை சித்திரவதை செய்தாலும் சின்னத்திரையில் காட்சிகள் தான் மாறுமே தவிர கொடுமைகள் மாறுவதில்லை. 24 மணி நேர அனைத்துச் சானல்களின் தீபாவளி நிகழ்ச்சிகளில் இதய நோயாளிகளுக்கு அருகில் வெடி வெடிக்காதீர்கள் என்றோ, நெருப்போடு நெருங்கி விளையாடாதீர்கள் என்றோ, நமது மகிழ்ச்சிக்காக] சிவகாசியில் சிறுவர்கள் செய்யும் தியாகங்கள் பற்றியோ, தலைத் தீபாவளிக்கு வரும் மருமகனைத் திருப்திப்படுத்த நடுத்தரக் குடும்பத்து மாமனார்கள் படும் நிஜமான வேதனைகளைப் பற்றியோ எதுவுமே இருக்காது. தொலைக்காட்சியுலகில் படைப்பாளிகளின் பஞ்சம் தலைவிரித்தாடுவதே இதற்குக் காரணம். இன்றைய நிலையில் அங்கு சட்டிகளுக்கும் அகப்பைகளுக்கும் குறைவேயில்லை. அள்ளிப் பரிமாறுவதற்கான கஞ்சிக்குத்தான் பஞ்சமாக இருக்கிறது. அந்தப் பஞ்சத்தை நன்றாகப் பயன்படுத்திக்கொண்டு தரகர்கள் தாண்டவமாடிக் கொண்டிருக்கிறார்கள். திரைப்பட நிகழ்ச்சிக்குத்தான் மக்கள் மத்தியில் மாபெரும் வரவேற்பு இருக்கிறது என்று போலியானதொரு மாயையை விளம்பர நிறுவனங்கள் வெகு சாமர்த்தியமாகப் பரப்பி அதில் வெற்றி கண்டுமிருக்கின்றன. அதை முழுக்க முழுக்க நம்பித் திரைப்படம் சார்ந்த நிகழ்ச்சிகளையே தயாரித்துக்கொண்டு வரும் தயாரிப்பாளர்களுக்கெல்லாம் வேண்டிய விளம்பரங்களைக் கொடுத்து அவர்களைக் கடன் வெள்ளத்தில் இருந்து இவர்கள் காப்பாற்றியிருக்கிறார்களா என்றால் அதுவும் இல்லை. அப்படியெனில் இல்லாத ஒன்றைக் காட்டி இருப்பதைத் தடுக்கும் சாமர்த்தியத்தை மக்கள் நலன் விரும்பும் தயாரிப்பாளர்கள் மேலும் தெளிவாகப் புரிந்துகொள்ளவேண்டும்.



படைப்பாற்றலைப் பலப்படுத்திக்கொண்டு அறிவு பூர்வமான நிகழ்ச்சிகளின் பட்டியலை நீட்டி, தரகர்களின் தடைகளையெல்லாம் தகர்த்து மக்களைச் சென்றடைவதும், அம்முயற்சியில் வெற்றி பெறுவதும்தான் தொலைக்காட்சி எனும் மக்கள் தொடர்புச் சாதனத்தைக் கையாள்பவர்களின் இன்றைய முதல் கடமையாக இருப்பதை உணர முடிகிறது. ஏனெனில் கோடிக்கணக்கான மக்கள் தங்களது நேரத்தையும் மின்சாரத்தையும் செலவழித்து சின்னத் திரையை உற்று நோக்கும்போது அதில் அவர்களுக்கென்றும் ஏதாவது தெரிய வேண்டும்.

நன்றி: தினமணிக்கதிர்

## மந்திரக் குவளை

முன்னொரு காலத்தில் ஓர் அரசன் இருந்தான் அவன் மிகவும் முன்கோபக்காரன். தன் கெட்ட குணம் அவனுக்கு தெரிந்தும் அவனால் அதை மாற்றிக் கொள்ள முடியவில்லை.

ஒரு நாள் தேவதை ஒன்று முன் தோன்றியது. பொன்னால் செய்த ஒரு குவளையைக் கொடுத்து, ''உனக்குக் கோபம் வரும்போதெல்லாம் இதில் மூன்று முறை தண்ணீர் நிரப்பிக் குடி; பிறகு கோபம் வராது'' என்று கூறி மறைந்தது.

அப்போதிருந்தே அரசன் அப்படிச் செய்யத் தொடங்கினான். சில நாள்களில் அவன் சினம் அவனை விட்டு விலகியது.பல நாள்கள் சென்றன.

மீண்டும் தேவதை அவன் முன் தோன்றியது. மந்திரக் குவளை கொடுத்ததற்காக அரசன் பல முறை நன்றி கூறித் தன் மகிழ்ச்சியைத் தெரிவித்தான்.

''மன்னனே உன்னைஏமாற்ற நான் விரும்பவில்லை. அது மந்திரக் குவளை அன்று; சாதாரணமானதுதான். கோபம் வரும்போது சிந்திக்க நேரம் இருக்காது, சிந்தனை வந்தால் கோபம்தானேகுறையும் தண்ணீரை மூன்று முறை ஊற்றிக் குடிக்கும் போது நேரம் கிடைக்கிறது. அப்போது சிந்திக்க முடிவதால் புலன்கள் அமைதி பெறுகின்றன. ஆத்திரம், நியாயத்திற்குத் தன் இடத்தைக் கொடுக்கிறது''என்று கூறிமறைந்தது தேவதை. ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீர் வடிகட்ட புதிய கருவி!

'தாயைப் பழித்தாலும் தண்ணீரைப் பழிக்காதே' என்று கூறுவார்கள். உலகில் அருகி வரும் வளங்களில் நன்னீரும் அடங்கும்.

நன்னீரின் பற்றாக்குறையின் பாதிப்பை இன்று பெரும்பாலான உலக நாடுகள் உணரத் தலைப்பட்டுள்ளன. குடாநாட்டு மக்களும்தான். எங்காவது ஒரு நல்ல தண்ணீர்க் கிணற்றை நாடிச் செல்வது நாளாந்த வழக்கமாகி விட்டது. குடாநாட்டின் சில பகுதிகளைத் தவிர தீவுப்பகுதி உட்பட பெரும் பகுதியில் குடிதண்ணீர்த் தேவை ஒரு பாரிய பிரச்சினையாக மாறிவருகிறது.

கையில் அகப்பட்டதை எடுத்துக் கொண்டு இடம் பெயர நேர்ந்தபோது வலிகாமம் பகுதி மக்கள் முதலில் சந்தித்த கொடுமை இந்த தண்ணீர் பிரச்சினை தான்.

அபயம் அளித்த வடமராட்சி, தென்மராட்சிப் பகுதிகளில் தங்கியிருக்க நேர்ந்த வேளை குடிதண்ணீர்ப் பிரச்சினை எத்துணை பூதாகாரமான பிரச்சினை என்பதை பலரும் உணரத் தலைப்பட்டனர். வடமராட்சி மண்ணில் குடிப்பதற்கும், ஏனைய தேவைகளுக்குமான நீரைத் தாராளமாகப் பெறக்கூடியதாக இருந்தது. ஆனால் தென்மராட்சியில் நிலைமை வேறாக இருந்தது.

பொதுத் தேவைகளுக்கான தண்ணீர் ஒருசில இடங்களைத் தவிர ஏனைய பகுதிகளில் ஓரளவு தாராளமாகக் கிடைத்தபோதும் குடிதண்ணீர் பெறுவதில் பெரும் நெருக்கடி ஏற்பட்டது. ஒருசில கிணறுகளைத் தேடி மக்கள் படையெடுக்க நேர்ந்தது.

தென்மராட்சியில் சில கிணறுகளில் நீர் காவி நிறமாகவும், வேறு சில கிணறுகளில் கடின நீராகவும், வெண்மை நிறமான கல்சிய வீழ்படிவுகள் நிறைந்ததாகவும், உவர் நீராகவும் பல வகைளில் காணப்பட்டன.

தென்மராட்சிப் பகுதியைப் பொறுத்தவரை நீரின் நிறம், சாதாரண நீரின் நிறமற்ற தன்மையை விட மாறுபட்டே இருந்தது. வேறு வழியின்றி அந்த நீரையே சகல தேவைகளுக்கும் பயன்படுத்த வேண்டிய இக்கட்டான நிலையில் பல லட்சம் மக்கள் இருந்தனர்.

குடி தண்ணீர் சுத்தமாக இல்லாதவிடத்து தொற்று நோய்கள் ஏற்படவும், சிறுநீரக செயற்பாடு பாதிக்கப்படவும் வாய்ப்பாகிறது. வயது முதிர்ந்தவர்களும், நிறையுடலிகளும் இந்நிலைக்கு ஓரளவு தாக்குப் பிடித்தாலும் குழந்தைகளும், சிறுவர்களும், உடல்நலக் குறைவானோரும் இதற்குத் தாக்குப் பிடிப்பது மிகக் கடினம்.

இந்நிலையில் தான் குடிதண்ணீரைக் கொதிக்க வைக்கவும், வடிகட்டவும் வேண்டிய அவசியம் ஏற்பட்டது. ஆனால் கொதிக்க வைத்த நீரிலும் வீழ்படிவுகள் காணப்பட்டன. நிறமும் மாற்றமடையவில்லை. வடிகட்டுவதற்கும் வசதி இல்லை, வடிகட்டும் கருவிகள் (Filter) இலகுவில் கிடைக்க முடியாத — பெறுமதி வாய்ந்த — பொருள்களாக விளங்கின.

தேவையும் அவசியமும் ஏற்படுகின்ற போதுதான் மனிதன் புதுப்புதுக் கண்டுபிடிப்புகளையும் முயற்சிகளையும் மேற்கொள்ளவேண்டிய நிலைக்குத் தள்ளப்படுகிறான் என்பது கடந்தகால வரலாறு எமக்கு உணர்த்திய பாடம்.


இடம்பெயர்ந்து வாழ்ந்த காலத்தில் தனது ஆண் குழந்தைக்கு ஏற்பட்ட புதிய நோய்க்கு குடிதண்ணீர்தான் காரணம் என்பது தெரிய வந்தபோது அதனால் பாதிக்கப்பட்ட ஒரு தந்தையின் எண்ணத்தில் வடிவெடுத்து செயலில் உருப்பெற்ற இலகுவான நீர் வடிகட்டும் கருவியையே விளக்கப்படங்களில் காண்கிறீர்கள்.

## வடிகட்டும் செயல்முறை

இரண்டு வாளிகளைக் கொண்ட இக்கருவியின் அமைப்பில் மேலே உள்ள வாளியில் காணப்படும் துவாரங்களைக் கொண்ட குழாய் போன்ற அமைப்பினுள்ளேயே நீர் வடிகட்டப்படுகிறது. செங்குத்தாக கீழே உள்ள வாளியுடன் இணைக்கப்பட்டதாக உள்ள இக்குழாயின் உள்ளே வேறு இரு குழாய்கள் அடங்கியுள்ளன. (அவற்றைப் பொறிமுறை விளக்கப்படத்தில் அவதானிக்குக.) இக்குழாய்கள் அனைத்தும் எஸ் - லோன் பைப்பில் தயாரிக்கப்பட்டவையாகும்.

வெளியே உள்ள குழாய்க்கு அடுத்தபடியாக உள்ள இரண்டாவது குழாயே நீரை வடிகட்டுகிறது. அக்குழாயின் மீது சுமார் 3 அங்குல பருமனுக்கு கம்பளி நூல் சுற்றப்பட்டிருக்கும். இந்த நூலின் ஊடாகவே நீர் உறிஞ்சப்பட்டு வடிகட்டப்படுகிறது.

இதன்படி மேலே உள்ள வாளிக்குள் ஊற்றப்பட்ட நீர் முதலாவது குழாயின் துவாரங்கள் ஊடாகச் சென்று கம்பளி நூல் சுற்றப்பட்ட குழாயினால் உறிஞ்சப்பட்டு அங்கிருந்து மூன்றாவது குழாயை அடைகிறது.




வடிகட்டும் சாதனத்தின் அமைப்பு

வடிகட்டப்படாத நீர் கீழே உள்ள வாளிக்குள் கலக்காதவாறு இந்தப் பொறிமுறை அமைந்துள்ளது.

15 லீற்றர் நீரை இக்கருவி மூலம் வடிகட்ட சுமார் 30 நிமிட நேரம் எடுக்கும்.

## இது ஒரு யாழ்ப்பாண கண்டுபிடிப்பு!

இரண்டாவது குழாய்க்கு உள்ளே மூன்றாவது குழாய் உள்ளது. இதில் சிறுதுவாரங்கள் காணப்படுகின்றன. இரண்டாவது குழாயான கம்பளி நூல் சுற்றப்பட்ட குழாயின் மூலம் உறிஞ்சப்பட்டு— வடிகட்டப்பட்ட நீர் இக் குழாய்க்குள் சென்று அங்கிருந்து கீழே உள்ள வாளிக்குள் சேரும்.



நீர் வடிகட்டும் பொறிமுறை

இலகுவில் பெறக்கூடிய பொருள்களைக் கொண்டு வடிவமைக்கப்பட்ட இக்கருவி வியத்தகு வகையில் தென்மராட்சிப்பகுதி நீரின் நிறத்தை மாற்றி தூய பளிங்கு நீராக மாற்றியிருக்கிறது.

ஐந்நூறு ரூபா செலவில் இக்கருவியை அமைத்துக் கொள்ள முடியும் என்று கூறுகிறார் இதனைக் கண்டுபிடித்து வடிவமைத்த ப. குகராஜா. கோண்டாவில் கிழக்கு ஆர். டி. எஸ். வீதியைச் சேர்ந்த இவர் யாழ். செயலக ஆள் பதிவுத் திணைக்களத்தில் கடமையாற்றுகிறார்.

துருப்பிடிக்கக்கூடிய பொருள்கள் ஏதும் இல்லாததால் நீண்டகாலம் பயன்படுத்தக்கூடிய இக்கருவி, கிணற்று நீரில் உள்ள நீரில் கரையாத அசுத்தங்களையும், நீரில் கலந்துள்ள வீழ்படிவுகளையும் துல்லியமாக வடிகட்டி விடுகிறது.

தனது முயற்சியால் உந்தப்பட்டு பலர் அளித்த ஆதரவும், ஊக்கமும் தன்னை இந்த முயற்சியில் முழுமூச்சுடன் ஈடுபட வைத்தது என்கிறார் குகராஜா.

செயலக ஆள்பதிவுத் திணைக்கள கருத்திட்ட முகாமையாளர் இவரது முயற்சியைப் பாராட்டியதுடன் தமது அலுவலகத்தில் இக்கருவியை பொருத்தியுள்ளார்.

பலரிடையே அறிமுகமான இக்கருவி தற்போது பலராலும் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இக்கருவியினால் வடிகட்டப்பட்ட நீரின் தன்மை யாழ். பல்கலைக் கழக ஆய்வு கூடத்தில் முதற் தடவையாகப் பரிசோதிக்கப்பட்டது. அதன் பெறுபேறு கணிசமான அளவு திருப்திகரமாக அமைந்துள்ளது.

பொதுவாக நீரில் காணப்படும் முக்கிய கனியுப்புக்களான கல்சியம், மக்னீசியம், குளோரைட், பைகாபனேற், காபனேற் போன்றவை வடிகட்டலின் பின்பு எவ்வாறு உள்ளன என்பது ஆய்வு கூடத்தில் பரீட்சிக்கப்பட்டது.

சாவகச்சேரிப் பகுதியில் இருந்து பெறப்பட்ட நீரை இக்கருவி மூலம் வடிகட்டிய பின்பு அதில் காணப்பட்ட உப்புக்களின் அளவு 0.4 கிராம் அளவு குறைந்து காணப்பட்டது. கோண்டாவில் பகுதி நீரில் இதன் அளவு 0.2 வீதமும், யாழ். நகரப் பகுதி நீரில் 0.1 என்ற வீதமும் குறைந்து காணப்பட்டது. இது திருப்தியளிக்கும் வியத்தகு அம்சமாகும் என்று நிபுணர் ஒருவர் தெரிவித்தார்.

ஒரு மனிதனின் ஒரு நாளைய சராசரி குடிதண்ணீர் தேவை மூன்று முதல் நான்கு லீற்றர்கள் ஆகும். இதன்படி தென்மராட்சிப் பகுதியைச் சேர்ந்த ஒருவர் தாம் ஒருநாளில் பருகும் நீரை இக்கருவி மூலம் வடிகட்டி அருந்துவாரேயானால் இவரது உடலில் சேரும் உப்புகள் 1.6 கிராம் $(4 \times 0.4 = 1.6)$ என்ற அளவில் குறைக்கப்படுகிறது.

இக்கருவி மூலம் வடிகட்டுவதற்கு முன்பு 0.4840 கிராம் ஆக இருந்த கல்சியப் படிவுகளின் அளவு வடி கட்டிய பின்னர் 0.4360 கிராமாகக் குறைந்திருந்ததும் பரிசோதனையில் தெரிய வந்தது. நாம் உள்ளெடுக்கும் நீரில் கல்சிய மூலக்கூறு கணிசமான அளவில் குறைக்கப்படுவதால் சிறுநீர்த் தொகுதியுடன் தொடர்புடைய ஆபத்தான நோய்களில் இருந்து நம்மைப் பாதுகாக்க முடியும்.

யாழ்ப்பாணக் கண்டுபிடிப்பான இந்த இலகுவான நீர் வடிகட்டும் பொறியைப் பற்றிய மேலதிகமான விவரங்களைப் பெற விரும்புவோர் தம்மை நேரில் சந்தித்துப் பெறலாம் என்று எம்மிடம் தெரிவித்தார் இதன் கண்டுபிடிப்பாளரான ப. குகராஜா.

எதிர்கால நன்மை கருதி இதுபோன்ற கண்டுபிடிப்புகளும், ஆராய்ச்சிகளும் ஊக்குவிக்கப்படவேண்டும்.

அரச, தனியார் நிறுவனங்கள், அலுவலகங்கள், பாடசாலைகள் போன்ற இடங்களில் இத்தகைய கருவிகளைப் பொருத்துவதனால் பெரும்பாலானோர் நாளாந்தம் தூய்மையான நீரை அருந்துவதை ஓரளவுக்காவது உறுதி செய்து கொள்ளலாம் அல்லவா? ★

# வாஜ்பாயின் கிராமத்தில் 101 சிவன் கோயில்கள்

அக்ராவில் இருந்து 70 கிலோ மீற்றர் தொலைவில் யமுனா நதிக் கரையோரமாக அமைந்துள்ள கோட்படேஸ்வர் என்பதுதான் பிரதமர் அடல்பிஹாரி வாஜ்பாயின் சொந்த ஊர். அவரது தந்தையும் மூன்று மூத்த சகோதரர்களும்இந்தக் கிராமத்தில்தான் பிறந்தார்கள். ஆயினும் நீண்ட காலத்துக்கு முன்னரே வாஜ்பாய் குடும்பத்தினர் குவாலியருக்கு இடம் பெயர்ந்து விட்டனர். அவருடைய அத்தையின் குடும்பத்தினர் அந்தக் கிராமத்திலேயே தங்கிவிட்டனர்.

யமுனா நதிக் கரையேயுள்ள சிறிய குன்றின் மீது உள்ள வாஜ்பாயின் மூதாதையர் வீடு தற்போது பாழடைந்த நிலையில் உள்ளது.

தற்போது கோட்படேஸ்வர் கிராமத்தில் உள்ள 101 சிவன் கோயில்களும், வாஜ்பாயின் வீடும் உல்லாசப் பயணிகளைக் கவரும் இடங்களாகி விட்டன. வாஜ்பாய் பிரதமராக நீண்டகாலம் பதவி வகிக்க வேண்டும் என்பதற்காக கோட்படேஸ்வர் கிராம மக்கள் ஒவ்வொரு வியாழக்கிழமையும் படேஸ்வர் சிவன் கோவிலில் விளக்கேற்றி பிரார்த்தனை செய்து வருகின்றனர். ஒவ்வோர் ஆண்டும் மழை காலத்தில் வெள்ளம் என்பது அந்தக் கிராமத்து மக்களுக்குப் பழக்கப்பட்டுப்போன ஒன்று. இரண்டு வாரத்துக்கு ஒரு தடவை எப்போதாவது மின்சாரம் வந்து தலையைக் காட்டிவிட்டுப் போகும்.

கோட்படேஸ்வர் கிராமம் தனது செல்லப்பிள்ளையான பிரதமர் வாஜ்பாயின் வருகைக்காகத் தவம் கிடக்கிறது. ★

# புத்தியின் ஆற்றல்கள் எட்டு

புத்திக்கு எட்டுவகையான ஆற்றல்கள் இருக்கின்றன. அவற்றை நம் முன்னோர் 'அஷ்டாங்க புத்தி' என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அவை வருமாறு:

1. கேட்டலாகிய ஆற்றல்— 'கிரஹணம்'
2. கேட்டதைத் தன்னுள் நிறுத்துதல் — 'தாரணம்'
3. அதை வேண்டும்பொழுது நினைவுகூறல் — 'ஸ்மரணம்'
4. அதை எடுத்து விளக்குதல் — 'பிரவசனம்'
5. ஒன்றைக்கொண்டு மற்றொன்றை அறிதல்—'யூகம்'
6. வேண்டாத இடத்தில் சிலவற்றை மறைத்தல் — 'அபோஹனம்'
7. ஒன்றைப் பற்றி முழுமையாக அறிதல் — 'அர்த்த விஞ்ஞானம்'
8. மெய்யறிவு பெறுதல் — 'தத்துவஞானம்' (மகான்களுக்கு மட்டும் இது கிட்டும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீரில்லா அஞ்சலி

ஒய்வூதியம் பெற்றுண்டு, ஊருக்குத் தொல்லை தந்து
பவளவிழா வயதில் நகரத்துவம் அடைந்த
படுபாவிக் கிழவனுக்கு,
ஊரார் உவந்தளித்த கண்ணீரில்லா அஞ்சலி.

வேலி விலத்தி கதிகால் போடும்
வித்தை மிகக் கற்ற நற்குடும்பத் தோன்றலே!
சாதிசனம் எனினும் நன்னிலை அடைந்தால்
சகிக்காத பெருமனத்து அண்ணலே,
கோவில் குருக்களை ''கொமிற்றி''யுடன் அண்டிவிட்டு
கூத்துப் பார்த்துக் குதூகலித்த கோமாளியே!
ஆதியில் உத்தியோகம் பார்த்த தடிப்பினால்,
அயலானை மதிக்காத மன்னனே,
ஊரில் நடக்கும் நீரோசை நிகழ்ச்சிகளை
உன் செலவில் குழப்புதற்கு உதவிடும் வள்ளலே,
வாசிகசாலை, விவசாய சங்கம், வழிபாட்டுக்கழகம்
ஊரில் உள்ள பலநோக்குச் சங்கம் அனைத்தும் உன்
கால்பட்டுச் சீரழியவேண்டுமெனும்
சீரிய நோக்கோடு, நரம்பிலா நாக்கினால்
நீ விதைத்த நச்சுவிதை நாலுதலைமுறைக்கு
போதுமெனப் போதுமையா!

மொட்டைக் கடிதம் உன்
முழுநேர ''ஹொபி'' ஐயா
பெட்டைகளை நொட்டை சொல்லி
தரிசிருக்க வைத்து,
புன்முறுவல் பூத்த புண்ணியனே!
மற்றவன் படித்தால் உன் மதிப்பிழக்க நேருமென்று
''கற்பதில் பயனில்லை, தொழில் செய்ய வேண்டு''மென்று
நற்போதனை புரிந்த நஞ்சப்பா!

பென்சன் பணமெடுத்து, கஞ்சி மட்டும் குடித்து
மிஞ்சும் தொகையெல்லாம் நொந்தவர் நிலையறிந்து
வட்டிக்கு விட்டு அட்டையாய் உறிஞ்சி
வண்டி கொழுத்தபின் மண்டையைப் போட்டவா,
சென்றிடு நீ இங்கிருந்து, செய்ததெல்லாம் போதும்
நன்றி சொல்லிக் காலனுக்கு நாமிந்த அஞ்சலியை
நாவினிக்க செலுத்துகின்றோம். நரகம் அழைக்கிறது.

— புத்தூர், வே. இளைய குட்டி —

# மறக்கவில்லை நாம் வந்த பாதைகள்

கூவிவந்து விழுகின்ற ஷெல்கள்
குண்டுமாரி பொழிகின்ற விமானங்கள்
நிமிடநேரத்தில் நிலைகுலைந்துபோன
நம்மவர் தேடிவைத்த சொத்துக்கள்
சதையாய் இரத்தமாய் நிணமாய்
சிதைந்துபோன எங்களது சொந்தங்கள்
வாழ்விழந்து நிற்கின்ற வனிதைகள்
வழியின்றித் தவிக்கின்ற பாலர்கள்
ஊர்விட்டு ஊரோடி நாங்கள்
உண்ணாத உறங்காத நாட்கள்
கூடு கலைக்கப்பட்ட குருவிகளாய்
குலைந்து போய்விட்ட குடும்பங்கள்
குருடாகிப் போன கண்கள்
முடமாகப் போய்விட்ட கால்கள்
கோபுரங்கள் இல்லாத கோயில்கள்
கொண்டாட்டம் இல்லாத வருடங்கள்
தரிசாகக் கிடக்கின்ற வயல்கள்—கரை
திரும்பாமல் போய்விட்ட கப்பல்கள்
மண்மேடாய் ஆகிவிட்ட மாடிகள்—இன்னும்
மறக்கவில்லை நாம்வந்த பாதைகள்.

—வண்ணை செ. பிரசாத்—

# மீண்டும் ஒரு நாள் நிமிர்வேன்

வாசம்கமழ்கின்ற பூஞ்சோலை இன்றென்னை
வாடிவதங்கவைத்து வருத்தங்கள் தருவது ஏன்...?
நேசங்கமழுமென நான் நினைத்து வந்த இடம்
நித்திரையைப்பறித்தின்று நிலைகுலைய வைத்ததும் ஏன்...?
பாசச்சுவடுகளில் முட்கள் படருமெனில்
பார்த்து நடந்திருப்பேன் அப்போதே! இனி
வேஷம் போட்டெனது வருத்தம் மறைக்கவெனில்
வெளிக்கொள்ளும் கண்ணீரே தடையாமோ...?

வெளிச்சத்தில் நின்றாலும் குருட்டுக்கண் ஆனதினால்
வெள்ளிகள் கூடவும் தெரியவில்லை!
துளிச்சத்தம் இல்லாமல் தொல்லைகள் கூடிடும்
விந்தையோ இன்னும் புரியவில்லை!
எழுதிடும் விதியின்கை எழுதியே செல்லுமாம்!
அதிலுமோர் எழுத்தும் மாறாதாம!
அழுதிடும் என் விழி நீர் என்று காய்ந்திடும்?
அதன் சுரம் என்றுதான் மாறிடும்?

எத்தனை பாதைகள் என்முன்னே இருப்பினும்
எது ஒளிப்பாதையாம் தெரியாதே?
பித்துறும் நிலையிலே என் மனம் ஆயினும்
பிறிதொரு வழியினைத் தேடுதே!
நித்தமும் ஏனிந்த நிலையெனக் கேட்கிறேன்
நிம்மதிப் பதில் கொடு இறையே!
சத்தங்கள் ஒய்ந்ததோர் சாந்தியைத் தேடுறேன்!
சதிர்டும் மனச்சுமை குறையேன்!

தப்புக்கள் செய்யாப் போதிலும் இங்கே
தவறியே போவதாய் ஆச்சோ...?
அப்புறம், இப்புறம் திரும்பிடும் போதும்
ஆயிரம் விழிகளின் பேச்சோ...?
எப்படி என் வழி தெளிந்து நான் நடப்பேன்...?
எனக்கு நான் ஆணைகள் ஏற்பேன்!
குப்புற விழுமுன் நிச்சயம் காப்பேன்!
குனிந்தபின் மீண்டுமே நிமிர்வேன்!

—தாட்சாயணி—

# இறைவன் கூறவில்லை

காதல் பொய்
கனவுகள் பொய்
அதனால் வரும்
கவிதைகள் பொய்
உறவுகள் பொய்
உணர்வுகள் பொய்
உயிரே பொய் — ஏன்
உலகமே பொய்
இவற்றை எல்லாம் —
நிச்சயமாக
இறைவன் கூறவில்லை
காதலால் கறைபட்டு
கலங்கி நிற்கும் அந்நேரம்
ஆயிரம் ஆயிரம்
இளைஞர்களின்
இதயம் கூறும்
உண்மை இது.

—இணுவைக் கோகுல் —

# சித்திரையே! சித்திரையே!

வறுமை அகன்றிட,
வந்திடு சித்திரையே.
பொறுமை வளர்ந்திட,
பூத்திடு சித்திரையே.

ஏழ்மை தொலைந்திட,
எழுந்திடு சித்திரையே.
வாண்மை நிலைத்திட,
வளர்ந்திடு சித்திரையே.

சூழ்கலி நீங்கிட,
சுடர்விடு சித்திரையே.
தேன்கனி விளைந்திட,
தீண்டிடு சித்திரையே.

முதுமை அழிந்திட,
முளைத்திடு சித்திரையே.
பொதுமை பொலிந்திட,
புறப்படு சித்திரையே.

நம்நாடு சிரித்திட,
நடந்திடு சித்திரையே.
எம்வீடு சிவந்திட,
சிரித்திடு சித்திரையே.

அமைதி மலர்ந்திட,
ஆடிடு சித்திரையே.
சுமைகள் மறைந்திட,
பேசிடு சித்திரையே,

— நல்லை அமிழ்தன் —

# நிலவே! உன்காட்சி

இன்று அமாவாசை
எங்கும் கும்மிருட்டு.
அன்று நீ வந்தாய்
அந்திச் செம்மகள்
ஆங்ககல
கங்குலவள் தலை விரிக்க,
மஞ்சள் நுணா கிளை
விரிக்க,
பின்னணியில்
பஞ்சு முகில் தழுவ
பால் நிலவே நீ வந்தாய்.
நீளக் கதிர் பரப்பி
நீச இருளகற்றி
நாம்
பேசப் பல களமேறி
நன்நிலவே நீ வந்தாய்.
கரியபனையின் பின்—உன்
காட்சி என்னழகு!
புளிய மரப் பிற்போக்கில்
அம்புலி நீ பேரழகு!
நீலக்கடல் தாண்டிப்
போகையிலும் நீ அழகு.
குளுமை தருவதிலும்
உனக்கீடிணை இங்கேது?
ஆகவே வந்து விடு
பௌர்ணமியே!
எம்கவலை
போக்கி விடு!

சிவப்பிரகாசம்—

# நேற்று எனைக் காத்த தென்மராட்சிக் கிக்கவிதை!

நேற்றுவரை இங்கே நிறைந்தடித்த சனவெள்ளம்
காற்றாக மாறிக் கலைந்ததுவே!
அயல் வெறித்து
ஊமையெனப் போச்சே!
''உருத்தெங்கே'' கேட்கிறதே!!
மூவிரண்டு மாசம் முத்தமிட்டு அடைகாத்த
சேய்; அகல இன்று
செவிலி நிலம் ஏங்குறதே!
கொடியிறங்கி விட்ட கோவிலடி வீதியைப்போல்,
படம் முடிந்த சினிமாப் படலையைப்போல்,
வெறும் மரம்போல்,
'நேற்றைக் கதை' நினைந்து நினைவிழக்கும் இம்மடியைப்
பார்க்கப் பரிதாபம் படர்கிறது.
நித்தநித்தம்
தேர்ச்சனமாய்ப் பூத்த திசையிதுவா? ஜொலிஜொலித்த
திந்தத் தெருவா?
சனம் கடலாய்க் கரையுடைத்தது
இந்த இடம் தானா?
இப்படியாய்க் கிடக்கிறதே!
பார்க்க ''ஆ'' பாவமாய் இருக்கிறது.
இது...நாங்கள்
'இடம்பேர்ந்த நாளில்' இப்படியா இருந்தது சொல்?

எங்கும் பரபரப்பும்,
இளமைக் கடைவிரிப்பும்
தங்க...ஒருதேன்பொந்தாய் தமிழ்கூடிச் சுமைசுமந்து
இன்பம் இடர் ரெண்டும்
செமிக்கப் பழகின...சனம்
கன்றல்கள் தாங்கிக் கதைத்திருக்கும்.
சுற்றிவர
மந்தைச் சனத்துக்கு மடிவிரித்த மரநிழல்கள்,
குந்த இடம்கிடையாக் குடிசைகள்,
குடிப்பதற்கு
ஒத்தி எடுத்ததனால் ஊற்றடைத்த கிணத்தடிகள்,
'கக்கூஸ்' பிரச்சினைகள், கால்வைக்க இடமின்றிப்
பெட்டிக்கடைகள்,
'பெரியகடை நகல்கள்',
பணமுதலை எல்லாம் படையெடுத்து யாவாரம்
சூடாகுஞ் சுத்து மாத்துகள்,
சன ஈக்கள்
கூடி இரைந்து மொய்த்துக் கும்பல் கும்பலாய்ப் பறக்கும்
நகர் நெரிசல்,
நாலு அடிநடக்கு முன்...நூறு
குலசம் விசாரிப்புக் குதூகலங்கள், அட்டதிக்கும்
சைக்கிள்கள்,
தேங்காய்ச் சாக்குக்கள்,
'பிறேக்பிடித்து'
நின்றால் இடிக்கும் நெருப்பு அவசரங்கள்
வங்கி அலுவல்கள்,
வகுப்புக்கள்,
அரைமணிக்கு—
ஒன்றாக ஓடியெம் உடல்பிழிந்து சாறெடுக்கும்
மினிபஸ்கள், சந்தைநாளென்றால் வெடிலடிக்கும்
எடுபிடிகள்,
பனைவரைக்கும் இருந்தபனை தென்னைகளை
மொட்டை அடித்து 'முதல்போட்டு' வயிறாறும்
கற்பனைகள்,
எங்கெங்கோ இருந்து கலைந்து வந்து
ஒருகொம்பில் ஒதுங்கி ஊர்ப்புதினம் அலம்பும்
கலகலப்புப் போர்கள்,
காதல் தொடர்கதைகள்,
என்றிருந்த ஊரெல்லோ...??
இப்படியா உலர்ந்துளது??
கடைகொட்டில் பிடுங்கிக் கொண்டு போனபின்...கரைகள்
அடையாளந் தெரியா
அநாதையென அவிழ்ந்துளது
இடந்தந்த வீடெல்லாம் இன்று வெறித்துளது!

''குணமண்ணை'' நானிருந்த குடில்காரகர்;
முகம்மலர்ந்து
அணைக்க ஊர் புதினம் அவிழ்க்கின்றேன்
அயலோரைக்
கண்டு பழங்கதையில் கரைகின்றேன்
வரும்வழியைப்
பார்க்க...ஓ பாவமாய்க் கிடக்கிறதே!
கண்கலங்கி
நின்றேன். குனிந்து நிலந் தொட்டேன்.
கும்பிட்டேன்.
மண்ணள்ளிப் பூசி மலர்ந்தேன்.
''அடிதாயே
நின்நினைவென் நெஞ்சம் நீறையிலும் வேகாது''
என்றழுதேன்.
உள்ளே இளகியது.
அடுத்தமுறை
வரும்போதும் ஏதேனும் கொண்டந்து கொடுக்கோணும்...,
என் செய்வம்?
''ஓம்...ஓம்...இவள் 'பேர்', 'நட்சத்திரம்' சொல்லி
நல்லூரில் அர்ச்சனைகள் செய்வம்''
நினைத்தபடி
திரும்புகிறேன்.
ஞாபகத்தில் தெரு கையை அசைக்கிறது.

—த. ஜெயசீலன்—

## கவிதை முற்றம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கரைகின்ற கோபுரங்கள்


வேப்பமரம் செழித்திருந்தது. பச்சைக் குடை விரித்தாற் போல என்று பழைய உதாரணம் சொல்லிக் கசங்க வைக்க முடியாத அழகுடன் பரந்திருந்தது. மென்தென்றல் தழுவி இலைகள் சிலிர்த்தன; சில உதிர்ந்தன. எட்டு மணிக்கு இரண்டு நிமிடம் இருக்கின்ற நேரத்தை வானொலி சொல்லிக்கொண்டிருந்தது. உதிர்ந்த இலைகளை லாவகமாகக் கூட்டி முடித்திருந்தாள் துவாரகா.

துவாரகா இளம் விஞ்ஞான ஆசிரியை. இந்தப் பூமிக்கு வந்தபின் இருபத்தாறு வருடங்கள் விலகியிருந்தன. சமூகப் பணிகளில் மிக ஈடுபாடுடையவள். எழுத்தறியாத கிராமத்துக் குழந்தைகளின் முன்னேற்றத்துக்காக, பொதுக் கிணற்றின் தூய்மைக்காக, புதிய நூலகம் திறக்கப்பட வேண்டும் என்பதற்காக, அவளுடைய ஓய்வுகள் கரையும். சமூகப் பணிகளுள் தன்னைப் புதைத்து சுயதுன்பங்களை மீட்க நேரம் வைக்காத விவேகி. உள்ளே துர்க்கா மெதுவான குரலில் ஒரு சோகப் பாடலை முணுமுணுத்துக்கொண்டிருந்தாள். அவள், வெள்ளி நரை தொடங்க மனம் கசந்து வாழ்வைத் தள்ளுகின்ற சராசரித் தமிழ்ப்பெண். எதற்கும் மெலிதான அழகிய ஒரு புன்னகை. இதயமற்ற மனிதர்களின் வக்கிர வார்த்தைகளைச் சமாளிக்க அது உதவும். அதிக வார்த்தையில்லாத அமைதியானஸ்ரெனோ.

வெண்முற்றப் பின்னணியில் சிறிய வீடு. மிஞ்சிப் போனால் மூன்று அறைகள் இருக்கலாம். உள்ளே பார்வதி அமர்ந்திருந்தாள். சுவாசம் ஒரு சீரான சத்தத்துடன் வந்து போய்க்கொண்டிருந்தது. அது அவளின் அறுபத்தி இரண்டு வயதிற்கு பழக்கமான வருத்தம் போல் இருந்தது. சுருங்கிய முகத்தில் ஓர் ஆழமான சோகம் அப்பியிருந்தது. ஒரு மரப் பெட்டியின் முன்னால் சில காகிதக் கட்டுகளும், புகைப் படங்களும் பரவியிருந்தன. அவற்றை எடுத்தபோதும், வைத்த போதும் ஒரு சிறு குழந்தையை வருடுகின்ற மிருதுத்தனம் தெரிந்தது.

அவற்றுள் குறிப்பிட்ட ஒரு படத்தை மட்டும் எடுத்துச் சில நிமிடங்கள் உற்றுப் பார்த்தாள். ஏனைய யாவற்றையும் எடுத்து உள்ளே வைத்துவிட்டு ஒற்றைப்படத்துடன் வெளியில் வந்து அமர்ந்தாள். தன் கண்களைக் கூசியும் விரித்தும் படத்தைப் பெரும் பிரயத்தனத்துடன் பார்த்தாள். பின்னர் புகைப்படத்தைத் தூரவைத்துச் சில நிமிடங்களும் கிட்ட வைத்துச் சில நிமிடங்களுமாகப் பார்த்தாள்.

''போக இருவது, வர இருவது, ஆனால் நாப்பது நாளிலையும் பதில் வரக் காணேல்லையே...''



தனக்குள் முனகிக்கொண்டாள். அவளது வார்த்தைகள் பதில் இல்லாமல் கரைந்தன. அவளது விரல்கள் வருடிய படத்தில் அவன் சிரித்துக்கொண்டிருந்தான்.

அவன்—பார்வதியின் ஒரே அன்புமகன். யாழ்ப்பாணத்துச் செழுமையில் முகிழ்த்த அவனது இளமைப்பருவம் யாழ். இந்துவிலேயே கழிந்தது. இயல்பாக அல்லாத அசாதாரணமானவன். சோகத்தை வென்று வாழ்வான் என்றோ என்னமோ தந்தை வைத்த பெயர் அசோகன். செல்லமாக அசோகி. நடுத்தரத்திற்கு சற்றுக் கீழ் இறங்கிய பொருளாதார நிலை குடும்ப நிலை அவனை வதைக்கவில்லை. வளர்த்தது. உறுதியான கல்வியும் கவியாற்றலும் உடைய புகழ் மேவிய தொரு சிறுதளிர். அவன் பூக்களுடன் மிருதுவாகப் பாடினான். மிருதுவான தென்றலை, அலைகின்ற வெண்முகிற் கூட்டத்தை, இலைகளில் உறங்கும் பனித்துளியை எதையும் ரசித்தான். மனம் கனக்கும் பொழுதுகளில் கவிதைகளால் மௌனமாக அழுது விட்டு மலர்வாகச் சிரிப்பதற்கு அவனால் முடியும். காலையுணவு வயிற்றில் இல்லாத போதும் கம்பீரமாக நடப்பதற்கு அவனால் இயலும்.

காலம் அவனது கல்வி முன்னேற்றங்களுடன் கரைந்தாலும் க. பொ. த. உயர்தரப் பரீட்சைக்கு இங்கு தோற்ற முடியவில்லை. விரும்பியோ விரும்பாமலோ அனுபவித்த இனத்திடை மோதல்கள் காரணம். தவிர்க்க முடியாத கொழும்புப் பயணம், அசுரத்தனமான செலவுகள், சடுதியான தீர்மானங்களின் விளைவாக ஒரு கொடிய குளிர் மிகுந்த இரவில் ஜேர்மனியில் காலடி பதித்தான். பொழுதின் நகர்வில் வேலை தேடினான். தொழிலின் களைப்பில் துவண்டு போனான். சின்ன அறையுள் முடங்கும் பின்னிராப் பொழுதுகளில்......

மௌனமான இரவுகளில்
மறக்க முடியவில்லை
அம்மா, உன்னையும்......
என் தேசத்தையும்......

என்று அழுதான். கண்ணுறக்கமின்றி வெண்பனிவாரிக் கொட்டும் இரவுகளில் சிவந்த கைகளின் நகக் கண்ணூடு குமிழ்கின்ற குருதியைப் பொறுமையோடு தாங்கினான். வாலிப வயதிற்குரிய உணர்வுகளில் சிக்காமல் அவற்றை சிறைப் படுத்தினான் ஓர் இளவயது முனிவனாக......

★ ★ ★

......ஜேர்மன் தேசத்துச் சிறுவிடுதி ஒன்றில் அசோகன் படுத்திருந்தான். செயற்கைக் காற்று மோதும் சிறிய அறை. கண்கள் மூடியிருந்தாலும் திறக்கப்பட்ட மனக்கதவுகளின் ஊடாக நினைவுகள் பிரவாகித்துப் பாய்ந்தன. மஞ்சள் நிறமும், பளபளப்பான சுருளற்ற தலைமுடியும் நெடிதான தோற்றமுமாக அவனை விவரிக்கலாம். வயது வரைந்த முகத்து உரோமங்களை முழுவதுமாக மழித்திருந்தான். கையில் தாயின் கடிதம் விரித்தபடி... மனதினுள் பெரும் போராட்டம்......

## ச. சாரங்கா

வழமையான அன்பு சொல்லி ''துர்க்காக்கு ஓர் இடம் பொருத்தி வந்திருக்குது. பெரிசாக் கேட்டாலும் விட விருப்பமில்லை... முப்பத்தைஞ்சுக்கு ஒரு வருஷம் தானே இருக்குது. உதயத்துச் செவ்வாயில் பிறகு வாறதெப்படா? என்னப்பன் செய்ய?''

கேள்வியுடன் முடித்திருந்த சின்னக்காவின் எழுத்திலான தாயின் கடிதம். அவனது சிந்தனைகள் பெருகிக் கொண்டிருந்தன.

ஒப்புக்கொண்டு விடவா? அதுவும் ஒரு கொலைக்குற்றவாளியாக... இதனால் இலங்கைப் பணத்தில் சுமார் நாற்பது லட்சங்கள் வரை கிடைக்கப் போகின்றன. சாட்சி வலுவற்ற வழக்கில் செய்யாத குற்றத்தை செய்ததாகக் கூறவேண்டும். சீர்வரிசைகள்... சிரிக்கின்ற அக்கா... கண்மங்கிய அம்மா ...அவன் குப்புறத் திரும்பிப்

(XII ஆம் பக்கம் பார்க்க)

**சஞ்சீவி சிறுகதைகள்**

# தனிமரம்

''பாழாய்ப்போனஷெல்லுகளாலை எல்லாப்பயிர்பச்சைகளும் நாசமாய்ப் போகப் போகுது''

சற்றுத் தூரத்தில் முழங்கும் அகோர எறிகணை வீச்சுக்களைக் கேட்டவாறு அடிவளவில் நின்ற அரசரின் உள்மனம் ஏக்கப் பெருமூச்சு விட்டது. குலைகுலையாய்க் காய்களுடன் கம்பீரமாக நின்ற தென்னை மரங்களை அவரின் கண்கள் சுற்றிச் சுழன்று நோட்டமிட்டன. எல்லாம் அவரின் இளமை வலுவுக்குக்கிடைத்த பலன்கள். இருபாலை அரசரத்தினம் என்றால் ஊரில் பெரிய கமக்காரன் என்ற பெயர்.

''சோலியில்லாதவன். தானுண்டு தன்பாடுண்டு என்று வாழ்பவன்'' என்பன அரசருக்குக் கிடைத்த நற்சான்றிதழ்கள். அரசரும், அவரின் வாழ்விலும் தாழ்விலும், இன்பத்திலும் துன்பத்திலும் பங்கு கொள்ளக் கரம்பிடித்த மனையாளும் சேர்ந்து உண்டுபண்ணிய தோட்டம் இது.

''தாம்பத்தியத்தில் பிள்ளை பெறமுன் தோட்டத்தில் நாலு தென்னம்பிள்ளை நட்டால் அது தலைமுறைக்கு உதவும்'' என்ற அவருடைய கொள்கைக்குக் கிடைத்த பலன் இன்று வானோங்கி வளம் கொழிக்குது.

''...எல்லாம் கோதாரியிலை போவாற்றை செல்லுகளாலை பாழாய்ப் போகப் போது. ஐயோ கடவுளே'' நீண்ட நெடுமூச்சுடன் திரும்பியவர் அடிவளவையும் தோட்டத்தையும் சுற்றிக் கிணற்றடிக்கு வந்தார். அங்கு ஒற்றையாய் நின்ற இளம் செவ்விளநீர்க்கன்றை அவரின் கண்கள் ஏறிட்டன. மூன்று நான்கு குலைகளில் காய்கள் குவிந்திருந்தன.

''கடவுளே நிறையக் காய்ச்சிருக்கு. எல்லாம் என்ரை மகளின் கைராசிதான்.'' அரசரின் கண்கள் தென்னையில் நிலைத்திருக்க சிந்தனை அவரையுமறியாமல் பல வருடங்கள் பின்னோக்கிப் பாய்ந்தது.

★ ★ ★

அன்று எங்கேயோ இருந்து ஒரு தென்னங்கன்றுடன் வந்த அரசர் தன் ஐந்து வயதான ஒரே மகள் அகல்யாவை அழைத்தார்.

''மகள் மண்வெட்டியைக் கொண்டு வாங்கோ''

''ஏனப்பா'' கேட்டவாறே அகல்யா தூக்கமுடியாமல் மண்வெட்டியைத் தூக்கி வந்தாள்.

''இதிலை ஒரு தென்னம்பிள்ளை நடுவம்''

''ஏனப்பா தோட்டத்திலை நடலாமே''

''இல்லையம்மா இது செவ்வீளநிக் கன்று. கிணற்றடியிலை நட்டால்த்தான் நல்லாய்க் காய்க்கும்''

''அப்ப தோட்டத்திலை நிக்கிற மரங்கள் காய்க்காதோ?''

''இல்லையம்மா. அதுவும் காய்க்கும். ஆனா அது பச்சைக்காய்.

''பச்சைக்காயும் சிவப்புக்காயும் ஆருக்கப்பா?'

''தோட்டத்திலை காய்க்கிறதெல்லாம் பிள்ளையின்ர பிற்காலத்துக்கு. இதிலை காய்க்கிறது மட்டும் அம்மாவின்ரை, அப்பாவின்ரை பிற்காலத்துக்கு''

''ஏனப்பா?''

''அம்மாக்கும் அப்பாக்கும் வயதுபோன காலத்திலை வருத்தம் வந்தால் குடிக்க செவ்விளநீர் வேணுமெல்லோ பிள்ளை எங்களுக்குப் பிடுங்கி வெட்டித் தர வேணுமெல்லோ? அதுக்குத்தான்''

கொஞ்சும் குரலோடு செல்லமாக உரையாடியபடி அரசர் கிடங்கை வெட்டி முடித்தார். மகளின் கைகளில் தென்னங்கன்றைக் கொடுத்து ''கிடங்கிலை வையம்மா... சாமியைக் கும்பிட்டுக் கொண்டு வைச்சுப் பிடியுங்கோ அப்பா மண் போடுறன்.''

★ ★ ★

இருபது வருட பின்னோக்கிய சிந்தனை அற அரசர் திரும்பினார். ஐந்து வயது அகல்யாவோடு மானசீகமாக ஒன்றுபட்டிருந்தவர், இரண்டு பிள்ளைகளின் தாயான இருபத்தைந்து வயது அகல்யா முன்னால் நிற்பதைப் பார்த்து முறுவலித்தார்.

''என்னப்பா யோசித்துக் கொண்டு நிற்கிறியள்.''

''ஒன்றுமில்லையம்மா நீ சின்னனிலை இந்தத் தென்னையை நட்டதைப் பற்றித்தான் யோசிச்சுக்கொண்டு நிக்கிறன்.''

''நல்ல கதைதான். அவங்கள் ஷெல் மழையாய்ப் பொழிந்து கொண்டுவாறாங்கள்... சனமெல்லாம் அவசர அவசரமாய்ப்போகுது. நீங்கள் நிண்டு யோசிச்சுக் கொண்டு நில்லுங்கோ... வாங்கோப்பா போவம்.''

''இப்ப எங்கை போறது?''

''சாவச்சேரிப் பக்கம் போவமெண்டு இவர் சொல்லுறார் ... பொடியளும் கைதடிக்கு அங்காலை போகச் சொல்லிப் போட்டாங்களாம் வாங்கோ''

## - கவரி -

''சரி பின்னை நடவுங்கோ வாறன்'' என்று கூறியவர், மகள் முன்னே போக மீண்டும் திரும்பி அடிவளவையும் தோட்டத்தையும் பார்க்கிறார். அவரின் பார்வை சுற்றிச் சுழன்று வந்து மீண்டும் செவ்விளநீர்க் குலைகளில் குத்திட்டு நின்றது.

''வயோதிப காலத்திலை வருத்தம் துன்பம் வந்தாக் குடிக்க என்று செவ்விளநியை நட்டன். பாவம் என்ரை சிமாட்டி வருத்தந் துன்பம் வராமல், பாயிலை படுக்கையிலை கிடக்காமல் நான் நட்டு வைத்த இந்தச் செவ்விளநியைத் தாராளமாகக் குடிக்கக்கூடக் கொடுத்து வைக்காமல், மின்னாமல் முழங்காமல் சரிஞ்சு படுத்து போய்ச்சேர்ந்திட்டா.''

மூன்று வருடங்களுக்கு முன் ஒருநாள் நெஞ்சுக்குள் ஏதோ செய்வதாகச் சரிந்து படுத்த அவர் மனைவி அகிலம், தன் மகளை அழைத்து ''அம்மா எனக்கு ஏதாவது நடந்தாலும் அப்பாவைக் கவனமாகப் பார்த்துக்கொள்'' என்று கேட்டு பதிலுக்குக் காத்திராமல் கண்மூடி விடைபெற்றது அரசரின் நினைவில் வந்து, அவரின் கண்களில் வெளிப்பட்டது. ஈரமான கண்களைத் துவாயால் துடைத்தபடி வீட்டை நோக்கி நடந்தார்.

இடம்பெயர்ந்து சாவகச்சேரியில் இருந்த ஒவ்வொரு நாள்களும் அரசருக்கு ஒவ்வொரு யுகமாகக் கழிந்தது. வீடு வாசலைப் பார்க்காமல் தோட்டம் துரவுகளைக் கவனிக்காமல், வெட்டிப்பொழுது போக்கியது அவருக்குப் பெரிய வேதனையாகவும் எரிச்சலாகவும் இருந்தது. அதிலும் தொடர்ந்த சண்டையும், அதிர்ந்த குண்டுகளும் வீட்டையும், தோட்டத்தையும் எவ்வாறு துவம்சம் செய்திருக்குமோ என்ற ஏக்கம், எப்போது வீட்டுக்குப் போவோம் என்ற அங்கலாய்ப்பை அவரிடம் அதிகரிக்கச்செய்திருந்தது.

திடீரென்று ஒருநாள்...மட்டுவில் பக்கமாக எறிகணைகள் வீழ்ந்து வெடித்த சத்தத்துடன் விடிகாலை புலர்ந்

(XII ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சித்திரைப் புத்தாண்டு பலன்

வெகுதானியவருஷம் சித்திரை மாதம் முதலாம் நாள் (14-4-1998) திங்கட்கிழமை பின்னிரவு 2 மணி 51 நிமிஷமளவில் பிறக்கின்றது.

கும்பம்—லக்கினம் விசாகம் முதலாம் பாத நட்ஷத்திரத்திலும் புதன்காலவோரையிலும், அபர பட்ஷி துதியைத் திதியிலும் சித்திமாமயோகத்தில் கரசக் கரணத்தில் கூடும் சுப முகூர்த்தத்திலும் இப்புதிய வருஷம் பிறக்கின்றது.

| | | | |
|---|---|---|---|
| புத சனி | *சூ செ | | |
| வி வெ கே | இராசிச் சக்கரம் | | |
| | | | ரா |
| | | சந் | |

இலங்கையின் அரசியல் போக்கில் மாற்றம் ஏற்படலாம். இந்தியாவில் விட்டு விட்டு அரசியல் கொந்தளிப்புகள் ஏற்பட்டபடி இருக்கும். இனப்பிரச்சினையில் உலக நாடுகளின் தலையீடும் நாட்டின் அரசமைப்பு சட்ட மாற்றங்களும் ஏற்படும்.

இந்துசமுத்திரப் பிராந்திய நாடுகளில் அரசியல் கொந்தளிப்புக்கள் மாறி மாறி நடக்கும். கனடா, அமெரிக்கா, பசிபிக் பிராந்திய நாடுகளில் அரசபீடத் தலைவர்கள் மாறுவர். ரஷ்யாவில் பொருளாதாரப் பிரச்சினைகளும், மத்தியகிழக்கில்யுத்தபயமும் நீடிக்கும் இங்கிலாந்து, பிரான்ஸ், அமெரிக்கா ஆகிய நாடுகளின் ஆதிக்க உணர்வு மேலிடும். பல பிரச்சினைகளுக்கான தீர்வுகளை ஐக்கிய நாடுகள் சபை கருவாக்கி உருவாக்கும்.





உள்ளத்துணிவுடன் எதிர் நீச்சல் போட வேண்டிய ஆண்டு. விதியின் கைப்பாவைகளாக இருப்பீர்கள். விட்டு விட்டு நற்பலன்கள் கிட்டும். சனீஸ்வரன் மாறும் காலத்திலும், வக்கிரகதி அடையும் நேரத்திலும் கூடி இருந்தவர்களே குதித்து எழுந்து நியாயம் கேட்க முற்படுவர். ''கானகத்துக் காதலியை காரிருளில் கைவிட்ட நளமகராசன் நிலை'' உங்களுக்கு ஏற்படலாம். செய்யும் தொழிலில் இழப்பு அல்லது குடும்பத்தில் பிள்ளைகள் பிரிவு அல்லது இழப்பு ஏற்படலாம். இரத்த உபாதைகள், குடல் வியாதிகள், கண் எரிச்சல் போன்றன தேடி வரலாம். புதிய சுமை தாங்கியாக நீங்கள் மாறலாம். பல புதிய பொறுப்புக்கள் வரும். காணி, பூமி, வீடு, மனை, வாகனம் என்பவற்றில் நன்மை தீமை கலந்த பலன்கள் ஏற்படும். தேடி வந்த தாரத்தால் அதிக யோசனையும், விதிப்படி வந்த சோதரரால் சீற்றமும் ஏற்படும். கேட்டு வந்தவர் கோட்டிற்கு இழுக்கும் வேதனையை எல்லாம் தந்தருளும் சனீஸ்வரனை வேண்டுவதால் குறைத்து விடலாம். முன் பின் யோசித்து இடம்மாறி நன்மை அடையுங்கள்.




சாந்தமும் கோபமும் கலந்த பார்வையுடைய நீங்கள் சனீஸ்வரனை சந்திக்கப் போகிறீர்கள். 25-6-1998 இல் இருந்து சனீஸ்வரன் உங்களுக்கு ஏழரைச் சனியாக வருகிறான். றோட்டில் நின்ற நாய்க்கு சைக்கிளில் வந்த பையன் கல் எறிந்தால் நாய் சும்மா விடுமா? கலைக்கும் அல்லவா? அதே நிலை தான் உங்கள் நிலை. எதைச் செய்தாலும் ஓர் இழுவல் நிலை நீடிக்கும். கட்டிய தாரமும், பெட்டிப் பாம்பாய் இருந்த புத்திரரும், சகோதரர்களும் சற்று உறுமுவார்கள். சலிப்பில்லாமல் நிதானத்துடன் உங்கள் பாதையிலேயே சென்று கொண்டிருங்கள். 27-5-1998 இல் மீனத்துக்கு வரும் குருபகவானால் பல லாபகரமான பொருள் வருவாய்கள் அதிகரிக்கும். 12-9-1998 உடன் குரு வக்கிரகதி அடையும் பொழுது தொழில் நிலையில் மாற்றங்கள் ஏற்படும். கலைத்துறையில் ஆர்வம் அதிகரிக்கும்.

இரத்தம், சலம், வாதம் போன்றவற்றுடன் தொடர்புடைய ரோகங்கள் வருத்தும் வைத்தியத்தால் நன்மை கிட்டும்.




பிறக்கும் புத்தாண்டு உங்களுக்கு வாய்ப்பான காலமாகும். திறமைசாலியான நீங்கள் ஓடியாடித் திரிவதில் காலத்தைக் கழிக்காமல் திட்டமிட்டுக் காரியமாற்றினால் இப்புதிய ஆண்டில் சிறப்புகள் பல காத்திருக்கின்றன. அயலவர்கள், உறவினர்கள் உங்கள் நடவடிக்கைகள் கண்டு பொறாமைப்படுவார்கள். சனிமாற்றம், வியாழ மாற்றம் என்பனவற்றால் அதிக நன்மைகள் கிடைக்கும். இக்காலப் பகுதிகளை அனுசரித்து காரியங்களைத் தொடங்குங்கள். கலகலப்பான வாழ்க்கை; நண்பர்களின் உதவி கிடைக்கும். பிள்ளைகளின் பாசத்தால் தொல்லை தான். என்ன செய்வது? கடமையைச் செய்ய வேண்டுமே. உலகில் பல விஷயங்களைத் தெரிந்து வைத்திருந்தும் நீங்கள் உங்களையும், குடும்பத்தவர்களையும் கவனிக்கத் தவறி விடுகிறீர்கள். எனவே புதிய ஆண்டில் இவற்றில் கவனம் செலுத்துங்கள். சிலருக்கு அடிக்கடி நெஞ்சு நோ இருக்கும். காற்றோட்டமான இடங்களில் உலாவுங்கள்.




புத்தாண்டில் சுமாரான பலன்கள் கிட்டும். வியாழ மாற்றத்தால் பொருள் வரவு ஏற்படும். சனி மாற்றம் தொழிலுக்குப் பாதிப்பை உண்டாக்கலாம். பிள்ளைகளால் அல்லது சகோதரர்களால் சிறப்புகள் ஏற்படச் செய்யும். ஆவணி 1998க்குப் பின்னர் நீங்கள் புதிய மனிதர்தான். பல சிறப்புகள் காத்திருக்கும். புதிய வாழ்வு, புதிய பொருள்கள், புதிய இடம் எனப் பல மாறுதல்களுக்கு வாய்ப்புண்டு.

ஆவணி மாதத்துக்கு முன்பு மனம் சலனப்பட்டபடி இருக்கும். சிரித்துச் சிரித்துப் பேசிக்கொண்டிருப்பினும் திடீரென அதிரடிபோல் ஏற்படும் கோபங்களால் பாதிப்பு உண்டு. சளி, கை—கால்உளைவு, சலக கோளாறுகள், மர்ம உறுப்புகளில் நோய்கள் என்பன இடையிடையே வரலாம்.




உங்களை யார் எதிர்ப்பது? நீங்களே உங்களுக்கு எதிரி. நன்மையையும், தீமையையும் சம எடைபோட்டு நோக்குங்கள். இதை உணர்ந்து செயற்பட்டால் புத்தாண்டில் உங்களை வழிநடத்த எவரும் தேவையில்லை. சனி மாற்றம், வியாழமாற்றம் என்பன ஏற்படும் காலங்களில் தொழில் ஸ்தானத்தில் பொருள் நிலையில் அவதானமாக இருக்கவும். 26-5-98க்குப் பின்னர் பொருளால் வேதனை ஏற்படும். களவுகள், கொடுக்கல் வாங்கல்களால் அமைதியின்மை ஏற்படும். தொழில் ஸ்தானத்தில் மேலதிகாரிகளின் உதவிகள் கிடைக்கும். ஆனால் கொஞ்சம் விட்டுக் கொடுத்து நடவுங்கள். அபிப்பிராய பேதங்களை அதனால் தடுக்கலாம்.

அட்டமத்துச் சனியின் தாக்கத்தால் பலவித சோதனைகளை அனுபவித்த நீங்கள் 25-6-98 இல்—சனிமாற்றத்தின் பின்பு—ஏதோ பாரம் குறைந்தது மாதிரிப் பல கஷ்டங்களில் இருந்து விடுபட்டாலும்1999 பங்குனிவரை சில தொல்லைகள் நீடிக்கவே செய்யும். உடல் நிலையில் அவதானமாக இருக்கவும். தெட்சணாமூர்த்தியையும், அந்தோனியாரையும் வழிபட்டு வரவும்.




புத்தாண்டுப் பலனின்படி பொருள் நிலையில் நீங்கள் படிப்படியாகப் பல அனுகூலங்களை அடைவீர்கள். ஆயினும் ''நடுக்கடலில் படகில் தனியே செல்வது'' போன்ற நிலை இவ்வருடம் முழுவதும் நீடிப்பதால் அவதானமாக இருக்கவும். 27-5-98இல் நிகழும் வியாழ மாற்றம் ஆறுதலைத்தரும். பல புதிய திட்டங்களைத் தீட்டுவீர்கள். ஆனால் 25-6-98 இல் நிகழும் சனி மாற்றம் [illegible] அட்டமத்துச் சனியாகி ஆட்டம் காணச்செய்யும். பொருள் செலவுகள் ஏற்படும். கூட இருந்த நண்பர்கள் முதுகில் குத்தக் காத்திருப்பர். நன்மை செய்பவர்களுக்கு நீங்கள் நன்றிகாட்டுவீர்கள். ஆனால் தீமை செய்பவர்களை மறக்க முடியாமல் வேதனைப்பட்டவாறு இருப்பீர்கள். குடும்பத்தில் அபிப்பிராய பேதங்கள் ஏற்பட்டு சோதனைகள் வரும். என்ன செய்வது என்பது தெரியாமல் தடுமாறும் நிலை ஏற்படச் செய்யும். சனீஸ்வரனுக்கு அர்ச்சனை செய்வதுடன் ஏழைகளுக்குத் தான தருமங்கள் செய்து வரவும்.




உலகில் எத்தனையோ விஷயங்கள் நடக்கின்றன. இனியும், இந்தப் புத்தாண்டிலும் பேசாமல் இருக்கப் போகிறீர்களா? ஒன்றும் தெரியாதது போல் வாழப் போகிறீர்களா? உங்கள் பலனின்படி 25-6-98-சனி மாற்றத்தால் குடும்பத்தில் கலகலப்பு ஏற்படும். ஆனால் எதிர்ப்பாலாருக்கு சுகயீனங்கள் வரலாம். தொழில் ஸ்தானத்தில் கருத்துவேற்றுமைகள் ஏற்படும். வருடத்தின் முற்பகுதி சுமாரான பலன்களைக் கொண்டிருப்பினும் 27-5-98க்குப் பின்னர் பொருள் விடயத்தில் அவதானம் அவசியம். வாங்கியவர்கள் ''எப்போது தந்தீர்கள்?'' என்று திருப்பி உங்களைக் கேட்கலாம். தோல் வியாதிகள், வயிறு. குடல் சம்பந்தமான நோய்கள் வர இடமுண்டு. புத்தாண்டில் அம்மனையும், மாதாவையும் வழிபட்டு வரவும். வருடத்தின் பிற்பகுதியில் திருப்பங்கள் ஏற்பட்டு வசந்தம் வீசும் நிலைவரப் பலன் உண்டு.




திடீர்திடீரெனத் திட்டங்களைத்தீட்டி காரியமாற்றும் நீங்கள் இவ்வாண்டிலும் பிறர் அறியுமுன்பே பல காரியங்களைச் செயற்படுத்தி விடுவீர்கள். சண்டைக்கும், சமாதானத்துக்கும் தயாராக உள்ள நீங்கள் எதிர்ப்பாலாருடன் கொஞ்சம் நிதானமாக விட்டுக் கொடுத்து நடவுங்கள். உங்களை ஏமாற்ற முற்படுவோர் இக்காலத்தில் உங்களால் வேதனைப்படலாம். திடீர் விபத்துக்கள் ஏற்பட பலன் உண்டு. வாழ்க்கையை தெளிந்த நீரோட்டமாக்கிக் கொள்ள நீங்கள் புதிய ஆண்டை திட்டமிட்டு அணுகுவது அவசியம். உஷ்ண பீடைகளால் வருந்த நேரிடும். தெய்வ வழிபாடு செய்து வருவதனால் அனுகூலங்கள் ஏற்படும். புதிய நண்பர்களை புதுவருடத்தில் சந்திப்பீர்கள். அவர்களால் உங்கள் போக்கில் மறுதல்கள் உருவாகப் பலன் உண்டு.

**கிரகமாற்றங்கள்**

★ சனி மாற்றம்:—
25—6—1998
வக்கிரம்:—
29—9—1998

★ வியாழ மாற்றம்:—
27—5—1998
வக்கிரம்:—
12—9—1998




உங்களைச் சுற்றி ஒரு கூட்டம் இந்த ஆண்டிலும் இருக்கவே செய்யும். சனி மாற்றத்தின் பின் சகோதரர்கள் அல்லது பிள்ளைகள் பற்றிய யோசனைகள் ஏற்படும். வியாழ மாற்றத்தினால் இடமாற்றம், காணி, பூமி சம்பந்தமான நன்மைகள் ஏற்பட வாய்ப்புண்டு. நீங்கள் சமாதானப் பிரியர்தான். ஆயினும் சண்டைக்கும் பின்னிற்க மாட்டீர்கள். உங்களது அல்லது குடும்பத்தவர்களது

மகாதேவா ஜோதிடம்
140, செல்லர்வீதி,
கல்வியங்காடு.

குறைகளை பிறரிடம் சொல்வதால் உங்களையே பலவீனமாக்கிக் கொள்வீர்கள். தொழில் ஸ்தானத்தில் இவ்வாண்டிலும் வேகமுடன் செயற்படுவீர்கள். நீண்டகாலமாக இருந்து வந்தமனத் துயர் ஒன்று தீர்ந்து நிம்மதி பிறக்க பலன் உண்டு.




மனத்தைரியத்துடன் — திரும்பத் திரும்ப போராடி வெற்றி அடையும் இயல்புள்ளவர் நீங்கள். ''முயற்சி உடையோர் இகழ்ச்சி அடையார்'' என்பதற்கிணங்க உங்கள் செயற்பாடுகளால் வெற்றி அடைவீர்கள். வீடு, மனை, பொருள், வாகனம், தொழில் என்பனவற்றில் கவனமாக இருங்கள். தொழில் ஸ்தானத்தில் நன்மை, தீமை, இலாபம், நஷ்டங்கள் என்பன மாறி மாறி நடக்கும் பலன்கள் காணப்படுகின்றன. தொழில் ஸ்தானத்தில் உங்களிலும் பதவியில் குறைந்தவர்களால் அதிக உதவிகள் கிடைக்கும். கிடைக்காத பொருளுக்காக போராடுவீர்கள். அது கிடைத்துவிட்டால் அத்துடன் சட்டென்று எல்லா முயற்சிகளையும் விட்டு விடுவீர்கள். பலரைக்கருவாக்கி உருவாக்கி விடுவீர்கள்! ஆனால் நீங்கள் மாத்திரம் தனிமரமாக இருப்பீர்கள். உங்களை இலகுவில் எவரும்அண்டிவிட முடியாது. வயிற்றுக்குத்து — நரம்புத் தளர்ச்சி, கை—கால் தாக்கம், வாதம், தோல் சொறி, மூட்டுவருத்தங்களால் வருந்த இடம் உண்டு. தகுந்த வைத்தியம் செய்து சுகம் அடைவீர்கள். அயலவர்களால் நன்மைகள் ஏற்படும் எனஎதிர்பார்க்க முடியாது. சில பொருள்கள் பிரயாணங்களில் தொலைய இடம் உண்டு. சனி மாற்றத்தால் வீடு, மனை சம்பந்தப்பட்ட பொருள் செலவுகள் கொடுக்கும். அவதானமாகச் செயற்பட்டு வரவும்.

## உங்களுக்கு எப்படி?

(X ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்காவை உலுக்கிய

ஆணும் பெண்ணும் அவசரமாக உழைக்கப் புறப்படும் அதிகாலை வேளை ஒக்லஹோமா நகரம் களைகட்டுகின்றது. அன்று ஒரு புதன் கிழமை.

பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்பவேண்டும். சிறுசுகளை பராமரிப்பு நிலையங்களில் சேர்க்கவேண்டும். குடும்பங்கள் நாற்திசையும் பிரிந்து போகும்போது இடையில் விதி யாரோடு எங்கு விளையாடுமோ?

இப்படியான ஆயிரமாயிரம் உண்மைக் கதைகளை எமது மண்ணும் கண்டு கொண்டுதான் இருக்கிறது. எங்கிருக்கிறதோ வரும் ஷெல்களும், விமானக் குண்டுகளும், வேட்டுக்களும் மக்களைப் பதம்பார்த்த— கூண்டோடு கைலாயம்— அனுப்பிய வரலாறுகளுக்கு இங்கும் குறைவில்லை.

காலை ஒன்பது மணிக்கு சில நிமிடங்கள் முன்னர் சுமார் இரண்டாயிரத்து 200 கிலோ எடை கொண்ட வெடிகுண்டுடன் ஒரு மஞ்சள் நிற ட்ரக் வந்து அந்த ஒன்பது மாடிக்கட்டடத்தின் முன்னே சாலையோரம் நிற்கிறது.

அதன் சாரதி இறங்குமுன்னர் அதன் 'பியூஸ்' திரிகளைப் பற்றவைக்கிறான். இறங்கி நிதானமாக வேறு வாகனத்தில் கிளம்பி விடுகிறான். கண்முன்னே தெரியும் 'முறா' பில்டிங்கின் முதலாவது தளத்தில் இயங்கும் சிறுவர் பராமரிப்பு நிலையம் ட்ரக்கில் இருந்து முப்பதுஅடி மட்டுமே நேரடித் தூரத்தில் தெரிகிறது. என்னே நெஞ்சழுத்தம் அவனுக்கு!

வடக்கு நோக்கிய முகப்புடன்—ஒன்பது மாடிகள் கண்ணாடி வேலைப்பாடுகளுடன்—ஜொலிக்கும் 'முறா' பில்டிங்கின் முகப்பில் மத்திக்கு சற்றுக் கிழக்காக அந்த ட்ரக் கம்பீரமாக நிற்கிறது. அதன் திரிவழிப் படரும் தீ சில நிமிடங்களில் வெடிமருந்தைத் தொட்டுவிடும்.

20 அடி நீளமான இந்த ட்ரக்கில் சுமார் 24 வகையான — ஒவ்வொன்றும் 250 லீற்றர் கொள்ளளவுடைய— நீல நிறமான பிளாஸ்டிக் பரல்களில்வெடிமருந்து நிரப்பப்பட்டு இருந்தன. இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் உலக வர்த்தக நிலையத்துக்கு எடுத்துச்செல்லப்பட்ட குண்டின் ரகத்தினதாய்—இவை டீசல் கலவையுடன் தயாரிக்கப்பட்டு—இருந்தன.

மறந்து துள்ளிக் குதிக்கும்; மாலையில் வேலை முடிந்து அவர்கள் வந்து தூக்கும் வரை நம்பிக்கையுடன் காத்திருக்கும்.

நான்கு நாள்களுக்கு முன்பு நடைபெற்ற தனது திருமணத்தின் விளைவாக— தனது பெயரை மாற்றம் செய்ய வந்தவள் காட்னி. அவள் விமானப் படையில் பணியாற்றினாள். அவளது காதலன் ரவீன் கூட அங்கேதான் பணியாற்றினான். காதல் கனிந்து கல்யாணம் முடிந்தது.

அவளது கார் அந்த மஞ்சள் ட்ரக்கின் அருகே நிற்க மெதுவாக இறங்கி கட்டடத்துள் நுழைகிறாள். ட்ரக்கின் உள்ளே புகையும் திரிபற்றி அவள் எங்கே அறிவாள்? அப்போது நேரம் ஒன்பது மணியைக் கடக்...

முதலாம் மாடியில் நின்ற சின்னஞ் சிறுசுகளில் சில இந்த மஞ்சள் ட்ரக்கைக்கூட ரசிக்கத் தவறவில்லை: அதில் இருந்து இறங்கி நடந்தவ



மீட்கப்பட்ட குழந்தை

னுக்கு கையசைக்கத் தவறவில்லை.

அநேகமாக அங்கே இரண்டு வயதுக் குட்பட்ட குழந்தைகளே இருந்தனர். அவர்களுக்கு உணவு ஊட்டி, விளையாட வைத்து, தூங்க வைத்து நல்லமுறையில் பராமரிக்கிறார்கள். குழந்தைகள் உற்சாகமாகவும் ஆரோக்கியமாகவும் இருக்கின்றனர்.

காலையில் குழந்தைகளுடன் வரும் பெற்றோர் பிரிய மனமின்றித் தவிக்கும் குழந்தைகளை பராமரிக்கும் பெண்களிடம் ஒப்படைக்கும்

களுக்கு அலுவலக பிஸி இன்னும் இடம் தரவில்லை.

கப்டன் மைக்கேல் ஒரு கடற்படை பைலட். பாலைவனப் புயல் நடவடிக்கையில் திறமையாகச் செயற்பட்டவன். கடற்படை ஆள்சேர்ப்புக்காக வருகை தந்த அவன் தனது வாகனத்தை அந்த மஞ்சள் ட்ரக்கின் முன்னால் நிறுத்திவிட்டு இறங்கி 'முறா' பில்டிங்கினுள் புகுந்தான்.

## உண்மைச் சம்பவங்களின் தொகுப்பாக்கம் இத்தொடர்

அத்தியாயம் 3

அங்கே நேர்முகத் தேர்வுக்கெனப் பலரும் வருகை தந்திருந்தனர். சகல மாடிகளும் சுசுசுறுப்படைந்து விட்டன.

நேரம் சரியாக 9.02 என்பதை எவரும் அறிய முன்பே எரியும் திரிகளின் தீப்பொறிகள் வெடிப்பொருள்களைத் தொட்டுவிட்டன. அக்கணமே அந்த இரண்டாயிரத்து 200 கிலோ வெடிப்

கணக்கான கண்ணாடித் துண்டுகள் பறந்து வந்தன. அலுவலக உருக்குத் தளபாடங்கள் வீசப்பட்டன.

சல்லி அளவிலிருந்து முழுச் சுவர் அளவான கொங்கிரீட் துண்டுகள் வரை பறந்து விழுந்தன. கொங்கிரீட் தூசிப்படை பெரும் புகைமண்டலமாகக் கிளம்பியது. அத்தோடு தடித்த கரும்புகையும் சேர்ந்துகொண்டதில் காற்றுக் கனதியான சூழ் ஆகிவிட்டது.

விழுந்து வெடித்த ஷெல்லின் சிதறல்கள் போலே உலோகத் துண்டுகள் சிதறிப் பாய்ந்தன.

அருகில் இருந்த பல கட்டடங்களுக்கும் பலத்த சேதம் ஏற்பட்டது. சுமார் 25 கட்டடங்கள் பெரும்பாலும் முற்றாகவே நிலைகுலைந்தன. 300க்கு மேற்பட்ட கட்டடங்களில் ஜன்னல் கண்ணாடிகளைக் காணவே இல்லை.

வீதியில் வாகனங்கள் எத்தி எறியப்பட்டன. கார்கள் தீப்பற்றி எரியத் தொடங்கின. ஆங்காங்கே தீச்சுவாலைகள் தென்பட்டுப் பரவத் தொடங்கின.

இருண்ட புகை மண்டலத்தில் இருந்து அவலக் குரல்கள் எழுந்தன. மக்கள் கிழிந்த ஆடைகளுடன் இரத்தம் தோய வெளியே ஓடியும் நடந்தும் ஏன் தவண்டும் வரத் தொடங்கி விட்டார்கள்.

மெல்லக் காற்று வீசிப் புகை மண்டலத்தையும் புழுதிப் படையையும் கலைக்க முயன்றுகொண்டிருந்தது. தீ நாக்குகள் தீவிரமடைய முயன்றுகொண்டிருந்தன.

'முறா' பில்டிங்கின் முகப்பைக் காணவில்லை. கருமை கலையக் கலைய சூரிய ஒளி உள்ளே புகப் போராடிக் கொண்டிருந்தது. கட்டடத்தின் பின்புறம் வரை தாக்கம் தெரிந்தது. பின்புற உடைவுகளினூடேயும் வெளிச்சம் கட்டடத்துக்குள்

இடங்களில் விளையாட்டுப் பொருள்களும் உபகரணங்களும் சிதைந்து கிடந்தன. ஒரு குழந்தையின் கைதுண்டாகிக் கிடந்தது. பல மனித அவயங்கள் ஆங்காங்கே தென்படத்தான் செய்தன. உடனடியாக சேதத்தின் அளவினைக் கற்பனையிலும் கணிக்க இயலவில்லை,

காற்றுத் தடிப்பாக இருந்ததால் உதவிக்கு வந்தவர்களுக்கு மூச்சுத்திணறல் ஏற்பட்டது. பலரும் அகப்பட்ட இடமெல்லாம் நுழைந்து உயிர்த் தடயங்களைத் தேடலானார்கள்.

ஒரேயொரு குழந்தையை— உயிருடன் — மீட்ட பெருமை ஒக்லஹோமா பொலிஸின் துப்பறியும் அதிகாரி 'ஹல்'ஐ சாரும். விறைத்துக் கிடந்த குழந்தையின் உடலில் சூடு இருந்தது. அவன் தூக்கியதும் காயம் ஒன்றிலிருந்து குருதி உடைப்பெடுத்துப் பாயத் தொடங்கியது.

குழந்தையுடன் தவழ்ந்தும் இருந்தும், புகுந்தும் வெளியே அவன் வரப்பட்டபாடு...... எப்படிப் புகுந்தானோ எனத் தெரியாத திணறல்... ஒருபடி குழந்தையை வெளியே கொண்டு வந்து அம்புலன்ஸில் ஒப்படைத்துவிட்டு மீண்டும் உள்ளே புகத் தொடங்கினான்:

**-மு. சிவநேசன்-**

மீண்டும் ஒரு குழந்தையின் 'ஷூ' கண்ணில்பட்டது. கூடவே காலும் தெரிந்தது. கல்லை நிமிர்த்தி இழுத்துப் பார்த்ததில் நெஞ்சம் பகீரென்றது, கால் மட்டும் கையிலே வந்தது. மீதியைக் காணவில்லை.

ஆபத்துக்கால சேவைகளில் விசேட பயிற்சிபெற்ற 31 வயதான மெலிஸ்ஸா என்பவள் தனது 12 வருட சேவையில் இப்படி அழிவைக் காணவில்லை என்கிறாள். அவளது குழு மட்டும் ஒரு மணி நேரத்துக்குள் 200 பேரை அம்புலன்ஸில் ஏற்றி அனுப்பியிருந்தது. அதைவிட நூற்றுக்கணக்கானோருக்கு முதலுதவி செய்திருந்தது,

ஓய்வு ஒழிச்சல் இன்றி அங்கே 12 மணிநேரம் அவள் நின்று பிடித்திருந்தாள். இரத்தம் — காயம் — அலறல்—சாவு எல்லாவற்றோடும் போராடிச் சேவை

# இரு பெரும் குண்டு வெடிப்புகள்

அமெரிக்ககாவை உலுக்கிய இரு பெரும் குண்டு வெடிப்புச் சம்பவங்கள் பற்றிய தகவல்ளைத் தரும் விறுவிறுப்பான கட்டுரைத் தொடர் இது.

Alfred P. Murrah Federal Building எனப்படும் இந்த 'முறா' பில்டிங் ஒக்லஹோமா நகரத்தின் இதயப் பகுதியிலே அமைந்திருந்தது. அப்போது அக்கட்டடத்தின் வயது 18 தான். பளிங்குக் கண்ணாடியுடன் ஜொலிக்கும் அக்கட்டடத்தின் மாடிகளில் பல அலுவலகங்கள் சுறுசுறுப்பாக இயங்குகின்றன.

இராணுவத்தினருக்கான ஆள்சேர்ப்பு மையம் ஒன்றும், சுங்க அலுவலகம் ஒன்றும்கூட அங்கே இயங்கின. முன்னால் விறுவிறுப்பாக இயங்கும் வீதியும் அருகே பல அடுக்குமாடிக் கட்டடங்களும் அமைந்து இருந்தன.

வாகனங்களிலும் நடந்தும் அப்பகுதிக்கு வருபவர்களைப் பெரிதும் கவர்வது குழந்தைகள் காப்பகம்தான். வீதிக்குக் கையசைக்கும் சின்னஞ் சிறுசுகள் மனதை அள்ளும்; பிரிந்துபோன பெற்றோரை

காட்சி பார்க்கப் பரிதாபமாகவும் இருக்கும்.

'முறா' பில்டிங்கிற்கு எதிரில் உள்ள கட்டடத்தில் இரண்டாம் தளத்தில் உள்ள ஓர் அலுவலகத்தில் கடமை புரியும் றிஜ்னி—தனது 11 வயது மகனை பாடசாலைக்கு வழியனுப்பிவிட்டு அலுவலகத்துக்கு விரைகிறாள். அவளின் எதிர்பார்ப்பு முழுவதும் அவனது எதிர்காலம்தான்.

சுங்கத் திணைக்கள பகுதியில் போல் என்ற அதிகாரி தனது உதவியாளான 'பிரிசிலா' வுடன் அறிக்கை தயாரிப்பதில் தீவிரமாக ஈடுபட்டிருந்தான்.

பிரிசிலா அன்றும் தனது மகனையும் கணவனையும் முத்தமிட்டுப் பிரிந்து வந்ததில் நெகிழ்ந்துபோயிருந்தாள். உல்லாசமாக ஒரு விடுமுறையை குடும்பத்துடன் கழிக்க வேண்டும் என்ற அவளது நீண்டகால திட்டங்

பொருள்களும் பிரமாண்டமான ஓசையுடன் வெடித்தன. வெடித்த அதிர்வு 50 மைல் சுற்றுவட்டாரம் வரை உணரப்பட்டது. பூமியதிர்ச்சி ஏற்படுவதாகவே தூர இருந்த பலரும் நினைத்தார்கள்.

நடந்தது என்ன என அந்தச் சுற்றுவட்டாரத்தில் எவருக்கும் விளங்கவேயில்லை. அறியமுன்பே மாண்டவர்களும், மயங்கியவர்களும், அதிர்ந்தவர்களுமாக மக்கள் அங்கும் இங்கும் சிதறி ஓடினார்கள் இயன்றவர்கள்.

செக்கனுக்கு 6500 அடி என்ற வேகத்தில் அனற் காற்று வீசி ஓய்ந்தது. அக் குண்டு வெடிப்பின் உதைப்பின் வேகம் அவ்வளவு. அதாவது மணிக்கு சுமார் 4500 மைல்கள்!

வெடித்த கணம் 'முறா' பில்டிங்கின் ஒவ்வொரு அங்குலமுமே 1000 இறாத்தல் எடைகொண்டு தாக்கப்பட்டது. ஒன்பது மாடிகளின் தளங்களுமே மேல் நோக்கி வீசப்பட்டுக் கொட்டுப்பட்டன. கம்பிக்கூடுகளையும் தூண்களையும் விட்டுக் கொங்கிரீட் தட்டுக்கள் சரிந்து நொறுங்கின.

கம்பிகள் வளைந்தும் நெளிந்தும் [illegible] டன. துப்பாக்கிச் சன்னங்களின் வேகத்தில் மில்லியன்

பரவத் தொடங்கியது.

கட்டட உச்சியில் இருந்து விழக்கூடிய பாரமான பொருள்கள் கொட்டுப்பட்டுப் போயின: இப்போது மரங்களின் சருகுகள் போலே — அலுவலகக் காகிதங்கள் ஆடிஅசைந்து விழ மனமின்றிப் பறந்து — பூமியை நோக்கி வந்துகொண்டிருந்தன. ஆங்காங்கு பலவர்ணத் துணிகள் — கிழிந்த ஆடைகள்—தொங்கிக்கொண்டிருந்தன.

குவியல் குவியலாக இடிபாடுகள் தென்பட்டன. உள்ளே எதை எப்படித் தேடுவது எனப் புரியாத நிலையில் நூற்றுக்கணக்கான மீட்புப்பணியாள்கள் கட்டடத்தை மொய்க்கத் தொடங்கினர். எங்கும் சேதி பரவி உதவிகள் வரத் தொடங்கின.

அந்தரத்தில் நிற்கும் இடிபாடுகள் — மிகவும் எச்சரிக்கையாகவே அணுகப்பட வேண்டி இருந்தன. அவை அகப்பட்டவர்களினதும் அணுகுபவர்களினதும் உயிருக்கே உலை வைக்கும் வகையில் பொறியக்கூடியவையாக இருந்தன.

எல்லோர் கண்களும் முதலில் குழந்தைகள் காப்பகப் பகுதியையே தேடின. எந்தத் தளம் எங்கே நிற்கிறது எனத் தெரியாத நிலமை. சில

செய்திருந்தாள். இரவு வீடு சென்றதும்தான் குலுங்கிக் குலுங்கி அழுது சோகத்தைத் துடைத்திருக்கிறாள் மெலிஸ்ஸா.

இப்படி எத்தனையோ பேருக்கு உயிரும் மறுவாழ்வும் கொடுக்க மீட்புப்பணியாட்கள் பலர் அங்கே தம்மை மறந்தே பாடுபட்டுக் கொண்டிருந்தனர். எவருமே கடமைக்காகவோ — உழைப்புக்காகவோ — விடுப்புப் பார்க்கவோ—அங்கு கூடவில்லை. அடுத்த குண்டு வெடிக்கலாம் என்ற எச்சரிக்கையையும் மீறி அவர்கள் செயற்பட்டார்கள்.

சுங்கப் பகுதி அதிகாரியான போல் உடன் கடமையில் இருந்த உதவியாளரான பிரிசிலா தன்னை இடிமின்னல் தாக்குவதாக நினைத்தாள். அவள் நான்கு மாடிகள் கீழே விழுந்ததை அறியக்கூடிய நிலையில் இருக்கவும் இல்லை. அசைய முயன்றாள்; முடியவில்லை. நினைவு இருந்தாலும் கண்கள் இருண்டு கொண்டன. அந்தரமான கனவு நிலைதான். தெரிந்தது.


தலையில் உலகையே வைத்து அழுத்தியது போன்ற சுமை தெரிந்தது. வாய் மண்ணாலும் தூசியாலும் நிரம்பி விட்டது. துப்ப முயன்றும் முடியவில்லை. தாடைகளை

(X ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சொற்சிலம்பம்

## புதிர்ப் போட்டி இல. 45



சொற்சிலம்பம் இல. 45
சஞ்சீவி,
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

பெயர்: ..............................................
விலாசம்: ..............................................
..............................................

.................... இங்கே வெட்டுக ....................

முடிவு திகதி; 17 — 04 — 1998

**இடமிருந்து வலம்**

1. பதினெண் புராணங்களுள் ஒன்று. 5. மிகப் பெரிய. 7. ஒரு பாம்பு வகை. 8. புடைவைகளில் சிறந்த வகை இது. 9. பாதம். 10. மரத்தின் பாகங்களுள் ஒன்று. 11. சில அல்ல; அதற்கு அதிகம். 12. முதுகு அல்லது பின்புற இடுப்பை இப்படிச் சொல்வர். 13. பதில். 14. இன்பத்தின் முதல் படி. 16. வாயில் அரைக்கும் தொழிலைச் செய்வது. 17. கையினால் அளக்கப்படும் ஓர் அளவு. 19. வெவ்வேறானவற்றைச் சேர்த்தல். 21. நவீனம். 23. மண்துகள் பறப்பதை இப்படிச் சொல்வர். 24. தலையில் எழுதப்பட்டது.

**மேலிருந்து கீழ்**

1. பாவம் செய்தவன். 2. கீர்த்தி பெற்ற சோழ மன்னன். 3. கழனி. 4. சுயநலத்தின் ஆரம்பம் இந்தச் சொல். 5. பன்றித்தலைச்சி அம்மன்கோவில் இருப்பது இங்கே. 6. அடவி. 8. இசைப்பாட்டு வகை. 10. நில். 11. தட்டுப்பாட்டை ஏற்படுத்த வியாபாரிகள் செய்வது. 12. எங்களைக் குறிப்பிடுவது இப்படி. 15. அச்சுக்குக்கொண்டு வருவது. 16. ஒருவரின் சுபாவத்தை இப்படிக் கூறுவர். 18. இன்று யாவரும் வேண்டுவது. 20. ஓரறிவு உயிர். 22. இரண்டு.

**சொற்சிலம்பம் 43 — முடிவுகள்**

**இடமிருந்து வலம்**

1. கோமேதகம். 5. மேவி. 7. பல்லவி. 8. இன்னா. 9. வறுமை. 11. பாரதி. 13. சகாதேவன். 15. சனி. 16. கன்று. 17. முகம் 18. தவளை. 20. மது. 22. மல்லி. 23. குதிரை.

**மேலிருந்து கீழ்**

1. கோபம். 2. மேல். 3. தலம். 4. கவி. 5. மேன்மை. 6. வினா. 8. இறுதி. 9. வரன்முறை. 10. மகான். 11. பாவ. 12. மேனி. 13. சகடை. 14. தேறுதல். 15. சம்மதி. 19. வலி. 21. துரை.

பல நூற்றுக்கணக்கான வாசக நேயர்கள் இப்போட்டியில் ஆர்வத்துடன் பங்குபற்றி சரியான விடைகளை எழுதி அனுப்பியுள்ளனர். அவர்களில் அதிர்ஷ்டச் சீட்டிழுப்பு மூலம் தெரிவு செய்யப்பட்ட முதல் மூன்று அதிர்ஷ்டசாலிகளின் விவரம் வருமாறு:-

★ **முதற்பரிசு:** செ. மயூரதாசன், 60, இராமநாதன் வீதி, நாயன்மார்கட்டு.

★ **இரண்டாம் பரிசு:** தி. மயூரகிரி, சீ. சீ. த. க. பாடசாலை, நீர்வேலி.

★ **மூன்றாம் பரிசு:** நிதர்ஷினி மரியதாஸ், 111, நாலாம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.

இவர்கள் மூவருக்கும், சரியான விடைகளை எழுதிய ஏனைய சகல வாசக நேயர்களுக்கும் எமது பாராட்டுக்கள்.

புதிர்ப் போட்டிக்கு விடைகளை அனுப்பும்போது கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் போட்டியின் இலக்கத்தைத் தவறாமல் குறிப்பிடவும்.

சரியான விடைகளை அனுப்பியவர்களில் மூன்று பேர் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்பட்டு பரிசுகள் வழங்கப்படும். கடிதம் கிடைத்தவுடன் நேரில் வந்து பணத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது. உதயன்/சஞ்சீவி ஊழியர்கள், அவர்களது குடும்ப உறுப்பினர்கள் போட்டியில் கலந்து கொள்ள முடியாது.

முதற் பரிசு:- ரூபா. 150. 00
இரண்டாம் பரிசு:- ரூபா. 100. 00
மூன்றாம் பரிசு:- ரூபா. 50. 00

★ புதிர்ப்போட்டி இலக்கம் 44 இன் முடிவுகள் அடுத்த வார சஞ்சீவியில் வெளிவரும்.

# குறள் வெள்ளம்

ஆசையை அடக்கி வாழப் பழகிவிட்டால் வாழ்வில் தோன்றும் சிக்கல்கள் பெரும்பாலும் ஓடி மறைந்துவிடும். இருப்பதைப் பார்த்து திருப்திப்படப் பழகிக்கொண்டால் ஏதும் இல்லாத கவலை இருக்காது.

கும்பிடக் கோயிலுக்குப் போக வேண்டும் என்ற ஆசையே பல இடங்களில் சிக்கலாக விரிவடைந்து விடுகிறது. தெய்வ பக்தியே பலருக்கு குடும்ப வாழ்வைச் சிதைக்கும் அளவுக்கு கவனத்தைத் திசை திருப்பிவிடுகிறது.

பலருக்கு பக்தி வரும். சிலவேளை தூர இருக்கும் கோயில்களைத்தேடி யாத்திரைக்கு அடம்பிடிக்கும் அளவுக்குப் பக்தி வளர்ந்துவிடும். கோவிலுக்கு போவதென்றால்கூட எத்தனை சிக்கல்கள். வீட்டில் தொட்டது விட்டது போட்டதுபோட்டபடி இருக்கக் கோவிலை நோக்கிய ஓட்டம்.

போகும்போது அடுத்தவருக்கு சளைக்காமல் உடுத்தி நகைநட்டுச் சாத்தி போட்டியுடன் போக வேண்டியதேவை. இப்படி நினைப்பதெல்லாம் நிறைவேறாதபோது வீடே போர்க்களம் ஆகி விடுதலும் உண்டு.

இப்படியெல்லாம் தெய்வம் தொழப் போனால் வீட்டில் மதிப்பு இருக்காது. பெற்ற பிள்ளைகளிடமே சொல்லும் சொல்லு எடுபடாது. அப்படி இருக்க உலகமா மதிக்கும்?

தெய்வத்தைநினைக்க நேரமின்றிக் குடும்பமே கோவிலாக பாடுபடும் பெண்கள் கணவனதும் பிள்ளைகளினதும் ஏன் ஏனையோரதும் மனதில் இடம்பிடித்துவிடுகிறார்கள். வாழ்க்கை சீராக ஓடுகிறது; அவளைச் சமூகம் மதிக்கிறது. அவள் பேச்சு உலகினிலேயே எடுபடும். அவள் சொல் பலிக்கும்என்பதை உணர்த்தவே அவள் பெய் என்றால் மழையும் கூட பெய்யும் என்றார் வள்ளுவர்.

அவள் பிறதெய்வங்களைத் தொழாள். குடும்பக் கோயிலிலே கணவனைத் தெய்வமாக காண்பாள். பணிவிடையே தொழுகை என நினைப்பாள்.

தெய்வம் தொழாஅள் கொழுநன்
தொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை.
—0055.

(வாழ்க்கைத் துணை நலம்.)
—அம்பிகைபாகன்—

# இந்த வார இராசி பலன்

## [11 - 04 - 1998 முதல் 17 - 04 - 1998 வரை]

| | | | |
|---|---|---|---|
| புத சனி | *சூ செ | | |
| வி வெ கே | இராசிச் சக்கரம் | | |
| | | | ரா |
| | | | சந் |

மாற்றம்

அத்தம் நட்சத்திரம் கன்னி இராசியில் 11-04-98இல் மாறி நிற்கும்.

(தொழில் என்பதை கல்வி என்று மாணவர்கள் மாற்றி வாசிக்கவும்.)

இலங்கை, இந்திய நாடுகளில் ஒருவித அரசியல் தளம்பல் நிலை இருக்கும். அரசியல் தலைவர்களுக்கு அடிக்கடி தடுமாற்றமும், அபிப்பிராய பேதமும் கொடுக்கும். இந்திய அரசியலில் தலைவர்கள் ஒருவரை ஒருவர் தாக்குவார்கள். ஆங்காங்கே குண்டுகள் வெடிக்கப்பலன்கள் உண்டு. தீவிரவாதப் போக்குடையவர்களின் கை இந்திய அரசியலில் அதிகரிக்கும். அமெரிக்க அரசில் அபிப்பிராய பேதம் ஜனாதிபதிக்கும் பிறருக்கும் ஏற்படும். மத்திய கிழக்கு நாடுகளில் யுத்த பயம்—கிழக்கு நாடுகளில் வரட்சி நிலை ஏற்படும் பலன்கள் காணப்படுகின்றன.

**மேடம்:** நீங்கள் மனத்தைரியமாக இருக்கவேண்டிய காலமாகும். பாசத்தில், நேசத்தில் கூடி உறவாடியவருக்கு வேதனை — சோதனை ஏற்பட்டு மனம் கலங்குவீர்கள். தொழில் ஸ்தானத்தில் கூடி இருந்தவர்கள் அலட்சியமாக இருப்பார்கள். பொருள் செலவு, அலைச்சல், மனக் கவலை என மாறி மாறி ஏற்பட்டாலும் உறுதியுடன் இருக்கவும். வாழ்க்கை என்பது மேடு பள்ளம் நிறைந்ததுதானே. இறையருள் கருணையும், பெரியவர்களின் அன்பும் என்றும் இருக்கும். அடிக்கடி கோபம் கொள்ளாதீர்கள். காணி பூமிப் பிரச்சினை ஒன்றுண்டு. நிதானமாகச் செயற்படவும். வழக்கு, கணக்கால் வேதனைதான் ஏற்படும். உஷ்ணபீடைகள், எலும்புநோ, சளித் தொல்லை, கைகால் உளைவு [illegible] தியம் செய்யவும்.

★ அதிர்ஷ்ட நாள்: புதன், வெள்ளி.

**இடபம்:** உங்கள் தந்தைவழியினருக்கு நல்லதல்ல. இடமாற்றங்கள் சகஜம். பக்கத்தில் இருப்பவர்களால் தொல்லைகள் உண்டு. எதிர்ப்பாலாருடன் நிதானமாகநடந்து கொள்ளுங்கள். தொழில் ஸ்தானத்தில் ஏட்டிக்குப் போட்டி மலிந்திருக்கும். இடாம்பீகப் பொருள் செலவுகள், காணிபூமிச் செலவுகள் ஏற்படும். சகோதரர்களால் உதவிகள், மாற்றங்கள் ஏற்படும். காலில் காயம் ஏற்படலாம். கவனமாக இருக்கவும். எதிர்ப்பாலாரின் சொத்துவழித் தொல்லை ஏற்படும். இரத்தநோய், இளைப்பு, சளி என்பனவரஇடமுண்டு. வைத்தியர் உதவியால் வருத்தம் குறையலாம்.

★ அதிர்ஷ்ட நாள்: புதன்.

**மிதுனம்:** உங்களுக்கு செல்வாக்கும்சொல்வாக்கும் அதிகரிக்கும். காலமறிந்து செயற்பட்டு நற்பலன்கள் அடைவீர்கள். தொழில் ஸ்தானத்தில் பெரியவர்கள், மேலதிகாரிகள் உதவுவார்கள். ஓடி ஓடித்திரியும் உங்களுக்கு ஓரிடத்தில் இருக்கப்பிடிக்காதே? காசு வரும் போகும் என்றபோக்கிருக்கும். கவனமாக இருந்தால் நாலுகாசு தேறும். பொருள் வழித்தடுமாற்றம். நண்பர்களை நம்பமுடியாது. கூடிப் பேசித்திரிந்தவர்கள் குறி வைத்து ஈட்டி எறியும் காலமாகும். எதிலும் நிதனமாக இருக்கவும். இடுப்புவலி, இருதயநோய், நரம்புவலி, வாய்வுவியாதி என்று அடிக்கடி சொல்லிக் கொண்டிருப்பீர்கள். ஆலயங்களுக்குப் போய் வருவதனால் சற்று ஆறுதல் ஏற்படும்.

★ அதிர்ஷ்ட நாள்: திங்கள்.

**கடகம்:** எந்த விஷயங்களையும் நிதானித்து அறிந்து கொள்ளும் உங்களுக்கு கொஞ்சம் அவசரப்புத்தி. எந்த விஷயத்திலும் இரண்டு மனம் கொண்டு, காலை ஓர் எண்ணம் மாலை மறு சிந்தனை கொண்டு இருப்பீர்கள். தொழில் ஸ்தானத்தில் நன்மை, தீமை கலந்த பலன்கள் கொடுக்கும். எதிர்ப்பாலாருக்கு உடல்நிலைக்கு நல்லதல்ல. ஆலயத்திற்கு அல்லது ஆஸ்பத்திரிக்கு அடிக்கடி அலைவீர்கள். தாய்வழியில் கொஞ்சம் செலவுதான்; சமாளித்துக் கொள்ளுவீர்கள். கைவிறைப்பு, கால் பிடிப்பு, கழுத்து உளைவு, கண்கலக்கம் எனச் சில வருத்தங்கள் உண்டு. வைத்தியம் செய்யச் சுகம் கொடுக்கும். கலங்க வேண்டாம்.

★ அதிர்ஷ்ட நாள்: புதன்.

**சிங்கம்:** உங்களுக்கு கலக்கமான காலம். வீட்டில் பாதிக் காலம், நாட்டில் பாதிக் காலம் எனக் கழியும். விதி

மகாதேவா ஜோதிடம்
140, செல்லர்வீதி,
கல்வியங்காடு.

சதி செய்யும். வேதனை உண்டு. பொறுமை மிக முக்கியமாகும். தொழில் ஸ்தானத்தில் புதிய திட்டங்கள் உருவாகும். மேலதிகாரிகளின் உதவிகள் கிடைக்கும். எதிர்ப்பாலார் உதவி செய்வார்கள். எதையும் தைரியத்துடன் தாங்கிச் செயற்படுத்தும் திறன் உடைய நீங்கள் சமாளித்துக் கொள்ளுவீர்கள். இடமாற்றங்கள் சகஜமாகும். முதுகுவலி, வரட்சியால் உஷ்ணபீடைகள், உள் அவயவநோ, மர்ம உறுப்புக்கள் வீக்கம் அல்லது நோ, இருதயநோய்கள் என்பன கொடுக்கலாம். வைத்தியம் செய்யவும்.

★ அதிர்ஷ்டநாள்: வெள்ளி

**கன்னி:** இக்காலத்தில் விசேடமாக எதிர்ப்பாலாருடன் வாக்குவாதப்படும் சந்தர்ப்பங்கள் ஏற்படும். விட்டுக் கொடுப்பதனால் பல பிரச்சனைகளைச் சமாதானமாகத் தீர்க்கலாம் அல்லவா? தொழில் ஸ்தானத்தில் காலத்தை வீணாக்காதீர்கள். காசு இலேசில் சேருமா? எம்மிடமிருந்து பிறருக்கு இலாபம் போகின்றதா என்று தான் பார்க்கிறார்கள். நாமும் மற்றவர்கள் நன்மை அடையச் செய்வதுடன் நாமும் நன்மை அடைய வேண்டும். அதனால் தான் எல்லோருக்கும் சிறப்பு ஏற்படும். சளி, விறைப்பு, வாதம், கைகால்நோ என்பன அடிக்கடி வருத்தலாம். உணவு விஷயத்தில் அளவுடன் இருந்தால் நன்று. குல தெய்வ வழிபாடு செய்து வரவும்.

★ அதிர்ஷ்ட நாள்: திங்கள், புதன்.

**துலாம்:** உலகியலில் ஓய்வில்லாமல் ஓடியாடித் திரிந்து செயற்பட்டபடி இருப்பீர்கள். அமைதியாக இருந்து பிறருக்கு உதவியபடி இருப்பீர்

(XII ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தி. மு. க. பற்றிய முரண்பாடான அறிக்கைகள்

# ஜெயினின் நம்பகத் தன்மைக்குச் சவால்!

## ராஜீவ் கொலையில் சி. ஐ. ஏ யின் பங்கு குறித்து புதிதாகத் தகவல்கள்

ஜெயின் கமிஷனின் இறுதி அறிக்கை மார்ச் இறுதியில் மத்திய அரசிடம் சமர்ப்பிக்கப்பட்டு விட்டது.

இந்த அறிக்கை 1, 800 பக்கங்கள் கொண்டது. நான்கு தொகுப்புகளாக வெளியிடப்பட்டுள்ளது.

### வெளியாக முன் கசிந்த அறிக்கை

மத்திய அரசு அறிக்கையை இன்னும் வெளியிடவில்லை. ஆனால் இடைக்கால அறிக்கையைப் போன்று இறுதி அறிக்கையும் வெளியிடப்பட முன்னரே கசியத் தொடங்கி விட்டது.



கருணாநிதி

இடைக்கால அறிக்கையில் ராஜீவ் கொலையுடன் தி. மு. க. வுக்கும் அதன் தலைவர் மு. கருணாநிதிக்கும் இருந்த தொடர்புகள் குறித்து பிரஸ்தாபிக்கப்பட்டிருந்தது. இந்திய அரசியலையே அது ஓர் உலுக்கு உலுக்கியது.

இடைக்கால அறிக்கையை வைத்தே மத்தியில் இருந்த ஐக்கிய முன்னணி அரசை காங்கிரஸ் கட்சி கவிழ்த்தது. இறுதி அறிக்கை வெளிவரும் வரை அது காத்திருக்கவில்லை.

எனினும் எந்தப் பிரச்சினையை வைத்து ஐக்கிய முன்னணி அரசை காங்கிரஸ் கவிழ்த்ததோ அந்தப் பிரச்சினையை தேர்தல் பிரசாரத்துக்கு காங்கிரஸ் பயன்படுத்தாதபோது காங்கிரஸின் உள்நோக்கம் தெரியவந்தது. அதாவது தனது அரசியல் நோக்கத்தை அடைவதற்கே ஜெயின் கமிஷனின் இடைக்கால அறிக்கையை காங்கிரஸ் ஒரு கருவியாகப் பயன்படுத்தி இருந்தது.

பொதுத் தேர்தலின் பின்னர் தி. மு. க. உள்ளடங்கிய ஐக்கிய முன்னணியுடன் இணைந்து கூட்டாட்சி ஏற்படுத்தக்கூடிய சாத்தியக்கூறுகள் அப்போதைய சூழ்நிலையில் காங்கிரஸுக்கு இருந்தது. இதனாலேயே தேர்தல் பிரசாரத்தின் போது இந்த விவகாரத்தை காங்கிரஸ் கிளப்பாது விட்டிருக்கலாம்என்று ஊகிக்கப்படுகிறது

தேர்தல் முடிந்த பின்னர் தி. மு. க. உள்ளடங்கிய ஐக்கிய முன்னணியுடன் காங்கிரஸ் கட்சி கூட்டுச் சேரத் தயார் என்ற ரீதியில் காங்கிரஸ் தலைவர்கள் வெளியிட்ட கருத்துக்கள் இதனை ஊர்ஜிதம் செய்கின்றன.

எனினும் ஐக்கிய முன்னணியின் பிரதான கட்சிகளில் ஒன்றான தெலுங்கு தேசம் கட்சியின் தலைவர் சந்திரபாபு நாயுடு எடுத்த எதிர்பாராத முடிவு காரணமாக மத்தியில் காங்கிரஸ்— ஐக்கிய முன்னணி கூட்டாட்சி சாத்தியமற்றதாகிப் போய் விட்டது.

தமிழ்நாட்டில் தி. மு. க. அரசை கலைக்கப்போவதில்லை என்று சமீபத்தில் பிரதமர் வாஜ்பாய் தெரிவித்ததுக்கு சந்திரபாபு நாயுடுவும் ஒரு காரணம் என்று நம்பப்படுகிறது. தி. மு. க. அரசைக் கலைப்பதைத் தாம் எதிர்ப்பதாக நாயுடு தெரிவித்திருந்தார். மற்றும் ஜெயின் கமிஷனின் இறுதி அறிக்கையை மனதில்கொண்டும்வாஜ்பாய் இந்த கருத்தை வெளியிட்டிருக்கலாம்.

### குற்றச்சாட்டுக்கு உள்ளாகி இருக்கும் ஜெயின்

ராஜீவ் கொலை பற்றிய பின்னணிகளை கண்டறிவதற்காக புதுடில்லியின் முன்னாள் மேல் நீதிமன்ற பிரதம நீதியரசர் மிலாப் சாண்ட் ஜெயின் (Miļap Chand Jain) நரசிம்மராவ் அரசினால் நியமிக்கப்பட்டிருந்தார்.

அரசியல் நோக்கம் கொண்டு அவசரம் அவசரமாக இடைக்கால அறிக்கையை வெளியிட்டதாக தற்பொழுது நீதியரசர் ஜெயின் மீது குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன.

தனது அரசியல் எதிரிகளைப் பழி வாங்குவதற்காக நீதியரசர் ஜெயினை சோனியாகாந்தி கருவியாகப் பயன்படுத்தி இருந்தார் என்றும் குற்றச் சாட்டுக்கள் எழுந்துள்ளன.

இடைக்கால அறிக்கைக்கும் இறுதி அறிக்கைக்கும் இடையில் இருந்துவரும் முரண்பாடுகள் இந்த குற்றச் சாட்டுக்களை நியாயப்படுத்துகின்றன என்று கூறப்படுகிறது.




### ஒன்றுக்கொன்று முரணான தகவல்கள்

ராஜீவ் கொலைக்கும் தி. மு. க. தலைவர் கருணாநிதிக்கும் தொடர்பு இருந்ததாக ஜெயின் கமிஷனின் இடைக்கால அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

ஆனால் தற்பொழுது இன்னும் வெளியிடப்படாதநிலையில் கசிய விடப்பட்டுள்ள இறுதி அறிக்கையில் ராஜீவ் கொலைச் சதி பற்றி கருணாநிதிக்கு முன்னரே தெரியும் என்று முன்னாள் முதல்வர் ஜெயலலிதா கூறிய குற்றச் சாட்டுக்களுக்கு ஆதாரம் இல்லைஎன்று தெரிவிக்கப்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

இந்த இறுதி அறிக்கையில் மற்றொரு விடயம் தற்பொழுது இந்திய அரசியலில் பரபரப்பை ஏற்படுத்தி வருகிறது. ராஜீவ் கொலைக்கும் அமெரிக்க உளவு நிறுவனமான சி. ஐ, ஏக்கும் இடையிலான தொடர்புகள் பற்றியது அது.

### தி. மு. கவை குற்றஞ் சாட்ட ஆதாரம் இல்லை

ராஜீவ் கொலை செய்யப்பட்ட 1991மே 21ஆம் திகதி ஸ்ரீபெரும்புதூரில் தாம் பங்கேற்கவிருந்த தி. மு. க. கூட்டத்தை கருணாநிதி ரத்துச் செய்தார்.

தி. மு. க. தொண்டர்கள் ஸ்ரீபெரும்புதூர் செல்வதை தவிர்க்க வேண்டும் என்றும் அதற்கு முதல் நாளான 20ஆம் திகதி ஸ்ரீபெரும்புதூரில் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருந்தன.

கருணாநிதியின் மகன் ஸ்ராலின் இந்த சுவரொட்டிகளை ஒட்டியதுக்கான ஆதாரம் எதுவும் கிடையாது என்று ஜெயின் கமிஷனின் இறுதி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

தி. மு. க. பிரமுகர் சுப்புலட்சுமி ஜெகதீசனுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான தொடர்புகளுக்கும் போதிய ஆதாரம் கிடையாது என்றும் —

அது குறித்து மேல் விசாரணை தேவை என்றும் — அறிக்கை தெரிவிக்கிறது,

சுப்புலட்சுமி ஜெகதீசன் தனது பண்ணை வீட்டில் விடுதலைப் புலிகளுக்கு அடைக்கலம் கொடுத்திருந்தார். பத்மநாபா கொலையில் தேடப்பட்ட சிவராசன் தப்பிச் செல்வதற்கு உதவி செய்தார் என்றும்குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டிருந்தன.

பத்மநாபா கொலை வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டிருந்த சுப்புலட்சுமி ஜெகதீசனை தடா நீதிமன்றம் ஏற்கனவே விடுதலை செய்து விட்டது.

### திராவிடக் கழகம் மீது குற்றச்சாட்டு

ஆனால் திராவிடக்கழகத்தைச் சேர்ந்த பதினொரு பேரின் ஒத்துழைப்பு இன்றி ராஜீவ் கொலையை எவரும் செய்திருக்க முடியாது என்று கமிஷனின் இறுதி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாக கூறப்படுகிறது.

ராஜீவைக் கொலை செய்தவர்கள் நவீன வயர்லஸ் கருவிகளை அமைக்கவும் அவர்கள் பாதுகாப்பான இடங்களில் தங்கவும் திராவிடர் கழகத்தைச் சேர்ந்தவர்கள் உதவியதாகவும் —

கொலையாளிகள் கர்நாடகம் சென்றபோது அவர்களுக்கு உதவி செய்ய 300 திராவிடர் கழக உறுப்பினர்கள் கர்நாடகம் சென்றதாகவும் இறுதி அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

[illegible] டோருக்கு ஏழு ஜீப்புகளை வாங்க திராவிடர் கழக உறுப்பினர்கள் உதவி செய்ததாகவும் குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

### சி. ஐ. ஏ யின் பங்கு

ராஜீவ் கொலைக்குற்றச் சாட்டில் இருந்து தி.மு.க வும் அதன் தலைவர் கருணாநிதியும் விடுபட்டதை விட இக்கொலையில் சி. ஐ.ஏயின் தொடர்பு குறித்து பிரஸ்தாபிக்கப்பட்டிருப்பதே இந்திய அரசியலில் பரபரப்பை ஏற்படுத்தி வருவதாகக் கூறப்படுகிறது.

ராஜீவ் கொலையில் சி.ஐ ஏ. யின் தொடர்பு இருக்கலாம் ஆனால் அதனை திட்டவட்டமாக உறுதிப்படுத்த முடியவில்லை என்று இறுதி அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

### குமாரபத்மநாபா சூத்திரதாரி

விடுதலைப் புலிகளுக்கு ஆயுதம் வாங்கும் குமார பத்மநாபா என்பவர் ராஜீவ் கொலைச் சதியில் முக்கிய பங்கு வகித்தார் என்றும் —

சி. ஐ. ஏ யின் கட்டுப்பாட்டில் இயங்கி வந்த 'கார்டல்' ஆயுத ஏஜென்ஸியுடன் குமார பத்மநாபாவுக்கு தொடர்புஇருந்ததுஎன்றும்—

ராஜீவ் கொலைக்கு முன்னர் இந்த ஏஜென்ஸியுடன் குமார பத்பநாபா புலிகளுக்கான ஆயுதக் கொள்வனவு குறித்து பேரம் பேசினார் என்றும் — கூறப்படுகிறது.

குமார பத்மநாபாவும் விடுதலைப் புலிகள் தலைவர் வே. பிரபாகரனும் வயர்லஸ் மற்றும் தொலைத் தொடர்புகள் மூலம் செய்து கொண்ட தகவல் பரிமாற்றங்களை இந்திய உளவு நிறுவனமான "றோ" இடைமறித்து ஒற்றுக் கேட்டதன் அடிப்படையில் இந்த முடிவுக்கு வந்ததாகவும் கூறப்படுகிறது.

"நமக்குள் ஒப்பந்தம் ஏற்பட்டுள்ளது.", "அவர்களை நான் அமெரிக்காவில் சந்திக்க வேண்டும்.", "அவர்கள் திருகோணமலை விடயத்தில் அக்கறையாக இருக்கிறார்கள்.", "நமக்கு ஆயுதங்கள் தேவைப்படுகின்றன.", "அங்கு சென்று அவர்களுடன் பேரம் பேச வேண்டும்" என்பன குமார பத்மநாபாவுக்கும் விடுதலைப் புலிகள் தலைவருக்கும் இடையிலான தகவல் பரிமாற்றங்களின் போது தெரிவிக்கப்பட்டவை என்று 'றோ'

**உலக உலா**

என்.பி.சீலன்

தெரிவித்துள்ளது.

இதனை அடிப்படையாக வைத்து விடுதலைப் புலிகள் ஏற்படுத்திக் கொண்ட சர்வதேச சதி என்று ஜெயின் கமிஷன் இதனைக் குறிப்பிட்டுள்ளது என்றும் கூறப்படுகிறது.

### திருமலை குறித்து அமெரிக்கா கொண்ட அக்கறை

திருகோணமலையை ஈழத்தின் ஒரு பகுதியாக ஆக்க வேண்டும். அதனை சிங்கப்பூர் போன்று மாற்றிக்காட்ட வேண்டும் என்று அவர்கள் உறுதி அளிக்கிறார்கள் என்று குமார பத்மநாபா விடம் கிட்டு தெரிவித்துள்ளார் என்றும் இறுதி அறிக்கை தெரிவிக்கிறது.

இராணுவ ரீதியில் திருகோணமலைப் பகுதி கேந்திர முக்கியம் வாய்ந்த இடம் என்பதால் அமெரிக்கா அதற்கு முக்கியத்துவம் அளிக்கிறது. அங்கு அமெரிக்கா கால் ஊன்றுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து, முன்னாள் பிரதமர் நரசிம்மராவ் மற்றும் எஸ். பி. சவான் ஆகியோர் இலங்கையுடன்



ஜெயின்

பேசி உள்ளனர். இலங்கையில் அமெரிக்க ஆதிக்கம் ஏற்பட ராஜீவ் தடையாக இருந்தார். இது அமெரிக்காவுக்கு ஆத்திரத்தை ஏற்படுத்தியது. 1990இல் குமார பத்மநாபா கோலாலம்பூரில் இருந்து சென்னையில் உள்ள விடுதலைப்புலிகள் ஏஜண்ட்டுகளுடன் பேசி இருந்தார். இந்தியாவில் ஒருதலைவரைக் கொல்ல வேண்டும் அதன் மூலம் அவர்கள் தலையீட்டை தடுக்கமுடியும் என்று குமார பத்மநாபா கூறி இருந்தார். இவை எல்லாம் முன் கூட்டியே திட்டமிடப்பட்டு ராஜீவ் கொலை செய்யப்பட்டார் என்பதற்கு ஆதாரங்கள் என்றும் கமிஷனின் அறிக்கையில் தெரிவிக்கப் பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

சர்வதேச பேரத்தின் அடிப்படையில், ராஜீவ் கொலை செய்யப்படுவதற்கு ஒரு மாதத்திற்குமுன்பும் கொலை செய்யப்பட்டு இரண்டுமாதங்கள் கழித்தும் விடுதலைப் புலிகளுக்கு ஏராளமான ஆயுதங்கள் கிடைத்துள்ளன.

### நேட்டோவின்கைக்குண்டு

ராஜீவ் கொலை செய்யப்பட்ட சமயம் கைக் குண்டும் பயன்படுத்தப்பட்டுள்ளது. இந்த முக்கியமான தடய அறிவியல் ஆதாரத்தை நரசிம்மராவ் அரசு ஆராயத் தவறிவிட்டது. இந்த கைக் குண்டு 'நேட்டோ' அமைப்பின் தயாரிப்பு.

கொலை நடந்த இடத்தில் இருந்து டி. என். டி. வெடி மருந்துப் பொருள் பற்றிய இஸ்ரேலின் தடய அறிவியல் துறை நிபுணர்களின் ஆய்வைப் பெற நரசிம்மராவ் அரசு தவறிவிட்டது. இப்படி ஜெயின் கமிஷனின் இறுதி அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப் படுகிறது.

ஜெயின் கமிஷனின் இறுதி அறிக்கையை மத்திய அரசு வெளியிடும் போது வெளிவராத இன்னும் பல விடயங்கள் அம்பலமாகும்.

என்றுஇந்தியஅரசியல் வட்டாரங்களில் பேச்சுசடிபடுகிறது.

ராஜீவ் கொலையுடன் தி. மு. க. வுக்குள்ள தொடர்புகள் குறித்து ஜெயின் கமிஷன் இடைக்கால அறிக்கையில் ஒன்றும் இறுதி அறிக்கையில் வேறொன்றும் தெரிவிக்கப் பட்டிருப்பது. நீதியரசர் ஜெயின் மீதான நம்பகத் தன்மையை கேள்விக்குறி ஆக்கிவிட்டது. ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org